# மன்னா

# மடுத் திருத்தலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்ற அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா

***வருகின்ற மாதம் செப்ரெம்பர் 08ஆம் திகதி அன்னையின் பிறப்பு விழாவின் பொழுது இலங்கை நாட்டை அன்னைக்கு ஒப்புக்கொடுக்க மன்னார் ஆயர் விசேட வேண்டுகோள்.***

மருதமடுத் தாயாரின் விண்ணேற்பு ஆவணித்திருவிழா மடுத் திருத்தலத்தில் ஏராளமான பக்தர்கள் மத்தியில் முப்படைகளின் பலத்த பாதுகாப்போடு மிகச்சிறப்பாக அமைதியான முறையில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்கள், துறவறத்தார், பொதுநிலையினர், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பணியாளர்கள், மடுத்திருப்பதியின் பணியாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும், இத்திருவிழா அர்த்தம் நிறைந்த ஒன்றாக அமைய மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

(மன்னார் மறைமாவட்ட ஆயரின் ஆவணித் திருவிழாவின் முழுமையான மறையுரையையும் திருவிழாவின் சில பதிவுகளையும் பத்திரிகையின் நான்காம் பக்கத்தில் காணலாம்) 13











# பெரியகட்டு கோடி அற்புதர்

## புனித அந்தோனியார் திருத்தலத்திருவிழா





மன்னார் மறைமாவட்டத்தின் பழமை வாய்ந்த திருத்தலங்களில் ஒன்றான வவுனியா பெரியகட்டு கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் திருத்தலமும் மிகச் சிறப்புமிக்கதாகும். இத்திருத்தலத்தின் திருவிழா என்றும் இல்லாதவாறு பெருந் திரளான மக்கள் புடைசூழ கடந்த 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. இத்திருவிழாவின் பொழுது மறையுரையாற்றிய மறையுரைஞர் அருட்பணி. போல் நட்சத்திரம் அமதி அடிகளார் புதுப்பித்தல் மறைமாவட்டத்தின் அனைத்து நிலையிலும் இடம்பெறவேண்டும், அதையே அற்புதர் புனித அந்தோனியாரும் தம் பக்தர்களிடம் எதிர்பார்க்கின்றார் எனவும் புதுப்பித்தல் இடம் பெறுகின்றபொழுது புதுமைகள் அதிலிருந்து வெளிப்படும் என்ற மையப்பொருளை இறைவார்த்தைப் பகிர்வுகளாக பதிவு செய்தார். மறைமாவட்டத்தின் இத்திருத்தலத் திருவிழாவை செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை அடிகளார் அயல் பங்குகளின் ஒத்துழைப்போடும் செட்டிகுளம்பங்கு அருட்பணிப் பேரவையின் ஆதரவோடும் திருவிழா ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தார். இத் திருவிழாவில் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்கள், அருட்சகோதர சகோதரிகள் ஏராளமான இறைமக்கள் அனைவரும் புனிதரின் ஆசீர் பெற்றுச் சென்றனர்.





# காத்தாங்குளம் புனித சூசையப்பர்

## ஆலய அபிஷேக விழா





மன்னார் மறைமாவட்டத்தின் மடு மறைக்கோட்டத்தில் காத்தாங்குளம் புனித சூசையப்பர் புதிய ஆலயத்திற்கான வேலைகள் முன்னைநாள் பங்குத்தந்தை அருட்பணி வசந்தகுமார் அடிகளாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி. அமல்ராஜ் குரூஸ் அடிகளார் இவ்வாலயத்தை மிக அழகான முறையில் அமைத்திருக்கின்றார். 13

# தரணிக்குளம் கோதண்ட நொச்சிக்குளம் புனித சதாசகாயமாதா ஆலய நேர்ந்தளிப்பு

வவுனியா மறைக்கோட்டத்தில் தரணிக்குளப் பங்கின் கோதண்ட நொச்சிக்குளம் துணை ஆலயமாகிய புனித சதா சகாயமாதா புதிய ஆலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதித்து இறைமக்களின் நாளாந்த வழிபாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 13



# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## மன்னார் மறைசாட்சியர் வரலாறு

இலங்கைத் திருஅவையில் மன்னார் திருஅவை சிறப்பான முக்கிய இடம் பெறுவதற்கு மன்னார் மறைசாட்சிகள் முதன்மையான காரணமாக அமைகின்றது. மன்னார் கிறிஸ்தவர்களின் ஆழமான வாழ்வியல் விசுவாசம், நீண்டகால வரலாறு கொண்ட கிறிஸ்தவ பாரம்பரியம், இறைஅச்சம், குருபக்தி, கிறிஸ்வ கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் இம்மக்களின் சாதாரண சமூக வாழ்வோடு இணைந்திருப்பது இன்றைய வரலாற்று உண்மை.

தொன்றுதொட்டு மன்னார் பகுதிகளில் கிறிஸ்தவ கிராமங்களில் ஆலயங்களே மையமாகவும் அவ் ஆலயங்களை மையப்படுத்திய கல்விநிலையங்களும், பாடசாலைகளும் முக்கிய இடம் பெற்றுவருகின்றன. மன்னார் மண்ணில் மறைசாட்சியத்தின் 475வது யூபிலி ஆண்டை நினைவுகூறுகின்ற பொழுது மன்னார் மறைசாட்சிகளின் வரலாற்றை ஆராய்வது முக்கியமாகும். அதிலே யாழ்ப்பாண அரசும் மன்னார் தீவும், அக்காலப் பகுதியில் தோட்டவெளி, பட்டி அதை அண்டிய மன்னார் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள், புனித சவேரியாரின் மறைப்பணி, விசுவாசத்திற்காக மறைசாட்சியம் அடைந்த 600ற்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள், மறைசாட்சியத்திற்கு முற்பட்ட, பிற்பட்ட காலப்பகுதிகளின் பாரம்பரிய கிறிஸ்தவ கலைவடிவங்கள், இன்றைய மன்னார் மக்களின் கிறிஸ்தவ வாழ்வியல் ஆகியவை சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

### யாழ்ப்பாண அரசும் மன்னார் தீவும்

இந்தியா கன்னியா குமரி முதல் இராமேஸ்வரம் ஊடாக மன்னார் வரையிலான கடற்கரை முத்துக்கடற்கரையாகும். இதன் நீளம் 280km இது மன்னார் வளைகுடா என அழைக்கப்படுகின்றது. 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மன்னார் யாழ்ப்பாண இராட்சியத்தின் கீழ் ஒரு பகுதியாக இருந்தது. சங்கிலியன் என அழைக்கப்பட்ட சேக இராஜசேகரன் என்ற அரசன் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்டு வந்தான். இவனுடைய காலப்பகுதியில் இராஜசிங்கம் மன்னார் பகுதியில் வாழ்ந்த மக்களின் தலைவனாக இருந்தான்.

### தோட்டவெளியும் அதை அண்டிய பகுதிகளும் அவற்றில் வாழ்ந்த மக்களும்

16ஆம் நூற்றாண்டில் மன்னார் தீவுப் பகுதிகளில் மீனவர்களாக அனேகர் வாழ்ந்து வந்தனர். ஒரு பகுதியினர் தென்னிந்தியா விலிருந்து குடியேறியவர்கள். இங்கு வாழ்ந்தவர்கள் மீனவர்களாகவும் முத்துக்குளிப்பவர்களாகவும், சுண்ணாம்பு சுடுபவர்களாகவும், சாயவேர் சேகரிப்பவர்களாகவும் இருந்தனர்.

### மன்னாரில் புனித சவேரியாரின் மறைபணி

இந்தியாவின் மணப்பாடு என்ற முத்து கடற்கரைப் பகுதியில் 1542 ஒக்ரோபர் மாதம் புனித சவேரியார் தனது மறைப்பணியை தொடங்கியபோது அப்பகுதியில் வாழ்ந்த பலதரப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மீனவ மக்களுக்கு திருமுழுக்கு வழங்கினார். இயற்கையாகவே மன்னார் பகுதியில் வாழ்ந்த மக்களும் இந்திய முத்துக்கடற்கரை பகுதிகளில் வாழ்ந்த மக்களும் மிகவும் தொடர்புபட்டவர்களாக இருந்தார்கள். தென்னிந்திய கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுடாக புனித சவேரியாரின் பரந்துபட்ட பணியார்வம், ஆழமான விசுவாசம், தனது மந்தையின் மேல் கொண்ட தந்தைக்குரிய இறைப்பாசம் போன்ற நற்கிறிஸ்தவ பண்புகளை அறிந்த மன்னார் மக்கள் புனித சவேரியார் மன்னார் தீவிற்கு வருகைதந்து அவர்மூலமாக திருமுழுக்குப் பெறவேண்டும் என விரும்பினார்கள். ஆகவே மன்னார் மக்கள் அங்கு சென்று திருமுழுக்கு வழங்கவருமாறு புனித சவேரியாரை கேட்டுக் கொண்டனர். அதன்படி புனித சவேரியார் 1544.08.21 அன்று மன்னாரில் வாழ்கின்ற மக்களுக்கு திருமுழுக்கு வழங்கும்படியும் ஏனைய கிறிஸ்தவர்களை சந்திக்கும் படியும் அருட்பணி. மணிஸ்லாஸ் (சே.ச) அடிகளாருக்கு கடிதம் எழுதினார். புனித சவேரியாரால் அனுப்பப்பட்ட இந்திய குருவானவர் 1544ஆம் ஆண்டு மன்னார் தீவின் பெருநகராக இருந்த தோட்டவெளி, பட்டி அதை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த 1000 பேருக்கு திருமுழுக்கு கொடுத்தார். மன்னார் மக்கள் திருமுழுக்குப் பெற்ற பொழுது மன்னார் தீவு கோவா மறைமாவட்டத்தின் கீழ் இருந்தது

### மன்னாரில் மறைசாட்சியம்

மன்னார் தீவில் கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களை கிறிஸ்தவ சமயத்தை மறுத்து இந்து சமயத்திற்கு வரும்படி யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் அழைப்பு விடுத்தபோதும் அம்மக்கள் கிறிஸ்தவ இறைவழிபாடுகளில் பங்குபற்றுவதையும் இரகசியமாக குருக்கள் இவர்களைச் சந்திப்பதையும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுவதையும் அறிந்த அரசன் தன் படைகளை மன்னார் தீவுக்கு அனுப்பி 600ற்கு மேற்பட்ட கிறிஸ்தவர்களை வாளால் வெட்டி கொன்று குவித்தான். 1545.01.27ஆம் திகதி புனித பிரான்சிஸ் சவேரியார் உரோமையிலுள்ள தன் நண்பருக்கு இவ்வாறு கடிதம் எழுதுகின்றார் "நாங்கள் வாழும் காலங்களில் புனிதர்களுக்கு குறைவில்லை, எங்களுடைய இறைவனை நன்றியுடன் போற்றுகின்றோம்" இதனடிப்படையில் மன்னார் தீவு "மறைசாட்சிகள் தீவு" என அழைக்கப்படுகின்றது. ●

*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

## எ. மோகன்ராஜ் நிசான் லண்டனில் குருவாக அருட்பொழிவு பெற்றார்.



யாழ். நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தைச் சேர்ந்த திரு.திருமதி. சந்தியோ எட்வேட் (காந்தி) சிசிலியம்மா (மலர்) தம்பதியினரின் மூத்த புதல்வன் எட்வேட் மோகன்ராஜ் நிசான் 20.07.2019 அன்று லண்டன் போர்ட்ஸ்மௌத் மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1976.01.16 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி முறையே நாவாந்துறை றோ.க, வட்டுக்கோட்டை கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றார். ➡ 15

## ம.து.ம.ச வின் சேவைகளை

### லண்டன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் பாராட்டியது



ஐக்கிய இராச்சியத்தில் வாழும் இலங்கைத் தழிழ் கத்தோலிக்க மக்கள் தமது தாய் நாட்டில் பற்றுக்கொண்டு தமது உழைப்பில், ஒரு சிறு பகுதியை தமிழ்க் கத்தோலிக்க ஒன்றியம் என்னும் ஸ்தாபனம் மூலம் பெற்றோரை இழந்த வறிய மாணவர்களுக்கான கல்விக்கு உதவி செய்வதில் பெருமையடைகின்றோம் எனத் தமிழ்க் கத்தோலிக்க ஒன்றியத்தலைவர் திரு. வின்செண்ட் ஞானப்பிரகாசம் கூறினார். மேற்படி நிகழ்வு கடந்த 22.06.2019ஆம் திகதி சனிக்கிழமை ம.து.ம.ச காரியாலயத்தில் நடைபெற்றது. ➡ 15

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### ஓகஸ்ட்

01. புனித இராயப்பர் திருவிழா - வஞ்சியன்குளம்
04. புனித அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு
05. மரியமாதா - மாளிகைத்திடல்
06. குழந்தை இயேசு - மூன்றாம்பிட்டி
 - மடுத்திருப்பதியின் திருவிழாவிற்கான நவநாள் ஆரம்பம்
 - புனித அந்தோனியார் திருவிழா - பள்ளக்கமம்
10. புனித லோறன்ஸ் திருவிழா - தலைமன்னார் (கிராமம்)
15. மரியன்னை விண்ணேற்பு பெருவிழா - மருதமடு திருவிழா
17. புனித வேளாங்கண்ணி வைத்தியசாலை திருவிழா மன்னார்
18. மடுமாதா சிற்றாலயம் - குட்செட் றோட்
20. புனித வேளாங்கண்ணி - தம்பனைக்குளம்
21. குழந்தை இயேசு சிற்றாலயம் - கள்ளியடிப்பிட்டி
22. புனித பரலோக அன்னை திருவிழா - கோமரசன்குளம், பறப்பாங்கண்டல், வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலய திருவிழா, தோட்டவெளி - அன்னை தெரேசா மறைபரப்பு, அருட்சகோதரிகள் விழா - மடு அன்னை திருவிழா, சிதம்பரபுரம் (ஓமந்தை)
24. புனித பார்த்தலேமியு திருவிழா - ஓலைத்தொடுவாய்
 - மடுமாதா - தங்கநகர்
25. கிறிஸ்து அரசர் திருவிழா - பெரியமடு
 - புனித யோசேவ்வாஸ் ஆலயம் - தச்சன்குளம்
 - புனித சவேரியார் ஆலயம் - சுந்தரர்புரம்
26. சதாசகாய மாதா - கணேசபுரம், வெள்ளாங்குளம்
 - புனித அன்னை திரேசா திருவிழா - துட்டுவாகை
 - சதாசகாய மாதா திருவிழா - கணேசபுரம் (தேவன்பிட்டி)
28. புனித அந்தோனியார் திருவிழா - உயிர்த்தராசன்குளம்
 - அளவக்கை பங்குத்திருவிழா
30. குழந்தை இயேசு திருவிழா - மடுக்குளம்
31. புனித சவேரியார் ஆலயம் - ஆட்காட்டிவெளி, சுந்தரபுரம்

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்

## இறைமீட்பர் துறவற சபையில் இறுதி அர்ப்பணத்தைப் பெற்றுக்கொண்டார்

### அருட்சகோதரி. டியூரின் தர்ஷனி பெரேரா



கடந்த 10.08.2019 அன்று இறைமீட்பர் துறவறசபையைச் சேர்ந்த அருட்சகோதரி டியூரி தர்ஷனி பெரேரா அவர்கள் தனது துறவற வாழ்வில் இறுதி அர்ப்பணத்தை எடுத்துக்கொண்டார். இவ் இறுதி அர்ப்பண விழாத் திருப்பலியினை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமைதாங்கி நடத்தினார். இவரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது. இந்நிகழ்வானது கற்கிடந்தகுளம் பங்கின் மளுவராயர் கட்டையடம்பன் புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெற்றது. ➡ 14

## துறவற வாழ்வில் பொன்விழா, வைரவிழா அருட்சகோதரிகளை வாழ்த்துகின்றோம்

### மேரி. விக்ருவா லெம்பேட், அன்ரனற் மனுவேற்பிள்ளை



அருட்சகோதரிகளான மேரி விக்ருவா லெம்பேட் 60ஆவது ஆண்டு வைர விழாவையும் , அன்ரனற் மனுவேற்பிள்ளை 50ஆவது ஆண்டு பொன் விழாவையும் மிகச் சிறப்பாக கடந்த 28.07.2019 அன்று வவுனியா திருக்குடும்ப கன்னியர் சபை இல்லத்தில் கொண்டாடினர்.

இவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் தெரிவிக்கின்றது. ●

## சமாதான நீதவானாக நியமனம்

### திரு. ச. கொண்சன்ரைன் செலஸ்ரன்



அளவக்கையைச் சேர்ந்த திரு. ச. கொண்சன்ரைன் செலஸ்ரன் அவர்கள் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக மாண்புமிகு நீதி அமைச்சர் தலதா அத்துகோரள அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஐஆளுநுளுழ நிறுவனத்தின் ஸ்தாபரும் இயக்குனருமாக பல சமூபப்பணிகளை ஆற்றிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றது. ●

## திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி ஜேம்ஸ் கூஞ்ஞ இறைபதம் அடைந்தார்



திருக்குடும்பக் கன்னியர் சபையைச் சேர்ந்த தலைமன்னார் அருட்சகோதரி ஜேம்ஸ் கூஞ்ஞ தனது 85வது வயதில் கடந்த 05.08.2019 அன்று இறைபதம் எய்தினார். 1934.01.19 அன்று பிறந்த இவர் 1956ஆம் ஆண்டு தனது சந்நியாச முதல் துறவற அர்ப்பணத்தை மேற்கொண்டார். இவரின் ஆன்மா நித்தியத்திற்கும் முடிவில்லாத ஒளியில் இளைப்பாற ஆசிப்பதோடு திருக்குடும்ப கன்னியர்சபை அருட்சகோதரிகளுக்கும் குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா ஆழ்ந்த அநுதாபங்களை தெரிவிக்கின்து. ●

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

*-மன்னா நிர்வாகம்-*

**மன்னார் மறைமாவட்டச் செய்திகள்**

# வங்காலை புனித ஆனாள் ஆலயத்திருவிழா





மன்னார் மறைமாவட்டத்தின் பாரம்பரிய பங்குகளில் ஒன்றாகிய வங்காலைப் பங்கின் தாய்க்கோவில் புனித ஆனாள் அன்னையின் ஆலயத்திருவிழா கடந்த 26.07.2019 அன்று காலை 6.15 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இத் திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி கூட்டுத்திருப்பலியாக பல குருக்கள், அருட்சகோதர சகோதரிகள் ஆயிரக்கணக்கான இறைமக்களோடு இணைந்து ஒப்புக்கொடுத்தார். பக்தியான முறையில் திருவிழா வழிபாடுகள் யாவும் அமைந்திருந்தன. ➡ 13

# தலைமன்னார்

## புனித லோறன்சியார் ஆலயத்திருவிழா





தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 10.08.2019 அன்று காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட இளைஞர், வழிபாட்டு ஆணைக்குழுக்களின் இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகளார் ஏனைய பல குருக்களோடும், அருட்சகோதர சகோதரிகளோடும் இணைந்து ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் புஷ்பராஜா அனைத்தையும் பங்குமக்களின் முழுமையான ஒத்துழைப்போடு அருட்சியான முறையில் ஒழுங்குபடுத்தியிருந்தார். ●

**மன்னார் மறைமாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட புனித இடங்கள்**

# கொக்குப்படையான் சந்தியில்




கடந்த 05.08.2019 அன்று மாலை 5.30 மணிக்கு கொக்குப்படையான் பிரதான வீதி சந்தியில் புனித யாகப்பரின் உயரமான திரு உருவம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களினால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது. ●

# மடுறோட் சந்தியில்




கொழும்பு மன்னார் பிரதான வீதியின் மடுச் சந்தியில் பழுதடைந்து காணப்பட்ட மடுமாதா திருவுருவ அமைவிடம் மிகவும் அழகான முறையிலே திருத்தி அமைக்கப்பட்டு 14.08.2019 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இத் திரு நிகழ்வில் பல குருக்கள், இறைமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். ●

# பூம்புகார் புதிய ஆலயம்




மன்னார் மறைமாவட்டத்தின் வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த தரணிக்குளம்பங்கு பூம்புகார் துனை ஆலயம் 18.08.2019 ஞாயிறு அன்று மாலை 4.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. கப்புச்சின் சபையின் இலங்கை பிராந்திய முதல்வர் அருட்பணி. செல்வராஜ் அடிகளாரையும், தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியசாமி அடிகளாரையும் அவர்களது அயராத பணிகளையும் மறைமாவட்டம் சார்பாக பாராட்டுகின்றோம். ●

# கணேசபுரம்

## புனித வேளாங்கண்ணி ஆலயம்




கன்னாட்டி, பிராமணாலங்குளம், கணேசபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய அருட்பணி தளத்தில் கணேசரபுரம் பகுதியிலுள்ள கத்தோலிக்க மக்களுக்கென ஏற்கெனவே மக்களின் வழிபாட்டு இடமாக இருந்த இடத்தில் அமைக்கப்பட்ட அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தை மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் 15.08.2019 அன்று மாலை ஆசிர்வதித்துத் திறந்துவைத்தார். ➡ 13

# மட்டக்களப்பு மாமாங்கம்

## புனித சதாசகாய மாதா திருவிழா




மட்டக்களப்பு மறைமாவட்டம் மாமாங்கம் சகாயபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி கோடான கோடி அற்புதற்கள் பொழியும் புனித சதாசகாய அன்னையின் ஆலயத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருப்பலியினை இயேசு சபையின் மாகாண ஆலோசகர் அருட்பணி T. சகாயநாதன் (SJ) அடிகளார் இத்திருப்பலியைத் தலைமைதாங்கி நிறைவேற்றினார். ➡ 13

**மன்னார் மறைமாவட்டத்தில் அருட்சாதனக் கொண்டாட்டங்கள்**

# தலைமன்னாரில் உறுதிப்பூசுதல்



உறுதிப்பூசுதல் திருவருட்சாதன நிகழ்வு 18.08.2019 அன்று தலைமன்னார் பங்கின் தாய்க்கோயில் புனித லோறன்சியார் ஆலயத்தில் 65 மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது. ➡ 15

# கட்டைக்காட்டில் முதல்நன்மை



கட்டைக்காட்டுப் பங்கின் புனித செபஸ்தியார் ஆலயத்தில் முதல் நன்மை கொண்டாட்ட சிறப்புத் திருப்பலி மிக அருட்சியாக நடைபெற்றது. மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. சத்தியராஜ் கூட்டுத்திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். ●

# தாழ்வுபாட்டில் முதல்நன்மை



ஆனி மாதம் 23ஆம் திகதி காலை 6.30 மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் 40 சிறுவர்கள் முதன்முதலாக நற்கருணை ஆண்டவர் இயேசுவை பெற்றுக்கொண்டனர். ➡ 13

# பண்ணைவெட்டுவான் ஆலயத் திருவிழா



முருங்கன் மறைக்கோட்டம் கற்கிடந்தகுளம்பங்கு பண்ணை வெட்டுவான் புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா திருப்பலி கடந்த 27.07.2019 சனிக்கிழமை அன்று காலை பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவ்வல் அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இத் திருவிழாத் திருப்பலியினை அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் பல அருட்பணியாளர்கள் இறைமக்களோடு இணைந்து ஒப்புக்கொடுத்தார். ●

# சுவிஸ் ஆன்மீகப் பணியகத்தின் மருதமடு அன்னையின் திருவிழா



சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் வருடந்தோறும் கொண்டாடும் மருதமடு அன்னையின் திருவிழா 17.08.2019 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் ஆன்மிக இயக்குனர் அருட்பணி. டக்லஸ் மில்ரன் லோகு அடிகளார் தலைமைதாங்க பிரான்ஸ் நாட்டின் லூர்து அன்னை பணியகத்தின் தமிழ் ஆன்மிக இயக்குனர் அருட்பணி. லீனஸ் சொய்சா அமதி அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

இத் திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. சுதர்சன் அமதி மற்றும் சுவிஸ் நாட்டின் குருக்கள் இனைந்து திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார்கள். பின் மடு அன்னையின் திருச்சூருப தேர்ப் பவனியும் மடு அன்னையின் பிரியாவிடை செபமும் இடம்பெற்றது. இறுதியாக அருட்பணி. லீனஸ் சொய்சா அடிகளார் மடு அன்னையின் ஆசீரினை இறைமக்களுக்கு வழங்கிவைத்தார். ●

மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா சிறப்புப் பக்கம்

# ஆவணி அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வழங்கிய மறையுரையின் முழுமை

இறை இயேசுவில் எமக்குப் பிரியமானவர்களே! எமது நாட்டின் நாற்திசையிலுமிருந்து இங்கு வந்திருக்கும் அனைவருக்கும், பிற நாடுகளில் வசிக்கும் மடுமாதா பக்தர்கள் அனைவருக்கும் இனிய பெருவிழா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மருதமடு அன்னை உங்கள் அனைவரையும் பாதுகாத்து உங்களுக்காகப் பரிந்துபேசுவாராக. உங்களுக்கு இறைமகன் இயேசுவிடமிருந்து அருள்வளம் கிடைக்கப் பெற்று நீங்கள் மகிழ்ச்சியோடும், நற் சுகத்தோடும் வாழ அவளுடைய மன்றாட்டுக்கள் உங்கள் ஒவ்வொருவருக்கும் உதவுவனவாக. நோய்கள், கஸ்ர துக்கங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், பிணிகள் எல்லாம் அகற்றப்பட்டு அமைதியுடன் வாழ அவளுடைய மன்றாட்டுப் பலன்களினால் நீங்கள் வெற்றி பெற்று வாழ்வீர்களாக. மருதமடு அன்னை சென்ற வருடம் முழுமையாக விசேடமாக உங்களுக்குப் பெற்றுத்தந்த அனைத்து நன்மைத்தனங்களையும், வரங்களையும் நினைவுகூர்ந்து அதற்காக இத்திருப்பலியிலே இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

அருமையான சகோதர சகோதரிகளே! எமது இன்றைய சிந்தனைகளின் மையக்கருத்தாக தன் மீட்புப் பணிக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததற்காகவும் தன் மகன் கிறிஸ்துவின் மாபெரும் சீடராக விளங்கியதற்காகவும் இறைவன் அன்னை மரியாவிற்குக் கொடுத்த மாபெரும் பரிசு விண்ணேற்பு என்பதைப் பற்றித் தியானிக்கின்றோம். 1950ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், மரியா விண்ணேற்பு அடைந்ததை ஒரு கத்தோலிக்க விசுவாச கோட்பாடாக அறிவித்தார். அப்போது உயிரோடு இருந்த மிகப் புகழ் பெற்ற உளவியலாளர் கால்யும் என்பவர் அன்னை கன்னி மரியாவில் கிறிஸ்தவர்களின் ஒட்டுமொத்த சாயலை பார்ப்பதாகவும் அவர் கிறிஸ்தவ வாழ்வு மற்றும் நம்பிக்கையின் முன்மாதிரிகையாக இருப்பதாகவும் (She is The Architecture of Christian Life and Faith) கூறி அன்னைக்குப் புகழாரம் சூட்டினார். பழைய ஏற்பாட்டில் கடவுளின் பேளையை தாவீது அரசர் மேளதாளத்துடன், தாரை தப்பட்டைகள் முழங்க ஜெருசலேம் நகரத்திற்கு எடுத்துச் சென்றதை 2சாமுவேல் 6:1-23 வரையிலான இறைவார்த்தைகளில் வாசிக்கின்றோம். இறைவனும் தம் திருமகன் இயேசுவின் பேழையாகிய அன்னை மரியாவை ஆரவாரத்தோடும், மகிழ்ச்சியோடும் தம் திருநகராகிய விண்ணகத்திற்கு அழைத்துச் சென்ற நிகழ்வையே இன்றைய விழா நமக்கு நினைவூட்டுகின்றது. மரியா விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதற்கான காரணம் என்ன என்று சிந்திக்கும்பொழுது எமக்கு இரண்டு பதில்கள் இறைவார்த்தையிலிருந்து கிடைக்கப்பெறுகின்றன.

## மீட்புப் பணியில் அன்னை மரியாவின் ஒத்துழைப்பு

அருள்மிகப் பெற்றவர் என்று இன்றைய நற்செய்தி வாசகத்திலே எலிசபெத்தம்மாவால் அழைக்கப் பெற்ற நம் அன்னை தான் பெற்ற அருளை இவ்வுலகின் மீட்புப்பணிக்கு முழுவதுமாக செலவழித்தார். தன் மகனோடு இணைந்து இவ்வுலகில் மீட்புப் பணியில் ஈடுபட்டார். ஒரு பெண்ணால் அதாவது ஏவாளால் இழந்துபோன இவ்வுலகின் மீட்பும் மகிழ்வும் மற்றொரு பெண்ணாகிய தன் வழியாக மீண்டும் கிடைக்கவேண்டும் என்ற இறைவனின் திட்டத்தை மனமகிழ்வோடு ஏற்றுக்கொண்டார். புதிய ஏவாளாகிய அன்னை மரியாவின் பெருமையும் மேன்மையும் மீட்புப் பணியில் அவர் ஒத்துழைத்த விதத்தையும் உணர வேண்டுமென்றால் நாங்கள் அவரைப் பழைய ஏவாளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாக இருக்கின்றது. தீயோனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டு செயற்பட்டதன் விளைவாக அழிவைத் தேடிக்கொண்டவள் ஏவாள், இறைவனுடைய வார்த்தையை ஏற்று அதை உள்ளத்தில் இருத்தி செயற்படுத்தி வாழ்வை தேடிக்கொண்டவள் அன்னை மரியா. பிறரது அதாவது கடவுளது கனிக்கு ஆசைப்பட்ட சுயநலவாதி ஏவாள், பிறரின் அதாவது நமது மீட்புக்காகத் தன் திருவயிற்றின் கனியை அர்ப்பணித்த



பிறநலவாதி அன்னை மரியா. கடவுளைப்போல் ஆகவேண்டும் என்ற அகந்தையினால் தூண்டப்பெற்றவள் ஏவாள், இதோ உமது அடிமை என்று சொல்லி தாழ்ச்சியினால் தூண்டப்பட்டவள் அன்னை மரியா. நான் தவறு ஏதும் செய்யவில்லை பாம்புதான் என்னை ஏமாற்றியது என்று சொல்லி தன்னை குற்றமற்றவளாக காட்ட முனைந்தவள் ஏவாள், தான் கடவுளால் குற்றமற்றவராக படைக்கப்பட்டும் மனுக்குல மீட்பிற்காக அதன் குற்றங்களை ஏற்றுக்கொண்ட தியாகத்தீபம் அன்னை மரியா. அன்னை மரியாளின் மேற்கூறப்பட்ட மேலான குணங்கள்தான் அவரை விண்ணேற்பு நிலைக்கு உயர்த்தியது. நமது வாழ்விலும் அன்னை மரியாளின் இக்குணங்களை பின்பற்றுகையில் இறைவனால் உயர்த்தப்படுவோம் என்ற நம்பிக்கையையே அன்னை மரியாளின் விண்ணேற்பு நமக்குத் தருகின்றது.

## அன்னை மரியாளின் சீடத்துவம்

கடவுளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழ்ந்த ஏனோக்குவிற்கும் (தொ.நூ. 5:22) எலியாவுக்கும் (2அர.2:11) விண்ணேற்பு என்கின்ற கொடையை வழங்கிய இறைவன் தன் மகன் கிறிஸ்துவின் தனிப்பெரும் சீடராக விளங்கிய அன்னை மரியாளுக்கும் அந்தக் கொடையை வழங்கியதில் வியப்பில்லை. ஏனைய சீடரைவிட மேலான சீடராக, ஏனைய சீடர்களுக்கு முன்மாதிரிகையான சீடராக விளங்கியவர் மரியா. சீடத்துவம் என்பது ஒரே வார்த்தை என்றாலும் 4 நற்செய்தியாளர்களும் இதற்குக் கொடுக்கும் விளக்கம் வித்தியாசமானவைகளாக இருக்கின்றன. அதாவது மத்தேயு நற்செய்தியின்படி உண்மையான சீடர் என்பவர் புதிய திருச்சட்டமாகிய மலைப்பொழிவின் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பவர். மாற்கு நற்செய்தியின்படி இயேசுவைப் பின்பற்றி வாழ்வின் சிலுவைகளை பொறுமையோடு தூக்கிச் செல்பவரே உண்மையான சீடர். லூக்கா நற்செய்தியின்படி கடவுளது வார்த்தைகளைக் கேட்டு அதை உள்ளத்தில் இருத்தி அதன்படி செயற்படுபவரே உண்மையான சீடர். இறுதியாக கடவுளது விருப்பத்தை அறிந்து அதன்படி செயற்படுகின்றவரே உண்மையான சீடராவார். இவ்வாறான நற்செய்திகளின் படிப்பினைகள் ஒன்றிற்கொன்று முரண்பட்டவையல்ல. இவை அனைத்தும் இறை இயேசுவையே மையப்படுத்திக் காட்டுகின்றன. அன்னை மரியாளின் வாழ்வைப் பார்க்கும்போது அவரது சீடத்துவத்தில் மேற்கூறப்பட்ட எல்லா விளக்கங்களும் பொருந்துகின்றன. அதாவது புதிய திருச்சட்டமாகிய மலைப்பொழிவின் சாராம்சத்தை தன் வாழ்வில் நிறைவேற்றியவராக இயேசுவைப் பின்பற்றி வாழ்வின் சிலுவைகளை தூக்கிச் சென்றவராக, கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதை நிறைவேற்றியவராக, இறைத்திருவுளத்தை தன் சிரமேற் கொண்டு செயற்பட்டவராக இருக்கின்றார். நமது வாழ்விலும் கடவுளுக்கு ஏற்ற வாழ்வு நடாத்தும் உண்மையான சீடராக நாம் வாழவேண்டும் என்பதற்கான சவாலை இன்றைய மரியன்னையின் விழா நம்முன் வைக்கின்றது. மண்ணகம் விட்டு விண்ணகம் சென்ற மரியே உம்மைப் போற்றுகின்றோம். எமது அன்னையாம் உமது அன்பின் வழியில் அடியோர் நடந்திட வேண்டிடுவீர்.

## அன்னை மரியாளுக்கு எமது நாட்டை அர்ப்பணிக்குமாறு ஆயர் பேரவை வேண்டுகோள்.

அருமையான சகோதர சகோதரிகளே! இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை எம்மிடம் கேட்டு நிற்பது செப்ரெம்பர் மாதம் அதாவது அடுத்த மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மரியன்னையின் பிறந்தநாளைக் கொண்டாடும் தினத்தில் முழு இலங்கை நாட்டையும், அனைத்து மறைமாவட்டங்களையும், பங்குகளையும், குடும்பங்களையும், எமது பக்தி சபைகளையும், மற்றும் சபைகளையும், நிறுவனங்களையும் அன்றைய நாளிலே அன்னை மரியாளுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். அவளுடைய மன்றாட்டுப் பலனினாலும், உடனிருப்பினாலும் நாம் அனைவரும் இந்நாட்டிலே அமைதியுடனும், கவலைகள் அச்சங்களின்றியும் வாழ இறைவன் எமக்கு அருள்வளம் ஈர்ந்து வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுவோம்.

## நீதி, நேர்மையுடனான பக்கசார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆயர் பேரவை மீண்டும் வேண்டுகோள்.

மேலும் ஆயர் பேரவை கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலிற்குப் பின்னரான நாட்டின் சூழ்நிலை குறித்து பின்வரும் சொற்களை அடக்கிய ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. இத்தாக்குதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்து நீதியின் முன் கொண்டுவருமாறு நாம் அரசாங்கத்திடம் தாழ்மையோடு கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் இச்சூழ்நிலை குறித்து நீதியான, உண்மையான விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதைக் குறித்து இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றது. பல குழுக்களை நிறுவிக்கொண்டு பாதுகாப்புப் பிரிவின் பாரதூரமான குறைகளுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் யார் என்பதை முதல்ப்பணியாக விசாரணை செய்வதற்கு முயற்சிக்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் இவ் அறிக்கை எடுத்துக்கூறுவது நாம் மீண்டும் எம் நாட்டு அரசாங்கத்திடமும், அரசியல் தலைவர்களிடமும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாவது! நீதி, நேர்மை உடனான பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது என்பதாகும். அத்தோடு அரசாங்கத்தின் பல்வேறுபட்ட பணியகங்களினால் வழங்கிய உதவிகளைப் பாராட்டுவதோடு நாம் மீண்டும் மீண்டும் வேண்டி நிற்பது நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டுவதோடு இதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய அனைவரையும் நீதியின் முன் கொண்டுவரவேண்டும் என்பதே ஆகும். அருமையான சகோதர சகோதரிகளே! நம் நாட்டின் நலம் குறித்து மருதமடு அன்னையை நோக்கி மன்றாடுவோம். நாம் மருதமடு அன்னையை நோக்கி மன்றாடும் பொழுது நாங்கள் அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழ கட்டாயமாக எங்கள் அனைவருக்கும் உதவிபுரிவாள். அவளுடைய மன்றாட்டுப் பலனினால் காணாமலாக்கப்பட்டோர், வேலைவாய்ப்பற்று இருப்போர், நோயினால் பாதிக்கப்பட்டோர் அத்தோடு உங்கள் குடும்பங்கள் அனைத்தும் நல்ல உறவுகளுடன் வளம்பெற்று வாழ அவளுடைய உதவி உங்களுக்குக் கட்டாயம் கிடைக்கப்பெறும் என்று நாம் ஆசிகூறி வாழ்த்துகின்றோம். ●

## மருதமடு அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவின் சில பதிவுகள்..













## உலகத் திருச்சபைச் செய்திகள்

# மன்னிப்பின் வழியே அமைதியான வாழ்வு

மன்னிப்பின் வழியே அமைதி எவ்வாறு கிடைக்கும் என்பது பற்றி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ‘‘மன்னிப்பின் வழியே அமைதி உருவாகும் என்பதே இயேசு காட்டியுள்ள பாதை ஏனெனில் ஒரு தீமை மற்றொரு தீமையை ஒருபோதும் திருத்தாது. கடுஞ்சினம் ஒருபோதும் இதயத்திற்கு நன்மையை வழங்காது’’ என்ற சொற்கள் ஓகஸ்ட் 07ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் பதிவாகியிருந்தன.

12.12.12 என்ற சிறப்பான எண்கள் கொண்ட நாளன்று முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் ‘பாலம் அமைப்பவர்’ என்ற பொருள்படும் Pontifex என்ற இலத்தீன் சொல்லை தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு டுவிட்டர் செய்திகளை ஆரம்பித்தார். ஒவ்வொரு நாளும் திருத்தந்தை வழங்கிவரும் டுவிட்டர் செய்திகள் இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, இஸ்பானியம், போர்த்துகீசியம், ஜெர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய ஒன்பது மொழிகளில் வெளியாகின்றன. ஓகஸ்ட் 06ஆம் திகதி முடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்திகள் 2,071 என்பதும் அவரது செய்திகளை ஆங்கில மொழியில் பின்பற்றுவோரின் எண்ணிக்கை மட்டும் 1 கோடியே 81 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன. இத்துடன் @franciscus



என்ற பெயரில் இயங்கிவரும் instagram முகவரியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செயற்பாடுகளை மையப்படுத்தி அவ்வப்போது வெளியிடப்பட்டுவரும் படங்கள், மற்றும் காணொளிகள் இதுவரை 743 என்பதும் அவற்றைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 62 இலட்சம் என்பதும் குறிப்பிடத்தக்கன.

2012ஆம் ஆண்டு டிசம்பர் 12ம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் டுவிட்டர் செய்திகளை ஆரம்பித்துவைத்தார்.●

# ஆசிய கிறிஸ்தவ இறையியல் வல்லுனர்கள் மாநாடு



இந்தோனேசியாவின் மெதான் நகரில் படைப்பு, மீட்பு ஆகிய இரு இறையியல் தலைப்புக்களில் ஆசிய கிறிஸ்தவ இறையியல் வல்லுனர்களின் ஒன்பதாவது மாநாடு வட சுமத்ரா மாநிலத்தில் ஓகஸ்ட் 5-10ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் ஆசியா முழுவதிலுமிருந்து பல்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த 120இற்கும் அதிகமான இறையியலாளர்கள் கலந்து கொண்டனர். ஆரம்ப உரையாற்றிய ஆசிய கிறிஸ்தவ அவையின் நடத்துனர் பேராயர் Willem Simarmata இப்பூமியில் மனிதரின் ஆதிக்கத்தினால் வன்முறைக்கு உள்ளாகும் படைப்பைப் பாதுகாக்கும் பணியைப் புதுப்பிக்குமாறு வலியுறுத்தினார். ➡ 15

# விசுவாச வாழ்வு என்பது ஒரு தொடர்பயணம்



நம் செபத்தின் வழியாக இயேசுவுடன் கொள்ளும் உறவால் நம் கரங்களில் ஏந்தியுள்ள விளக்குகள் மீண்டும் மீண்டும் ஒளிர்வதற்குத் தேவையான எண்ணெயைப் பெறுகின்றன. இவ்வுலகில் வாழ்ந்து செயலாற்றும் அதே வேளையில் நம் இதயங்கள் விண்ணகம் குறித்த ஏக்கம் கொண்டவைகளாக இருக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருப்பலியின் நற்செய்தியில் கூறப்பட்ட ‘விழிப்பாயிருக்கும் பணியாளர்கள்’’ உவமை குறித்த கருத்துக்களைப் பகிர்ந்தபோது நம் வாழ்வில் இறைவனின் வழியைப் பற்றிக்கொள்ள எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டுமென கேட்டுக்கொண்டார். ➡ 14

# படைப்பைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பு

‘பூர்வீக இன மக்களின் மொழிகளைப் பாதுகாப்போம்’ என்ற தலைப்பில் பூர்வீக இனத்தவரின் உலக நாள் உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டது. நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது நம் அனைவரின் கடமை என்பதை பூர்வீக இன மக்கள் நினைவுபடுத்துகின்றனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஓகஸ்ட் 9ஆம் திகதி ஐ.நா. இன் பூர்வீக இனத்தவரின் உலக நாள் கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு அம்மக்களை மையப்படுத்தி டுவிட்டர் செய்தி வெளியிட்டுள்ளார் திருத்தந்தை. ‘‘கடவுள் நம்மிடம் ஒப்படைத்துள்ள தம் படைப்பைப் பாதுகாப்பதற்கு நம் எல்லோருக்கும் பொறுப்பு உள்ளது என்பதை பல்வேறு மொழிகள் கலாசாரங்கள், மரபுகள் மற்றும் மூதாதையரின் அறிவுடன் பூர்வீக இன மக்கள் நமக்கு நினைவுறுத்துகின்றனர்’’ என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டரில் இடம்பெற்றிருந்தன.

பூர்வீக இனத்தவரின் உலக நாள் 2019ஆம் ஆண்டு பூர்வீக இனத்தவரின் மொழிகளின் ஆண்டாக ஐ.நா. நிறுவனம் கடைப்பிடித்து வருகின்றது. உலகெங்கும் பேசப்படும் ஏழாயிரம் மொழிகளில் பெரும்பாலானவை பூர்வீக இன மக்களால் பேசப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் வெளியான அறிக்கையில் பூர்வீக இனத்தவரின் ஏறத்தாழ



2,680 மொழிகள் அழியும் ஆபத்தில் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இம்மக்கள் ஐந்தாயிரம் பல்வேறு கலாசாரங்களைக் கொண்டவர்கள்.

உலக மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினராகவுள்ள பூர்வீக இனத்தவர், உலகிலுள்ள வறியவர்களில் 15 விழுக்காட்டினராகவும் உள்ளனர். பூர்வீக இனத்தவரின் உலக நாள் 1982ஆம் ஆண்டில் முதன்முதலாகக் கடைப்பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.●

# மொசாம்பிக் திருத்தூதுப் பயணத்தை முன்னிட்டு அமைதி ஒப்பந்தம்



மொசாம்பிக்கில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் அந்நாட்டில் ஆறு ஆண்டுகளாக நடந்துவந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் இனிமேல் வன்முறையில் ஈடுபடுவதில்லை எனவும் உறுதி கூறப்பட்டுள்ளது. நிரந்தரமற்ற இவ்வுலக வாழ்வில் நிலையானவற்றைத் தேடுவதற்கு இறைவனிடம் நாம் மன்றாடுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார். ஓகஸ்ட் 08ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில், ‘‘கடந்துபோகும் பொருட்களின் மத்தியில் நாங்கள் சிக்கியிருக்கையில் தந்தையே இறைவா உண்மையாகவே நிலைத்திருக்கவல்ல உமது பிரசன்னத்தையும் எம் சகோதரர், சகோதரிகளையும் தேடுவதற்கு எமக்கு உதவியருளும்’’ என்ற வார்த்தைகள் பதிவாகியிருந்தன.

மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருகின்ற செப்ரெம்பர் 5ஆம் திகதி மொசாம்பிக் நாட்டில் திருத்தூதுப் பயண நிகழ்வுகளை ஆரம்பிப்பதை முன்னிட்டு அந்நாட்டு அரசுத்தலைவர் Filipe Nyusi அவர்களும், RENAMO அமைப்புத் தலைவர் Ossufo Momade அவர்களும் வரலாற்று சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர். ஓகஸ்ட் 01ஆம் திகதி RENAMO அமைப்பின் இராணுவத்தளத்தில் இவ்விரு தலைவர்களும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் மொசாம்பிக்கில் ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் இனிமேல் வன்முறையில் ஈடுபடுவதில்லை எனவும் உறுதி கூறப்பட்டது. ➡ 14

# கிறிஸ்தவ மறைசாட்சிய வாழ்வின் மேன்மை



பேரரசர் வலேரியன் திருஅவையின் சொத்துக்கள் எங்கே என புனித லோறன்சிடம் கேட்டபோது தனக்குப்பின் நின்று கொண்டிருந்த ஆயிரக்கணக்கான ஏழைகளைச் சுட்டிக்காட்டினார். ‘‘அடிப்படையில் கிறிஸ்தவ சாட்சியம் என்பது இயேசு உயிரோடு வாழ்கின்றார். அவரே வாழ்வின் இரகசியம் என்பதை மட்டுமே அறிவிப்பதாகும்’’ என்று திருத்தந்தை அவர்கள் கூறியுள்ளார். ➡ 14

# விடுமுறைகள், உறவுகளுக்கு உயிரூட்டமளிக்கும் காலம்



விடுமுறை நாட்களில் அன்றாட இறைவேண்டல்களைப் புறக்கணியாதீர்கள் ஞாயிறு திருப்பலியையும் மற்றவரோடு நேரம் செலவிடுவதையும் மறவாதீர்கள். விடுமுறைகள் ஓய்வெடுப்பதற்கு மட்டுமன்றி உறவுகளை உயிர்பெறச் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் காலமாகவும் அமைந்துள்ளன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பொது மறைக்கல்வியுரையில் போலந்து திருப்பயணிகளிடம் கூறினார். ➡ 13

# நற்செய்தி சொல்லால் மட்டுமல்ல, மாறாகச் செயலிலும் வெளிப்படவேண்டும்

இயேசுவின் சீடர்கள் மீட்பின் நற்செய்தியை தங்கள் வார்த்தைகளால் மட்டுமன்றி மெய்யான செயல்களாலும் பறைசாற்றினார்கள். கடுமையான வெயிலின் மத்தியிலும் திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கில் இடம்பெற்ற மறைக்கல்வி உரையில் திருத்தூதர் பணிகள் குறித்த தன் மறைக்கல்வி உரைகளின் தொடர்ச்சியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். முதலில் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து புனித பேதுரு நிகழ்த்திய புதுமை குறித்து பல்வேறு மொழிகளில் வாசிக்கப்பட்டது. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவர் கோவிலுக்குள் சென்றுகொண்டிருந்த பேதுருவையும், யோவானையும் கண்டு பிச்சை கேட்டார்.

பேதுருவும் யோவானும் அவரை உற்றுப்பார்த்து, ‘‘எங்களைப் பார்’’ என்று கூறினர். அவர் ஏதாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களை ஆவலுடன் நோக்கினார். பேதுரு அவரிடம் ‘‘வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கின்றேன். நாசரேத்து இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்’’ என்று கூறினார் (தி.ப. 3,3-6) என்ற பகுதி வாசிக்கப்பட்டபின் திருத்தந்தை தன் மறைக்கல்வி உரையை ஆரம்பித்தார். அன்புச் சகோதரர் சகோதரிகளே! திருத்தூதர் பணிகள் குறித்த நம் தொடர் மறைக்கல்வியுரையில் இயேசுவின் சீடர்கள் எவ்வாறு மீட்பின்



நற்செய்தியை தங்கள் வார்த்தைகளால் மட்டுமன்றி மெய்யான செயல்களாலும் பறைசாற்றினார்கள் என்பதைக் குறித்து காண்போம்.

திருத்தூதர் பணிகள் நூலில் நாம் காணும் முதல் புதுமை இதற்குச் சான்றுபகிர்கின்றது. பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்ற வேளையில் கோவிலின் வாயிலில் பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரைச் சந்திக்கின்றனர். ➡ 13

# கலையருவியின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் மன்னார் மறைமாவட்ட மட்டத்திலான

## மாபெரும் கரோல் பாடல் போட்டி - 2019

**பங்குப்பாடகர் குழாத்தினரின் திறமைகளை வெளிக்கொணரவும், புதிய பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்களை அறிமுகம்செய்து ஊக்குவிக்கவும், கிறிஸ்மஸ் மகிழ்வினை கரோல் பாடல்களின் வழிபகிர்ந்து கொள்ளவும் வழிசமைக்கும் வகையில் கலையருவியினால் இந்தக் கரோல் பாடல் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. குழுக்களாக உங்கள் திறமைகளை வெளிப்படுத்த அரிய சந்தர்ப்பம்!**

1. இப்போட்டி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் தரம் 5 முதல் தரம் 11 வரை பாடசாலை மாணவர்களும், மேற்பிரிவில் தரம் A/L முதல் திருமணமானவர்கள் வரை பெரியவர்களும் உள்ளடக்கப்படுவர். வயதெல்லை கிடையாது.
2. ஒவ்வொரு பிரிவினரும் குழுவாக ஒரு தமிழ்ப்பாடலைப் பாடலாம்.
3. எனவே ஒருபங்கில் இருந்து இரண்டு குழுக்கள் இப்போட்டியில் பங்கெடுக்கலாம் (கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு).
4. ஒரு பிரிவைச் சேர்ந்தவர் மற்றைய பிரிவில் இணைய முடியாது.
5. ஒரு குழுவில் 08 தொடக்கம் 16 பேர் வரையில் மட்டுமே பங்கெடுக்கலாம்.
6. ஒருபாடல் 08 நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
7. பாடல் புதிய படைப்பாக இருத்தல் வேண்டும். பாடல் வரிகள், இசை என அனைத்தும் புதிதாக ஆக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இருக்கும் பாடலாகவோ அல்லது தழுவலாகவோ இருக்கக்கூடாது.
8. கரோல் பாடல் போட்டியில் இடம்பெறும் பாடலின் வரிகளை எழுதியவருக்கும், அப்பாடலுக்கு இசை அமைத்தவருக்கும் தனியான விருதுகள் வழங்கப்படும்.
9. எந்த இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். உங்கள் பாடலுக்குத் தேவையான இசைக்கருவிகளை, தொழில்நுட்ப சாதனங்களை (Code wires etc.) நீங்களே கொண்டுவர வேண்டும்.
10. நான்கு நடுவர்களுக்கும் பாடல் வரிகளை எழுத்தில் பிரதி பண்ணி வழங்க வேண்டும்.
    போட்டியின்போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| | | | |
|---|---|---|---|
| பாடும் திறன் | - 10 | சுருதி பாவம் | - 10 |
| லயம் | - 10 | பாடல் வரிகள் | - 15 |
| இசையமைப்பு | - 15 | ஆடை, ஒப்பனை | - 10 |
| உச்சரிப்பு, தெளிவு | - 10 | நிலை, சமர்ப்பணம் | - 10 |
| ஒத்திசைவு | - 10 | ***மொத்தம்: 100 புள்ளிகள்*** | |

11. இப் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பங்குத்தந்தையர்களுக்கும், கன்னியர் இல்ல முதல்வர்களுக்கும் அனுப்பப்படும். பங்கெடுக்க விரும்புவோர் இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் '*கரோல் பாடல் போட்டி விண்ணப்பம்*' என்று குறிப்பிடவும். பாடலுக்கான பாடல் வரிகளை எழுதியவர், இசை அமைத்தவர் பெயரையும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடவும்.
12. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் குழுக்களுக்கு '***புனித சிசிலியா பாடகர் குழு விருது***' வழங்கப்படும்.
13. முதற் கட்டப் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைமன்னார் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலையருவி மண்டபத்தில் நடைபெறும். இப்போட்டியின்போது ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களைப் பெறும் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப்போட்டிக்கு அனுமதிக்கப்படுவர். போட்டியாளர்கள் காலை 8.30 மணிக்கே சமூகம் தந்து தம்மைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
14. இறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். இப்போட்டி நடைபெறும் இடம், நேரம் பின்பு தெரியப்படுத்தப்படும். இது இறுதிப் போட்டி நிகழ்வாகவும், மறைமாவட்ட கிறிஸ்து பிறப்பு சிறப்பு விழாவாகவும் அமைந்திருக்கும்.
15. இறுதிப்போட்டியில் பங்கெடுக்கும் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். (எனவே விண்ணப்பப் படிவத்தில் பெயர்களை எழுதும்போது முழுப்பெயரை சரியாக எழுதவும்)
16. இறுதிப்போட்டி நிகழ்வுகள் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுகள் செய்யப்பட்டு, வானொலி தொலைக்காட்சிகளினால் ஒலி, ஒளி பரப்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.
17. 2018ஆம் ஆண்டு கரோல் பாடல் போட்டிகளில் பங்குபெற்றி வெற்றிபெற்ற பாடல்கள் இந்த ஆண்டு இறுதிப்போட்டியின் போது இறுவட்டாக வெளியிடப்படும்.

### இறுவட்டுப் போட்டி - (திறந்த போட்டி)

1. கிறிஸ்து பிறப்பு விழாவை பற்றியதாக இருத்தல் வேண்டும். பாடலை எழுதி, இசையமைத்து, இறுவட்டாக எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. ஒருவர் எத்தனை பாடல்களையும் தனித்தனி இறுவட்டில் ஒப்படைக்கலாம்.
3. இப்பாடல்கள் பல்லவியுடன் இரண்டு அல்லது மூன்று சரணங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.
4. விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள் ஒக்ரோபர் 10ஆம் திகதி.
5. ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கு முன்னர் எமது அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
6. முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளரின் விபரங்கள் புகைப்படத்துடன் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
7. **பரிசு :** பெயர் பொறித்த விருதும், மேதகு ஆயரின் கையெழுத்துடனான சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்கெடுத்து உங்கள் திறமைகளை வெளிப்படுத்த கலையருவியின் வாழ்த்துக்கள்.
உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி! இறையாசீர்!

**இயக்குனர், கலையருவி,**
**மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணிமையம்**

---

"மன்னார் மறைமாவட்ட கலைஞர் ஆவணம்"

### நூல் வெளியீட்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

விண்ணபதாரி நாற்பது வயதிற்கு (40) மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். ஆவணப் பிரதிகள் இல்லாத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஐப்பசி மாதம் முதலாம் திகதிக்கு முன்பு இயக்குனர், கலையருவி, இல: 202 தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் உங்கள் பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ●

---

**தர்மபிரபாஷனைய கத்தோலிக்க விருது - 2019**

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தேசிய சமூகத் தொடர்பு ஆணைக்குழுவும், கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சும் இணைந்து தேசிய கத்தோலிக்க விருது வழங்கும் வைபவத்தை கடந்த ஆண்டில் முதல் தடவையாக ஆரம்பித்து வைத்தது. இந்த ஆண்டும் இவ் கத்தோலிக்க விருது வழங்கும் வைபவம் நடைபெறவிருக்கின்றது. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஐப்பசி மாதம் முதலாம் திகதிக்கு முன்பு இயக்குனர், கலையருவி, இல: 202 தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை பங்குத்தந்தையர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். ●

---

# அறிவித்தல்

## தொன் போஸ்கோ முருங்கன்

க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கின்ற மாணவர்கள், கடந்த வருடங்களில் பரீட்சை எழுதிய மாணவர்கள் ஆகியோரின் எதிர்கால உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு சிறக்கும் வகையில் மாணவர்களின் ஆங்கில அறிவிற்கேற்றவாறு கேம்பிரிஜ் பல்கலைக்கழக ஆங்கிலக் கற்கைநெறி தொன் போஸ்கோ முருங்கன் மற்றும் தொன் போஸ்கோ யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தப்படவுள்ளது. சிறப்பாக தொன் போஸ்கோ முருங்கனில் 2வது தடவையாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இக்கற்கை நெறியானது புரட்டாதி மாதம் 2ஆம் திகதியிலிருந்து 3மாத கற்கைநெறியாக நடைபெறவுள்ளது. மாணவர்கள் விளங்கிக் கற்கக் கூடிய வகையில் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களினால் பல்வேறு செயற்பாடுகளினூடாக கற்பிக்கப்படவுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாது இக்கற்கை நெறியில் இணைந்து பயனடைய முருங்கன் தொன் போஸ்கோ கேம்பிரிஜ் ஆங்கிலக் கற்கை நெறி மையத்திற்கு இளையோரை அழைத்து நிற்கின்றோம். கற்கைநெறி முடிவில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தினரால் (FIRST CERTIFICATE IN ENGLISH – B2 level) சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778476045/ 0775935486
இயக்குனர் தொன் போஸ்கோ, முருங்கன். ●

---

# மன்னார் மண்ணில் 125 வருடங்கள் திருக்குடும்ப சபையினர்

## - மன்னார் திருக்குடும்ப குழுச்சகோதரிகள் -

போர்டோவின் திருக்குடும்ப சபை மன்னார் மறைமாவட்டத்தில் கால் பதித்து 125 வருட யூபிலி விழா காண்கின்றது. (20.08.2019)

**யாழ் மண்ணில் திருக்குடும்ப சபை**

அதி வந்தனைக்குரிய ஆயர் சமேரியாவின் வேண்டுகோளுக்கு அமைவாக 1862.11.02ஆம் திகதி அருட்சகோதரி சேவியர் மேர்ச்சன்ட் தலைமையில் 6 பேர் கொண்ட குழுவாக கடல் வழி மார்க்கமாக யாழ் மண்ணில் தடம் பதித்த திருக்குடும்ப சபையினர் இடம், காலநிலை, இனம், மதம், மொழி, இருப்பு வடிவம், சூழமைவு அனைத்துமே மாறுபட்ட நிலையில் மக்களோடு மக்களாகத் தம்மை அடையாளப்படுத்தி இறையரசுப்பணிக்காக கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, குடும்பப்பணி, ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர், மறைபரப்புப்பணி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கு சாட்சிகளாக பணியாற்றினர்.

**மன்னார் மண்ணில் திருக்குடும்ப சபை**

யாழ் மண்ணில் அருட்சகோதரிகளின் பணி விஸ்தரிக்கப்பட மன்னார் பகுதிக்கும் அவர்களது பணித்தேவை எனக் கருதப்பட்டது. அக்காலப்பகுதிகளில் மன்னார் பங்குக்குருவாக இருந்த அருட்பணி குக்திக் அமதி அடிகளார் யாழ் ஆயர் பேரருட்திரு. பொஞ்சின் ஆண்டகையிடம் விடுத்த வேண்டுகோளிற்கு அமைவாக 1894.08.20 ஆம் திகதி திருக்குடும்ப சபை அருட்சகோதரிகள் மறைசாட்சிகளின் மண்ணில் காலடி பதித்தனர். மன்னார் மண்ணில் இறை பணியாற்ற வருகைதந்த முதல் பெண் துறவற சபையினர் இவர்களே. அருட்சகோதரி பெனடிற்றா தலைமையில் அருட்சகோதரிகள் அன்ஸ்செலம், வரோனிக்கா, பேனால்ட், ஸ்கொலஸ்ரிக்கா ஆகியோரே முதற்பணியாற்ற மன்னார் மண்ணிற்கு வந்த அருட்சகோதரிகளாவார். கிறிஸ்துவில் அனைவரையும் ஒன்றிணைக்கும் நோக்கில் விசுவாசத்தையும், அன்பையும் கொடுப்பதுடன் கல்விப்பணி மூலம் நல் சமூகத்தை உருவாக்கவும் மறைபரப்பவும் இறைமக்களின் ஆன்மீகவாழ்விற்கு உறுதுணையாக இருக்கவும் நோக்காக் கொண்டு தம் பிரசன்னத்தால் இறை நம்பிக்கையை கொடுத்தனர்.

ஆரம்பத்தில் புனித மரியாள் ஆலய வளாகத்தில் எழிமையான குடிசை அமைத்து எளிமையாக வாழ்ந்துகொண்டு 1870 இல் உதயமான தமிழ் நல்லாயன் பாடசாலையில் கல்விப்பணியாற்ற ஆரம்பித்தனர். கல்வியூடாக நல் ஒழுக்க விழுமியங்களையும், அறநெறிப் பண்புகளையும், நற்பழக்கவழக்கங்கள் வாழ்வுக்குத் தேவையான உருவாக்கங்களையும் கொடுத்தனர். பல நிலைகளிலும் தமது பணிகளை விஸ்தரித்து மக்களின் நன் மதிப்பைப் பெற்று அவர்களின் வாழ்வின் உயர்விற்கு பக்கதுணையாகி பணியாற்றினர். ஆங்கிலக்கல்வியின் தேவையை உணர்ந்த இவர்கள் ஆங்கிலப் பாடசாலை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்ந்தனர். புனித மரியாள் வளாகத்தில் குடிசையில் வாழ்ந்த இவர்கள் பின்னர் சின்னக்கடையில் நல்லாயன் பாடசாலைக்கு அருகிலிருந்த வீட்டில் குடியிருந்து பணியாற்றினர். அருட்பணி. S. பீற்றர் அடிகளாரினதும் மக்களினதும் அயராத முயற்சியால் தற்போது கன்னியர் இல்லம் உள்ள இடத்தில் காணி வாங்கி கன்னியர் மடத்தை நிறுவி புனித சவேரியார் பெண்கள் பாடசாலை, நல்லாயன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளிலும் கல்விப்பணியாற்றினர். அருட்பணி. எஸ். பீற்றர் அடிகளாரின் முயற்சியால் இல்லத்தின் வளாகத்தினுள்ளே சிற்றாலயம், பாலர் பாடசாலை, விடுதிச்சாலை என்பன ஏற்படுத்தப்பட்டன. 1951இல் பாடசாலையில் மேல்மாடிக்கட்டடம் விடுதிச் சாலையாகவும், கீழ்மாடிக்கட்டடம் பாடசாலையாகவும் இயங்கியது. அருட்சகோதரிகளின் சாட்சியமான வாழ்வு அர்ப்பணமிக்க பணிகள் அனைத்து மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றதாக அமைந்தது. பங்குத் திருஅவையோடு இணைந்து மறைப்பணி, பங்குப்பணி, கல்விப்பணி என்பவற்றை ஏழைகளை முன்னுரிமைப் படுத்தும் பணிகள், சமூக சமய பொது நலப்பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டனர். தையல் பயிற்சி வகுப்புக்கள், எமில்நகரில் ஏழைகளுக்கான வீடமைப்புத்திட்டம், வேலைவாய்ப்புக்களுக்கான தொழிற்சாலைகளை அமைத்தல், தாழ்வுபாடு, அரிப்புக் கிராமங்களில் வாழ்வாதாரப்பணிகளை முன்னெடுத்தல் போன்ற இவர்கள் புரிந்த பணியின் மூலம் பல நன்மைகளை மக்கள் பெற்றனர்.

மக்களின் வேண்டுகோளிற்கமைவாகவும், பங்குத்தந்தையர்களின் வேண்டுகோளிற்கமைவாகவும் மன்னார் மறைமாவட்டத்தின் ஏனைய பங்குத்தளங்களிற்கும் அருட்சகோதரிகளின் பிரசன்னம் விஸ்தரிக்கப்பட்டது. இதற்கமைவாக பேசாலை 1926, வங்காலை 1935, வவுனியா 1940 பள்ளிமுனை 1946, நானாட்டான் 1960, பறப்பாங்கண்டல் 1960, பண்டிவிரிச்சான் 1964, மடு 1969, தலைமன்னார் 1976, அரிப்பு 1996 ஆகிய இடங்களில் கன்னியர் இல்லங்கள் அமைத்து கல்வியையும், பங்குப்பணி, சமூகப்பணிகளையும் முதன்மைப்படுத்தி பணியாற்ற ஆரம்பித்தனர். மன்னார் மறைமாவட்டத்தின் கல்வி, ஆன்மீக ஒழுக்க வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். காலத்திற்குக் காலம் ஏற்படும் தேவைகளுக்கேற்ப இறை பிரசன்னத்தில் தம் வாழ்வையும், பணியையும் புதுப்பித்து பல்வேறு பணிகளை முன்னெடுப்பதுடன், மன்னார் மறைமாவட்டத்தில் பல குருக்கள் துறவிகள் இறையழைப்புப் பெறவும் உருவாக்கியுள்ளதுடன், கல்வியூடாக பல புத்தி ஜீவிகளையும் கற்றோர் தொகையையும், ஆற்றலுடைய நற் சமூக தலைவர்களையும் நல்ல மனிதர்களையும் உருவாக்கியுள்ளனர். மன்னார் மறைமாவட்டத்தின் திருக்குடும்ப சபையின் மையமான இத் திருக்குடும்ப இல்லம் 125 வருடங்களின் நிறைவைக் கொண்டாடும் இவ் யூபிலி ஆண்டிலே இவ்வில்லத்தின் ஊடாக இறைவன், காலத்திற்குக் காலம் வல்லமையான பல செயல்களை ஆற்றி வரலாற்றில் தடம் பதிக்கச் செய்துள்ளார். பல்வேறு இடப் பெயர்வுகள், போரின் வடுக்கள், சவால்களைத் தாண்டி இவ்வில்லம் வளர்ந்து வந்தாலும் காலத்தின் அடையாளங்களுக்கேற்ப இறைபணியாற்றி வருகின்றது. ●

திருக்குடும்ப சபை மன்னார் மண்ணில் தடம் பதித்து 125ஆவது யூபிலி ஆண்டை கொண்டாடும் வேளையில் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா இவர்களது அயராத பணிகளை நினைத்து நன்றி கலந்த வாழ்த்துக்களைக் கூறி மகிழ்கின்றது.

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# சுற்றுச்சூழலியம், ஓர் கிறீஸ்தவப் பார்வை

– பீ.வினோராச், கிளரீசியன் சபை –

## அறிமுகம்

தாயகத்தின் கோடையையும், தமிழகத்தின் சுட்டெரிக்கும் கத்தரி வெய்யிலையும் கூட நான் கடந்து வந்திருக்கின்றேன். கோடையும் சோழகமும் சோடியாக வருவதாலோ தெரியவில்லை, வெப்பம் ஒரு பொருட்டு என நான் கருதியதில்லை. ஆனால் ஐரோப்பாவில் இது எனக்கு முதல் கோடை. இங்கு குளிரை விட வெயிலெனும் போதுதான் வெளியிற்செல்ல தயங்கும் ஒரு புது உணர்வு. போர்க்களத்தில் பிறந்து அகதி முகாம்களில் வளர்ந்து ஆயுதங்களின் கோர ஒலிகளையும், அழு குரல்களையுமே ஆங்காங்கே தாலாட்டாய் கேட்டு வளர்ந்த ஒரு அனுபவமே எம் பலரின் உள்ளக் கிடக்கைகளில் புதைந்து கிடக்கின்றது. நடந்து வந்த பாதைகளை பலரில் ஒருவனாக நானும் திரும்பி பார்க்கும் போது பல வகையான எண்ணங்கள் மலர்ந்து மறைகின்றன. இவை எனக்குள் உற்பத்தி செய்யும் உணர்வலைகள் ஏராளம். இவை இவ்வாறு இருக்க புதியதோர் நிலப்பரப்பில் பிறிதோர் அரசியல் கலாசார பெருவெளியில் நான் காணும் நிதர்சனங்கள் பல வேளைகளில் ஆச்சரியமாகவும், விநோதமாகவும் இருப்பதுண்டு. அவை பல்வேறு வகையானதாக இருப்பினும் ஒரு விடயத்தை மட்டும் சற்று ஆழமாகவும், அழுத்தமாகவும் ஆய்வு செய்ய விரும்புகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் பாடப் புத்தகத்தில் பரீட்சைக்காய் மட்டும் படித்த சுற்றுச் சூழலிலும் இங்கு அரசியல் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் தேர்தல்களில் பேசுபொருளாக மாறி இருப்பதும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இக்கருத்தியலை முன்னிறுத்தும் அரசியல் கட்சிகள் அண்மைக் காலங்களில் பெறும் மக்கள் ஆதரவு போன்ற விடயங்கள் எனக்குள் பல சிந்தனைகளை பிரசவிக்கின்றன.

## மாறிவரும் மனித வாழ்வியல்

இப்பூமி பந்தின் வரலாற்றினை சற்றே இரைமீட்டுப் பார்த்தால் என்றுமே மனித குலம் தன் வாழ்வுக்கான. வளர்ச்சிக்கான தேடலில் முழு முனைப்போடு ஈடுபட்டிருப்பது எமக்குத் தெளிவாகின்றது. சாயல்கள் மாறினாலும் இத்தேடல் இன்றும் உயிரோட்டமுடன் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த 21ஆம் நூற்றாண்டில் இடம்பெறும் தேடலின் இலக்காய் இயற்கை அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாய் இயற்கையுடன் இரண்டறக்கலந்திருந்த மனித வாழ்வியலானது அண்மைக் காலங்களில் வளர்ச்சி, நாகரீகம், முன்னேற்றம் என்ற தேவையான ஆனால் மனிதனை மட்டும் முன்னிறுத்திய ஏனைய படைப்புக்கள் மீதான ஓர் ஆதிக்க மனோநிலை எம்மில் மேலோங்கியிருக்கின்றது. இதன் காரணமாய் இயற்கையுடன் நாம் கொண்டிருந்த உறவு முறிவடைந்திருக்கின்றது என்றுதான் கூறவேண்டும். இன்று பல நாடுகளில் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள ஒன்றுக்கொன்று முரணான காலநிலை மாற்றங்களும் பேரழிவுகளை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களும் இவ் உறவுமுறிவின் வெளிப்பாடுகளே. வெயிலில் குளிரும், குளிரில் வெப்பமும் பணம் படைத்தவர்களுக்கு சாத்தியமாகின்றது. ஆனால் ஒரு வேளை உணவிற்கும் ஒரு குடம் குடிநீருக்கும் வெறுமனே அடிப்படை தேவைகளுக்கும் தினம் தினம் போராட வேண்டிய நிலையில் உள்ள உலகின் பெரும்பான்மை குடிமக்களாம் ஏழைகளின் நிலையென்ன? எத்தனை உயிர்களையும் பலிகொடுத்து தத்தம் அரசியல் அதிகார இருக்கைகளை தக்கவைக்க தயங்காத மக்கள் தலைவர்கள் மலிந்து விட்ட இத்தரணியில் இயற்கை தாயின் அழுகுரல் கேட்க யார் தயார்? இப்படி கேள்விகளை இன்று பலரும் எழுப்புகின்றார்கள் என்பதும் உண்மைதான். நிச்சயமாக இவர்களின் முயற்சிகள் பாராட்டப்படவேண்டியது தான். ஆனால் இவற்றை வெறுமனே அரசியல், பொருளாதார, அறிவுசார் ஒழுக்கநெறிகளுக்குள் மட்டுப்படுத்துவது எந்த அளவுக்கு ஆரோக்கியமானது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கடவுள் தொடங்கி மனிதன் மற்றும் ஏனைய உயிருள்ள, உயிரற்ற அத்தனை விடயங்களையும் வெறுமனே இலாபம் ஈட்டக்கூடிய விற்பனை பொருளாய் குறுக்கி விட்ட வர்த்தக நுகர்வு கலாசாரத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சுற்றுசூழல் பாதுகாப்புக்கூட சுய இலாபம் தேடும் கட்டமைக்கப்பட்ட விம்பமாய் மாறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

## சூழலியமும், கிறீஸ்தவர்களும்

இவ்விடயத்தில்தான் உலகிற்க்கு ஒளியாய் வாழ அழைப்புப்பெற்ற கிறிஸ்தவர்களாகிய எங்கள் கடமைகள் என்ன என்ற தேடல் தொடங்க வேண்டும் (மத்.5:14-16) கிறிஸ்தவர்களாகிய எமக்கு இது தட்டிக்கழிக்க முடியாத கடமை. நீண்ட நெடிய நம் பாரம்பரியத்தின் நிகழ்கால ஆன்மிகக் கடமை. ஏனெனில் எம்மை பொறுத்த மட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது எம்மையும் நாம் தங்கி வாழும் சூழலையும் பற்றியது மட்டுமல்ல. மாறாக இவை அனைத்திற்கும் அடிநாதமாய் அமைந்த பேர் அன்பு கொண்டு எம்மை தாங்கும் இறைவனையும் பற்றியது அவருக்கும், எமக்கும், நாம் காணும் படைப்பனைத்திற்கும் இடையிலான ஆழமான உறவைப் பற்றியது. பரந்து விரிந்த இப்பிரபஞ்சத்தின் இற்றைவரைக்குமான வரலாற்றை ஒரு நூலாய் தொகுத்தால் அதன் இறுதி 2,3 பக்கங்களில் தான் மனித வரலாறு தொடங்குகின்றது என்கின்றார்கள் அறிவியலாளர்கள். இதனையொத்த படைப்பின் ஒழுங்குமுறையைத்தான் விவிலியமும் எமக்கு விபரிக்கின்றது (தொ.நூ 1:1-31) இயற்கையின் அனைத்து கூறுகளையும் அதனதன் தனிப் பண்புகளோடு படைத்த பின் இறைவன் மனிதனை தன் சாயலாக உருவாக்கினார். (தொ.நூ.1:26) ஆகவே நாம் படைப்பில் தனித்துவமானவர்கள் தான். சிறப்பு மிக்கவர்கள்தான் இறைவனின் இதயத்திற்கு நெருக்கமானவர்கள்தான். இருப்பினும் இப்பண்புகளை நாம் ஏனைய படைப்புக்களின்மீது செலுத்தும் அளவு மீறிய ஆதிக்கத்தின் ஊடாகவும், அவற்றை சிதைப்பதனுடாகவும் வெளிப்படுத்துவது நாம் செய்து வருகின்ற மிகப்பெரும் வரலாற்று பிழை. ஏனெனில் இறைவன், படைப்பு இதில் நாம் என்ற ஒழுங்கு முறை என்பது மாற்ற முடியாத ஒரு புனிதமான உறவுமுறை. கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (இல:291) படைத்தவரை பிரிந்து படைப்பாகிய நாம் நெடுநாள் இயங்கமுடியாது. (யோவான் 15:4-6, க.திம:இல338) எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் 2015ஆம் ஆண்டில் அனைத்துலக திருச்சபைக்கு எழுதிய ‘‘இறைவா உமக்கு புகழ்’’ என்ற சுற்று மடலில் இயற்கையோடு ஒன்றிணைந்த ஒரு வாழ்க்கை முறையின் தேவையினை வலியுறுத்துகின்றார்.

(இல.228) சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது வாழ்வை நேசிக்கும் ஒவொரு வருவரின் கடமையாக இருந்தாலும், கிறிஸ்தவர்களாகிய எமக்கு இறைவனே ஒப்படைத்த பாரிய பொறுப்பு. இதனைத் தொடர்ந்து ஆற்றுவதனுடாக மட்டும்தான் நாம் படைப்புக்கள் அனைத்திலிருந்தும் தனித்துவமானவர்கள் என்ற அடையாளத்தை வெளிப்படுத்த முடியும். எமது விவிலியப்பண்பாட்டிலும் சரி, நீண்டகால வரலாறு கொண்ட கீழைத்தேய மற்றும் மேலைத்தேய துறவற வாழ்விலும் சரி, பல்வேறுபட்ட மனிதர்கள் இறைவனைக் காணவும் ஆழமான ஆன்மிக அனுபவம் பெறவும் இயற்கையைத்தான் நெருங்கிச் சென்றார்கள்.

## விவிலியத்தில் இயற்கை

மோயிசனுக்கும், இறைவனுக்குமான சந்திப்புக்கள் சினாய் மலையில் தான் இடம்பெறுகின்றன. (விப:19) இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கைப் பயணங்களில் இறைவன் தன்னை நெருப்பு, மேகம், காற்று என்ற இயற்கை கூறுகள் ஊடாக வெளிப்படுத்தி இருக்கின்றார். அவர் தன் உடனிருப்பை உறுதி செய்து தம்மை பசும்புல் வெளிகளுக்கும் அமைதியனான நீர்நிலைகளுக்கும் அழைத்துச்செல்வதாய் தாவீது பாடுகின்றார் (திபா:23) எலிசா போன்ற இறைவாக்கினர்கள் இயற்கையிலேயே இறைவனைக் கண்டு கொண்டனர். (1அரச 19) இவ்வாறு பழைய ஏற்பாடு முழுவதுமே இயற்கையின் எழில்மிகு காட்சிகளால் நிறைந்து கிடக்கின்றது. இவை அனைத்தும் இயற்கை இறைமனித உறவின் ஊடகம் என்பதற்கான சான்றுகளே. இவைமட்டுமல்ல மனுவுரு எடுத்த இறைமகன் இயேசுவுக்குக் கூட தம்மை புடமிடுவதற்கு ஒரு தனிமையான பாலைவன அனுபவம் தேவையாக இருந்தது. (மத் 4:1-11) தந்தையுடன் உறவாட இயேசு இயற்கையின் இதமான தருணங்களை பலதடவைகள் தேடிச்சென்றார். (லூக் 5: 16, 6 :12) அவர் தம் இவுலக வாழ்வின் வலிசுமந்த அவ்விறுதி இரவு கூட ஒலிவ மரங்கள் சூழ்ந்த இயற்கையில்தான் கழிகின்றது. (மத்.26 :36-46) அனைத்துக்கும் மேலாக இயேசுவின் போதனைகள், அவற்றை மக்களுக்கு விளக்க அவர் கையாண்ட உவமைகள், காட்சிகள் அனைத்தும் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்த இயற்கையின் அனுபவங்கள். இவரின் இறப்பின்போது நிலம் நடுங்கியது, பாறைகள் பிளந்தன, நண்பகல் 12.00 மணிக்கு நாடெங்கும் இருள் உண்டாயிற்று என்று விளக்குகின்றன நற்செய்தி நூல்கள். (மத் 27:51) இவை யாவும் இயேசுவுக்கும், இயற்கைக்கும் இடையிலான நெருக்கமான உறவினையே விபரிக்கின்றன.

## இயற்கையும், புனிதர்களும்

இயற்கையோடு நாம் கொள்ளும் உறவிற்கு ஒரு ஆழமான மீட்கும் வல்லமை உண்டு. விவிலியத்தில் நாம் அடிக்கடி படிக்கின்ற இயற்கையின் அழகும், நன்மைத்தனமும் இறைவனின் மகிமையே என்கின்றார் புனித 2ஆம் அருள் சின்னப்பர். மண்ணையும், நீரையும், வயல் வெளிகளையும் காணும்போதெல்லாம் அவற்றில் நான் படைத்தவரின் நினைவுகளைக் கண்டு கொண்டேன் என எழுதினார் புனித அவிலா தெரசா. இறைவனை நாம் அனுபவிக்க இயற்கையை விட சிறந்த ஒரு ஊடகம் இருக்கவே முடியாது. இதைத்தான் புனித அகுஸ்தினார் ‘‘சிலர் இறைவனை அறிய நூல்களை படிக்கின்றனர். ஆனால் படைப்பெனும் மிகச் சிறந்த நூல் ஒன்று இருக்கின்றது அதை கூர்ந்து நோக்கி படித்துக் குறிப்பெடுங்கள். நீங்கள் தேடும் இறைவன் இவற்றைக் கொண்டு எழுதவில்லை. மாறாக தன் கை கொண்டு படைத்தவற்றை உங்களுக்கு அருளினார். இதனை விட சிறந்த குரல் ஒன்று இருக்க முடியுமா’’ என்றார். ஆகவே இயற்கையை விட்டு விலகிய ஓர் இறைத் தேடல் சாத்தியமற்றது. எனவே படைத்தவரை ஓரம்கட்டிய எந்தவொரு சுற்றுச்சூழல் முயற்சியும் விழலுக்கிறைத்த நீர் போல் ஆகிவிடும். நம்பிக்கையின் மக்களாகிய நாம் இதனை புரிந்துகொள்ளவேண்டும

## சமகால நிதர்சனங்கள்

நல்ல சமாரியன் உவமையில் சித்தரிக்கப்படும் வழிப்போக்கனின் நிலைதான் இன்று பூமித்தாய்க்கு. கள்வர் கையில் அகப்பட்டு, ஆடைகள் உரியப்பட்டு, அடித்து குற்றுயிராய் விடப்பட்டிருக்கின்றாள். புனித பிரான்சிஸ் அசிசியார் உரிமையோடு உறவு சொல்லி அழைத்த படைப்பு இன்று அவலக் குரல் எழுப்புகின்றது. கடல் தரை மலை என நீண்டு செல்லும் இயற்கை வளங்கள் சுயநலத்தோடு சுரண்டப்படுகின்றன. நீர், வளி, ஒளி போன்ற இயற்கையின் கொடைகள் நாளும் மாசுபடுத்தப்படுகின்றன. பறவைகள், விலங்குகள், மீனினங்கள் என விரிந்து செல்லும் உயிரினப் பன்மயம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றது. இது போன்ற வன்முறைகளில் ஈடுபடும் போதும், இச் செயல்களை கண்டுகொள்ளாமல் இருக்கும்போதும் நாம் படைப்பிலிருந்தும் படைத்தவரிடமிருந்தும் பிரிந்து செல்கின்றோம். இது மட்டுமல்ல எம்மைப் போன்ற எம் உறவுகளின் வாழ்வுரிமை மறுக்கப்படும்போதும் கேட்பார் யாருமின்றி மக்கள் கொத்துக் கொத்தாய் கொன்று குவிக்கப்படும் போதும், வாழ்விடம் தேடி வரும் அப்பாவி மக்களுக்கு போரையும் பேராயுத ஆலைகளையும் பொருளாதாரமாகக் கொண்ட நாடுகள் தம் வாயில்களை மூடும் போதும் மனுக்குலம் இறைவனுக்கு புறமுதுகு காட்டுகின்றது... ●

# வாழ்வு அளிக்கும் மண்

– அருட்சகோதரி மேரி றுவீனா, திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான் –

தொ.நூல் 2:7இல் இறைவன் மண்ணிலிருந்து மனிதனை உருவாக்கினார் என்று கூறப்பட்டிருப்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். இறைவனால் படைக்கப்பட்ட உலகில் உள்ள உயிரினங்கள் மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் அனைவருமே இந்த மண்ணில் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த மண்ணை, நிலம் என்றும், பூமித்தாய் என்றும் அழைக்கின்றோம். எனவே இந்த நிலம் அனைவரையும் வேறுபாடின்றி ஒதுக்கி வைக்காமல் அன்போடு வரவேற்று தன்னகத்தே தாங்கிக்கொண்டிருக்கின்றது. மரம், செடி கொடிகள் அனைத்தும் மண்ணிலே வேரூன்றி செழித்து வளர்ந்து பூத்துக்குலுங்கி, காய்த்துப் பழுத்து, மனிதர்களுக்கும், மிருகங்கள் பறவைகளுக்கும் பலன்கொடுத்துக்கொண்டிருப்பது மட்டுமேயன்றி இறைவனின் மாட்சியையும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றன. அத்துடன் தங்களுக்குள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து ஒற்றுமையாக, மகிழ்ச்சியாக வளர்ச்சியடைவதையும் காண முடிகின்றது. இன்னும் மண்ணையே உணவாக உண்டு மண்ணிலே ஊர்ந்து வாழும் உயிரினங்களும் மண்ணின் பெருமையை எமக்கு வெளிப்படுத்துகின்றன. மிருகங்களும் மண்ணிலே முளைத்தெழுந்த புல்பூண்டுகள் செடிகளை உணவாக உண்டு மண்ணிலே நடமாடி உறங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. பறவைகளும் மண்ணிலே மலர்ந்த மரங்களின் கனிகளை உண்ணும் போது கூவி அழைத்து ஒற்றுமையுடன் உண்ணும் காட்சியையும் நாம் கண்டு களிக்கின்றோம்.இறைவனின் சிறந்த படைப்புக்களாகத் திகழும் மனிதருக்கு வாழ்வதற்கு இந்தமண், நிலத்தை இறைவன் கொடுத்துள்ளார். நிலம் எல்லோருக்கும் உரிய பொதுச் சொத்தாக இறைவன் தந்துள்ளார். (லேவி 25:23) நிலத்தை அறுதியாய் விற்றுவிட வேண்டாம். ஏனெனில் நிலம் என்னுடையது என்று இறைவன் கூறுகின்றார். மேலும் (லேவி 25:12இல) நிலத்தினின்று அவ்வப்போது கிடைக்கும் பலனை உண்ணுங்கள் என்றும் (லேவி 25:19இல்) நிலமும் பலனைத்தருவதால் வயிறார உண்டு, பாதுகாப்புடன் நாட்டில் வாழ்வீர்கள் என்றும் இறைவன் கூறுகின்றார். இறைவன் கூறும் இந்த வார்த்தைகள் எல்லோருக்கும் உரியது. இறைவன் சமூகத்தில் அனைவரும் சமமானவர்கள். அனைவரும் வாழ்வு பெறவேண்டும் என்ற நோக்கில் இறைவன் இந்த நிலத்தை அனைவருக்கும் கொடுத்தார். ஆனால் நம் நாட்டில் நாம் வாழும் சூழலில் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதைச் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

வாழ நிலமில்லாமல் எத்தனை ஏழைகள் நிலத்தைப் பெற்றுக்கொள்ள அலைந்து திரிகின்றார்கள். சொந்த மண்ணில் கால்பதித்து குடியேறி வாழ முடியாமல் சொந்த மண்ணையே இழந்து தெரு ஓரங்களில் இருந்து, இரவு, பகலாக, வெயில், பனி, குளிர், பாராமல் கதறிக் கூக்குரலிடும் மக்களின் துன்பத்தைத் துடைக்க, துயர்போக்க, குரல்கொடுக்க முன் வருகின்றோமா? தரிசுகளாகக் கிடக்கும் நிலத்தை இல்லாதோருடன் பகிர்ந்து, மண்ணைத் தகுந்த முறையில் பயன்படுத்த முயற்சி செய்கின்றோமா? எத்தனை பேர் நிலத்தை அபகரித்துப் பணக்காரராகப் பெரிய வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நிலம் இறைவனுடையது. அனைவருக்கும் உரியது, இறைவன் ஏழைகளாக எவரையும் படைக்கவில்லை. வசதி படைத்த நாங்கள் வைத்திருக்கும் நிலம், சொத்துக்கள் அனைத்தும் ஏழைகளுடையது என்பதையும் நாம் உணர்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த மண்ணுக்காக எத்தனை பேர்கள், எத்தனை சண்டைகள் இவற்றால் இந்த நிலம் காயப்படவில்லையா? அசுத்தமாக்கப்படவில்லை இறைவனின் தூய்மையான இந்த மண்ணை எம்முடைய தீய செயல்களால் காயப்படுத்தாமல், சுத்தம் செய்யப் பாதுகாக்க முன் வருகின்றோமா? நாம் எப்படியும் வாழலாம் என்று நினைத்து வாழமுற்படலாம். நாம் ஏராளமான சொத்தை, நிலத்தை வைத்திருக்கலாம். ஏழைகளோடு தேவைப்பட்டவர்களோடு பகிர்ந்து வாழாமல் இருக்கலாம். மற்றவர்களை ஏற்றுக்கொள்ளாமல் புறந்தள்ளி விடலாம். ஆனால் எங்கள் வாழ்வின் இறுதிக்கட்டத்தில் பணக்காரரோ, ஏழைகளோ, ஒதுக்கப்பட்டவர்களோ அனைவரையும் சமமாக ஏற்று அன்புடன் வரவேற்பது ‘‘இந்த மண்ணோ’’ ஆறடி நிலம். இதை உணர்வோம், சிந்திப்போம். நாம் உயிருடன் இருக்கும் பொழுதே இறைவனின் சொத்தாகிய இந்த மண்ணை அனைவரோடும் பகிர்ந்து ஒற்றுமையாக, மகிழ்ச்சியாக வாழ முயல்வோம், ஏனெனில் இன, மத, சாதி வேறுபாடின்றி அனைவரையும் இறுதிக்கட்டத்தில் அன்புடன் ஏற்றுக்கொள்வது ‘‘இந்த மண்ணே’’ ‘‘மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டாய் மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்’’ எனவே மண்ணை நேசிப்போம், தூய்மையாகப் பாதுகாப்போம், பகிர்ந்து வாழ்வோம். ●

மன்னார் மறைசாட்சிகளின் யூபிலி ஆண்டை முன்னிட்டு சிறப்புக் கட்டுரை

# மன்னார் மறைசாட்சிகள்

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாற்று ஆய்வு

– அருட்பணி. ம.க. அருள்பிரகாசம் –

தொடர் – 3

**1.2 மன்னார் மாதோட்ட பூர்வீக குடியிருப்பாளர்கள்**

இலங்கை வரலாற்று மரபு பற்றிய கோட்பாட்டின்படி எமது பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர், வேடர் சமூகத்தினரே என அனைத்து வரலாற்று சமூகவியல், மானிடவியல் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இப் பூர்வீக மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இங்கு வாழ்ந்தார்கள் என்ற சான்றுகள் உள்ளன. இலங்கையில் வாழ்ந்த பெரும்பான்மையான சமூகத்தவர்கள் நாகர்களாவர். இவர்கள் தமக்கெனப் பல அரசுகளை அமைத்து தமக்கே உரித்தான திராவிட கலாசாரத்தில் மேலோங்கி வாழ்ந்தனர். ஈழத்துத் தமிழ் நாகர்கள் இந்தியாவிலிருந்தோ அல்லது வேறு இடங்களில் இருந்தோ வந்தவர்களல்ல மாறாக முற்கால லெமூரிக்கண்டம் கடல் கோள்களால் அழிக்கப்பட்ட போது இலங்கை ஒரு தனித்தீவாகப் பிரிக்கப்பட்டது. அவ்வேளையில் அங்கிருந்த மக்களான இயக்கர், நாகர் ஆகியோர் அப்படியே பிரிக்கப்பட்டு இலங்கையில் பூர்வீக சுதேச மக்களாக வாழ்ந்து வருகின்றனர். இதற்கான தொல்பொருள் சாட்சியம் சீனா தேசத்தில் மாகோ மாநிலத்தில் ஒரு தொல்பொருள் காட்சியகத்தில் தான் நேரடியாகக் கண்டதாக ஆய்வாளர் **ஜெகநாதன்** கருத்து வெளியிட்டுள்ளார். மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் மன்னார்த்தீவிலும், மாதோட்டத்திலும் தொடக்கக் காலத்திலிருந்தே வசித்து வருபவர்கள் ***குருகுல நாகர்களாவர்*** என எடுத்துக் கூறுகின்றன. (கமலநாதன்: 2005:61) குருகுல மேன்மக்கள் செம்படவர் நுழைஞர் போன்ற மீன்பிடிப்போருடன் சமப்படுத்தி நோக்கப்படக்கூடாத நாட்டாண்மைக் காரரேயாகும். (வேலுப்பிள்ளை: 1918: 177-178) நாட்டாமைக்காரர் என்பது நாட்டை ஆண்டவர்கள் எனப் பொருள்படும்.

இக்குருகுல மேன்மக்கள் முத்தமிழரசர் காலத்தே பிரதானிகளாக விளங்கியவர்களாவர். (வேலுப்பிள்ளை: 1918:177) மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த (பெரியநாவற்குளம்) எதிர்மனசிங்க முதலியார் சல்வதோர் சூசைப்பிள்ளை, திருகோணமலை நொத்தாரிசு வருணகுலசிங்க முதலியார் ஆகியோர் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார்பண்ணை, கொக்குவில், கோண்டாவில் முதலிய இடங்களில் தமிழரசர்கள் காலத்தே பிரதானிகளாய் வாழ்ந்தவர்களின் நெருங்கிய சுற்றத்தவர்களாகும். இவர்கள் கொடி, குடை, ஆலவட்டம் தலைப்பற்று (பாகை), நாதசின்னம் தவில, தாளம் போன்றவற்றிற்கு உரித்துடையவர்களாகும்.

குடிமக்களும் இவர்களுக்கு இருந்தனர். (யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன் : 1891 ஆடி மாதம் 4வது சனிக்கிழமை) குருகுல அரசர்கள் தமிழ்ப்பிரதேசங்களில் பரந்து காணப்பட்டனர். (Raaghavan:1961: 138) குருகுலத்தவர்கள் காஞ்சிபுரம், காவேரிபூம்பட்டனம், கீழ்க்கரை, குருநாடு போன்ற இடங்களிலிருந்து குருகுல, வர்ணகுல (Ragupathy: 1987:208) தலைமையின் கீழ் மன்னார்த்தீவு மாதோட்டம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் வந்து குடியேறினர்.

மன்னார்த்தீவில் வாழ்ந்த மக்கள் அஞ்ஞானிகளாகவும் காட்டில் கிடைக்கும் பழங்களை உண்டு வாழ்ந்தனர் என்றும் (King Joao :letter: 1546) அரசர் ஜவோ பாப்பரசர் பவுல் – III என்பவருக்கு எழுதியுள்ளார்.

1556ஆம் ஆண்டு 70,000 மக்கள் கொழும்பிலும், நீர்கொழும்பிலும் ஞானஸ்நானம் பெற்றனர். இவர்கள் மன்னார் வேதசாட்சிகளுக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியாவில் வடலி என்னும் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மன்னாரில் வாழ்ந்த மக்களின் உறவினர்களாகும்.

**1.3 போர்த்துக்கேயர் கால மன்னார் கத்தோலிக்க வரலாறு**

கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான தோமையார் மன்னார்த்தீவில் கத்தோலிக்க சமயம் பரப்பினார் என்றும், மன்னார்த்தீவிலே சந்தோம் பட்டணம் இருந்ததாகவும் தற்போது எருக்கலம்பிட்டி என அழைக்கப்படுவதாகவும் வரலாறு உண்டு. சந்தோம் கிறிஸ்தவர்கள் மன்னார்த்தீவில் வாழ்ந்ததற்கான வரலாறு உண்டு என அன்ரனைனஸ் அமதி அடிகளார் தனது "மன்னார் வேதசாட்சிகள்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். 6ஆம் நூற்றாண்டில் சீரியா நாட்டைச் சேர்ந்த நெஸ்தோரியக் கிறிஸ்தவர்கள் அநுராதபுரத்தில் வாழ்ந்ததற்கான அடையாளமாக 'சிலுவை' ஒன்று அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு மாந்தையில் சீரிய மரபு மீறாத **திருமுழுக்குத் தொட்டியும்** அகழ்வாராட்சியின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கத்தோலிக்க வரலாறு மன்னார் கிறிஸ்வர்களின் மனமாற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பிரான்சிஸ்கன் சபையினரே முதல் முதலாக இலங்கையில் நற்செய்தி பரப்பினர். 1544ஆம் ஆண்டு இந்தியாவில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த புனித பிரான்சிஸ் சவேரியாரை தமக்கு வந்து ஞானஸ்நானம் தரும்படி மன்னார் மக்கள் அழைத்தனர். புனித சவேரியார் தமது நாமங்கொண்ட ஒரு திருத்தொண்டரை மன்னார்த்தீவுக்கு அனுப்பினார். அவர் வெகு விரைவாக ஞானஸ்நானம் கொடுத்தார். அதைக் கேள்விப்பட்ட திருக்கேதீஸ்வரக் குருக்கள் ஆத்திரமடைந்து சங்கிலி மன்னனுக்கு தகவல் அனுப்பினர்.

அவன் வந்து 600-700 பேருக்குமேல் கொலை செய்தான். சில கிறிஸ்தவர்கள் மாதோட்டத்திற்குத் தப்பியோடினர். (பெரேரா: கென்றிக்கஸ் கடிதங்கள் 1562) போர்த்துக்கேயர் கால மறைபரப்பாளர்கள் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் போதித்துப் பலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தனர். கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார்தான் மன்னார்த்தீவின் முதல் பங்குத்தந்தையாவார்.

சங்கிலியனின் கலாபனையினால் தப்பியோடிய 200 இந்துக் கரையார் மாதோட்டத்திலிருந்து தமது உறவினர்களுடன் பட்டித்தோட்டத்தில் தமது காலத்தில் வந்து குடியேறினர் எனக் குறிப்பிட்டுள்ளார். (பெரேரா: கென்றிக்கஸ் கடிதம் 1562) கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து அவர்களுக்கென பட்டித்தோட்டத்தில் ஒரு கோவில் கட்டினார். (Kuruppu: messenger : 1946) கோவா நகர ஆயரின் உதவியுடன் இயேசு சபைக்குருக்கள் மன்னார்த்தீவில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்க எண்ணியிருந்தனர். ஆனால் அது கைக்கூடவில்லை. இத்திட்டத்தைப் புன்னைக்காயலில் நிறைவேற்றினர்.

இயேசு சபையினர் மன்னார்த்தீவில் எருக்கலம்பிட்டி பகுதியிலும் பிரான்சிஸ்கன் சபையினர் மன்னார்த்தீவில் சவுத்பார், பெரியகடை, பள்ளிமுனை, மற்றும் சின்னக்கடைப் பகுதிகளிலும் மாதோட்டம் முழுவதிலும் பணியாற்றினர். பல சைவ சமயத்தவர்கள் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். இதுவே போர்த்துக்கேயர்கால மன்னார்த் திருச்சபையின் சுருக்க வரலாறாகும்.●

*(அடுத்த இதழில் தொடரும்)*

# இறைசாட்சிய மரணத்தால் மாண்படையும் கிறிஸ்தவ வாழ்வு

– S.A. யஸ்ரின், நெடுங்கண்டல் –

**அறிமுகம்.**

"உங்களுக்கு இவ் உலகில் துன்பம் துயரம் உண்டு. ஆனால் மனம் தளராதீர்கள். இவ் உலகை நான் வெற்றி கொண்டேன் என்ற இறைமகன் இயேசுவின் உயிர் உள்ள வார்த்தைகள் எம் கிறிஸ்தவ மக்களிடையே புதிய அர்த்தத்தை ஓர் புது விதத்தில் கொடுக்க ஆரம்பித்துள்ளது. திருச்சபையின் தொடக்கத்தில் தொடங்கிய வேத கலாபனைகள் வேதசாட்சி மரணங்கள் இறை மனிதர்கள் வதைக்கப்பட்டு கொலை செய்யப்படுவது. இறுதியாக கடந்த இயேசுவின் உயிர்ப்பு விழா திருப்பலியில் மேற்கொள்ளப்பட்ட மிளச்ச தனமான தாக்குதல்கள் இதற்கு விதிவிலக்கு அல்ல.

**இறை ஒளியில் வேதசாட்சி மைந்தர்கள்.**

எவன் ஒருவன் உண்மைக்கு சான்று பகர்ந்து துன்பப்பட்டு சாவை ஆண்டவர் இயேசுவுக்காக தனதாக்கிக் கொள்கின்றானோ அவன் வேதசாட்சி (Martyr) என அழைக்கப்படுகின்றான். அப்போஸ்தலர் பணி (22:20) திருவெளிப்பாடு (2:13, 17:6) இதன் பிரதிபலிப்பாக ஆதிகால கிறிஸ்தவர்களில் புனித முடியப்பரின் மரணம் இதற்குச் சான்று பகர்கின்றது. இதுதான் எமது திருச்சபை வரலாற்றில் காணப்படும் முதல் வேதசாட்சி மரணம். அவருடைய மரணம் எமக்கு இரண்டு விடயங்களை எடுத்துக் காட்டுகின்றது. முதலாவது உண்மைக்குச் சான்று பகர்தல் அடுத்ததாக இறைமகன் இயேசுவுக்காக தன்னுயிர் தியாகம் செய்தல் இரண்டும் இவருடைய வாழ்வில் அவரை மரணத்திற்கு இட்டுச்சென்றதுடன் அவ் வீர மரணம் அவரை புனித நிலைக்கு உயர்த்தியதுடன் இறைவனுக்காக தன்னுயிரை ஈர்ந்த மாவீரன் என்ற நிலையை வரலாற்றில் உருவாக்கியது.

**கிறிஸ்தவர்களின் பார்வையில் மரணம்.**

கிறிஸ்தவர்கள் மரணத்தை ஓர் மறுவாழ்வாக பார்க்கின்றார்கள் 1தெசலோனியர் 4:14இல் கூறப்பட்டுள்ளது போல "இறந்தவர் ஆண்டவர் இயேசுவில் மீளாத்துயில் கொள்கின்றார்கள்" என்பது ஆகும். இங்கு துயில் என்பது உடலின் நிலையை கூறி நிற்கின்றது. தொடர்ந்து தானியல் 12:2இல் சொல்லப்படுவது போல இறந்தவரின் உடல் மாத்திரம் நித்திரை கொள்கின்றது. ஆன்மா படைத்த பரமனுடன் சங்கமம் ஆகி விடுகின்றது. இங்கே உடலும் ஆன்மாவும் வேறு என்ற உண்மை புலப்படுத்தப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டில் ஆழ்துயில் என்பதைக் கிரேக்க மொழியில் (Koimaomai) அதன் உடைய பொருள் **படுத்து உறங்குவது** என்பது ஆகும். கிரேக்கர் தங்களுடைய நீண்ட தூரப் பயணத்தின்போது ஓய்வு எடுப்பதற்காக ஒரு விடுதியில் தரித்து நிற்பார்கள். இதனை அவர்கள் (Koimeterion) என அழைப்பார்கள். இவர்களுடைய நம்பிக்கையின்படி ஒரு நபருக்குக் களைப்பு என்பது நிச்சயம் ஏற்படும். ஆனால் அது எங்கு எப்படி என்பது மறைபொருள். இதனுடைய ஆழமான அர்த்தம் பூமியில் பிறந்த மானுடனுக்கு மரணம் நிச்சயம். ஆனால் அது எங்கு எப்போது ஏற்படும் என்பது இறைத்திட்டமாகும்.

அதுவும் இறை சன்னிதானத்தில் கிறிஸ்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகக் கொலை செய்யப்படுவது ஆண்டவரின் பார்வையில் மிக விலை உயர்ந்த ஒன்றாகும். ஆனாலும் மனித பார்வையில் மிகவும் ஓர் துன்பியல் நிறைந்த நிலையாகும். ஏனென்றால் மனித பிறவி ஓர் அற்புதமான பிறவி. படைப்புக்களில் உன்னத படைப்பு இப் படைப்பு ஆகும்.

**இலங்கையில் கிறிஸ்தவம்.**

எமது இலங்கைத் தீவில் கிறிஸ்தவம் ஆனது 16ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் பெரியளவில் செழித்துக் காணப்படவில்லை. ஆனால் சில உள்ளூர் பாரம்பரியங்கள் புனித தோமையாரும் அவருடைய சீடர்களும் எமது தீவில் மறை பணியில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது. போர்த்துக்கீசர் குறிப்பாக புனித பிரான்சிஸ் சவேரியாரும் அவருடைய ஏனைய பணியாளர்களும் இணைந்த ரோமன் கத்தோலிக்கத்தை யாழ்ப்பாண இராச்சியத்திற்கு கொணர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசனாலும், மற்றும் டச் காரர்களாலும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவ்வேளையில் இத்துன்புறுத்தலின் நிமித்தம் சில கத்தோலிக்கர் ஒன்றிணைந்து மாந்தை எனும் இடத்தில் ஆரோக்கிய அன்னையின் சுரூபத்தை வைத்து வழிபட்டதாகக் கூறப்படுகின்றது.

1670ஆம் ஆண்டளவில் இடம்பெற்ற டச் காரரின் படையெடுப்பு மற்றும் கிறிஸ்தவர்கள் மேலான துன்புறுத்தல்கள் என்பன மடு என்ற பிரசித்தி பெற்ற அன்னையில் வழிபாட்டுத் தலம் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தது. 20 குடும்பம் மாந்தையில் இருந்து அன்னையின் சுரூபத்தை எடுத்துச் சென்று பாதுகாப்பான வனப்பகுதியில் மறைத்து வைத்து வழிபாடு செய்ததாகக் கூறப்படுகின்றது.

**புனித யோசேவ்வாஸ் அடிகளாரும் கத்தோலிக்க விசுவாசப் பரம்பலும்**

புனித யோசேவ்வாஸ் என்ற (Oratorion) சபையைச் சார்ந்த குருவினால் 17ஆம் நூற்றாண்டில் ஓர் சிறிய யாத்திரை ஸ்தலம் அமைக்கப்பட்டது. பிரித்தானியரின் படையெடுப்புக்குப் பின்பு கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட்டது. அத்தோடு உரோம் கத்தோலிக்க மக்களின் தொகை வெறுமனே 50000 பேரைக் கொண்டதாகவே காணப்பட்டது. (1796)

எமது தீவின் பல பகுதிகளில் இருந்து யாத்திரிகள் எமது மடுத்திருப்பதிக்கு வருகை தந்த வண்ணமே இருந்தார்கள். 1872ஆம் ஆண்டு மடுவின் ஆலய கட்டுமானப்பணியானது ஆயர் போஞ்சியின் என்பவரால் முன்னெடுக்கப்பட்டு அவருடைய ஆயரினால் மிகுதியான ஆலயக் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. (காண்க) D.G.A. பெரேரா (The Island) புனித பிரான்சிஸ் சவேரியார் ஓர் இயேசு சபை துறவியாவார். இவர் 7ஆம் திகதி சித்திரை மாதம் 1506ஆம் ஆண்டு ஸ்பேயின் (Spain) நாட்டில் பிறந்தார். இவர் அருளாளர் நிலைக்கு (Beatification) 25 October 1619ஆம் ஆண்டு பாப்பரசர் 5ஆம் போல் (Pope Pavlov) என்பவரால் அறிவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பாப்பரசர் பதினைந்தாம் கிரகோரி என்பவரால் 12ஆம் திகதி பங்குனி மாதம் 1622ஆம் ஆண்டு திருச்சபையின் புனிதர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டார். 1543/1544/1545 ஆகிய மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் (Southern Eastern coust) மத்தியில் மறைபோதகப் பணியை ஆற்றினர். இப்பகுதி மக்கள் முத்துக்குளிப்பவர்கள் ஆவர். குறிப்பாக மன்னார் வேதசாட்சிகளாக மரித்தவர்கள் இம்மக்களுடன் தொடர்பு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஆய்வாளர் ஜோன் மார்ட்டின் என்பவரின் கருத்துப்படி "1544ஆம் ஆண்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்பட்டது. புனித பிரான்சிஸ் சவேரியாரினால் அனுப்பப்பட்ட குருவானவராலும் ஒரு குழுவாலும் ரோமன் கத்தோலிக்கம் மன்னாரில் போதிக்கப்பட்டது. அதனை முதன் முதல் தழுவியவர்கள் மன்னார் தோட்டவெளி, பட்டித்தோட்டம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த மக்களாவர்.

இதனை இன்னும் சான்றுபடுத்தும் வகையில் தமிழ் பண்டிதர் C.S. நவரெட்டினம் என்பவர் தான் எழுதிய (Tamils and Ceylon) என்ற நூலில் இவ் வரலாற்றைப் பற்றியும் இதில் இறந்தவர்கள் இவ் இடங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கூறி நிற்கின்றார். கத்தோலிக்க விசுவாசத்தைத் தழுவியதன் காரணமாக யாழ்ப்பாண இராட்சியத்தை ஆட்சி செய்த பரராஜ சேகரன் (சங்கிலி மன்னன்) என்பவனால் பல துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களால் அம்மக்களின் விசுவாசத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் போகவே அப்பகுதியில் வாழ்ந்த 600 முதல் 700 பேருக்கு உட்பட்டவர்களை வாளுக்கு இரையாக்கினான். இந்நிகழ்வைப் புனித பிரான்சிஸ் சவேரியார் தனது உரோமாபுரிக்கு எழுதிய மடலில் உறுதிப்படுத்துவதையும், சான்று பகர்வதையும் காணக்கூடியதாக உள்ளது. இன்று இப்பகுதியானது வேதசாட்சிகளின் பூமி என அழைக்கப்படுகின்றது. அத்தோடு அங்கு செல்வோர் அற்புதமாகக் குணமடைவதையும் காணக்கூடியதாக உள்ளது. எமது முதாதையரின் வேதசாட்சி மரணம் இன்று எமது மக்களுக்கும் இன்றைய திருச்சபைக்கும் உறுதுணையாக உள்ளது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002029782

சிறப்புக் கட்டுரைகள்

# 200வது யூபிலி ஆண்டை நோக்கி

## போர்டோவின் திருக்குடும்ப சபை - வரலாற்றுப் பார்வை

அருட்சகோதரி. லுமினா போல்ராஜா
திருக்குடும்ப கன்னியர் சபை

தொடர் – 2



### திருக்குடும்பசபை வரலாற்றுக் கதாநாயகன்: மழலைப் பருவம்

பிரான்சிய அரசியற்புரட்சி தோன்றிய காலமது. அவலமான, அந்தகாரமான அழிவின் காலத்தில் முட்கள் நடுவில் றோஜாவாக, சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக. இருளில் ஒளிரும் சுடராக, ஆழ்கடலின் முத்தாகப் பிரான்ஸ் நாட்டில் உள்ள போர்டோவில் 1793ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 27ஆம் நாள் தந்தை லோறேயினுக்கும், தாய் மடலின் றிச்சட்டுக்கும் அன்புச் செல்வமாக "நல்வரவாக" மலர்ந்தவர்தான் பியன்வெனு. இவரின் வருகையின் போது இடம் பெற்ற புரட்சி திருஅவைக்கு ஒரு சோதனையின் காலமாகும்.

குருக்கள் பணியாற்ற முடியாத நிலை. மறுத்துப் பணிபுரிவோர்க்குப் பரிசு மரணமேடை இப்பயங்கரமான நிலையிலும் பியன்வெனுவின் பெற்றோர் மிகவும் துணிவும், உறுதியான விசுவாசமும் உள்ளவர்களாக இருந்தார்கள். கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவதனால் வரும் ஆபத்தையும் துச்சமென மதித்து, திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தைப் பியன்வெனு பெற வழிசமைத்தது. இவர்கள் தம் விசுவாசத்தை அறிக்கையிட்ட பொன்னாளாகவே இந்நாள் அமைந்தது.

### காலம் செய்த கோலம்

அன்னை மடியில் கொஞ்சி விளையாடி மகிழ வேண்டிய பியன்வெனு ஆயாவினால் வளர்க்கப்பட வேண்டிய சூழலை புரட்சி ஏற்படுத்தியது. புரட்சியின் தாக்கமும், பொருளாதாரக் காரமும் பியன்வெனு மூன்று வயது வரை குடும்பத்திடமிருந்து பிரிந்து வாழும் நிலையை உருவாக்கியது. மூன்று வயதின்பின் மீண்டும் பெற்றோருடன் இணைந்து வாழ்ந்தார் பியன்வெனு. தாய் மிகவும் அன்பாகவும், கண்டித்துத் திருத்தியும் இறைவனுக்கு உகந்த பிள்ளையாக உருவாக்கத் தன் செபத்தினாலும், அறிவுரையினாலும் முயற்சி எடுத்தார். ஆனால் தந்தையோ அவ்வளவு கண்டிப்பின்றி, அக்கறையின்றி தன் தொழிலில் கூடிய கவனத்தைச் செலுத்தினார். தந்தையின் இந்தப் போக்கு பியன்வெனு தன்விருப்பப்படி நடக்க சாதகமாக அமைந்தது. இவற்றின் மத்தியிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார். 1800-1810 வரை கல்வியைத் தொடர்ந்த பியன்வெனு உயர்கல்வியை முடிக்காமலே போர்டோ நகரில் மிகப் பெயர் பெற்ற சட்டவல்லுனர் திரு. பேரனத்தரின் செயலாளராகப் பணிபுரிந்தார்.

### இளமையின் ஓட்டத்திலே

மழலைப் பருவம் கடந்து இளமைப் பருவத்தை எட்டிய பியன்வெனு இளமையின் ஓட்டத்தோடு சேர்ந்து ஓடினார். கருநிற மயிரும், கருமையான விழிகளும், ஊடுருவிச் செல்லும் பார்வையும், வளைந்த மூக்கும், அழகான புன்னகையும், மகத்துவமான தோற்றமும், உறுதியான இலட்சிய நடையும், அமைதியும் அருளும் கொண்ட உடலமைப்பும் கொண்ட பியன்வெனு இளமை என்னும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டார். இளமையின் இன்பங்கள் கட்டவிழ்க்கப்பட்ட நிலையில் இராப்பொழுதெல்லாம் நாடக அரங்குகளையும், களியாட்டங்களையும் நாடி நின்றார். இவரின் இளமையின் அழகும், கவர்ச்சியும், திறமையும் பல இளைஞர்களை கவர்ந்து இழுத்தது.

இதனால் படைத்தவரை மறந்து படைப்புக்களை நாடித் தேடினார். அன்னையின் அறிவுரைகள் புறக்குடத்து நீராக வழிந்தோடின. இவ்வாறான தன்மைகள் இருந்தபோதும், இவரின் துடிப்பான போக்கும், துணிவும், நினைத்ததைச் செய்து முடிக்கும் தன்மையும், தலைமைத்துவப் பண்பும் கொண்ட இவர், மனிதத்தை மதிக்கும் தன்மையும், கருணையும், இரக்கமும், கனிவும் கொண்ட பிறரன்பின் செயல்களை எவராலும் தடைசெய்யவும் முடியவில்லை. பியன்வெனுவின் இத்தகைய போக்குகள் "இப்புத்திரன் எதிர்காலத்தில் எப்படி இருப்பானோ?" எனப் பெற்றோரைச் சிந்திக்க வைத்தது. ஆனாலும் பியன்வெனுவின் தாய், மனம் சோர்ந்துபோகவில்லை. மகன் என்றாவது ஒருநாள் மனம்மாறி படைத்தவரைப் பற்றிக் கொள்வான் என்ற ஆழமான விசுவாசத்தில் உறுதியடைந்தவராக இடைவிடாத செபத்தில் நிலைத்திருந்தார்.

### உள்ளத்தின் போராட்டம்

இளமையின் ஓட்டத்திலே அலைகடலின் படகாக அலைக்கழிக்கப்படுகின்றார் பியன்வெனு. எதிலும் அமைதி காணாது தவிக்கின்றார். புயலில் அடிபட்ட படகு கரை ஒதுங்கி நிற்பது போன்று பியன்வெனுவும் கரையேறி நிற்கின்றார். உயர்படிப்பை முடிக்குமுன்னரே சட்டவல்லுனர் பேரனத்தரின் செயலாளராகப் பணி புரிகின்றார். அப்பணி இவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இயற்கையாகவே ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், வயோதிபர் மட்டில் இரக்கமும், கருணையும், கரிசனையும் கொண்டு தியாகச் செயல்கள் செய்துவந்த பியன்வெனுவின் தனித்தன்மையின் ஆளுமை தற்போதைய பணியில் ஒரு வெறுமையை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல, தன்னுடைய ஆற்றல்களை அடக்கி வைப்பதாகவும், அவை மற்றவர்களுக்கு பயன்கொடுக்க முடியாதவாறு ஒடுங்கி இருப்பதையும் உணர்கின்றார். தன் வாழ்வின் இலக்கு என்ன? என்பதை இனம்கண்டு கொள்ள முடியாது தவிக்கின்றார். உள்ளத்தின் போராட்டம் விடாது தொடர மறுபுறம் தன் அறிவைப் பெருக்க முயற்சி எடுக்கின்றார். ஓய்வு நேரங்களில் மானிட இயல், ஸ்பானிய மொழி என்பவற்றைக் கற்பதுடன் சங்கீதம், ஓவியம், தொழில்நுட்பம், பிரான்சிய இலக்கியம் என்பவற்றையும் கற்று கற்பனையில் கவிதை, கட்டுரை, கதைகள், பாடல்கள், வரலாறுகளை இயற்றினார். இப்படியாகத் தொடர்ந்த குழப்பமும், முயற்சியும் பியன்வெனுவின் வாழ்வில் ஒரு தெளிவைத், திருப்பத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1810ஆம் ஆண்டில் மடாதிபதி மாத்திக் கோட்டே என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட நட்புரிமைச் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். இச்சங்கத்தின 'நற்செய்தி ஏட்டின் ஒரு பகுதிக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்' என்பதும், அது தலைவருக்குக் கையளிக்கப்படவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விதமாக பியன்வெனுவின் வாழ்வு நாளுக்கு நாள் சிறிது சிறிதாக மாற்றம் அடைந்து வந்துகொண்டிருந்தது.

### திருப்பத்தில் ஓர் தரிப்பு

1812ஆம் ஆண்டு ஆனி 27ஆம் நாள் தந்தையை இழந்த பியன்வெனு தன் குடும்பத்தை உற்று நோக்கினார். உடன்பிறப்புக்கள் ஏதோ ஒரு வகையில் குடும்பத்தைத் தாங்கி நிற்க, தான் பயனற்ற ஓர் வாழ்வு வாழ்வதாக உணர்கின்றார். வாழ்க்கையைப் பின்நோக்கிப் பார்க்கையில் எப்பக்கம் முன்னோக்கிச் செல்வது என்று புரியாது தவிக்கின்றார்.

உலகத் தொழில்களில் இருந்த போலித் தன்மைகள், இரக்கமற்ற செயல்கள், பணத்துக்காகச் செய்யும் பணிகள் தொழில் மட்டத்தில் அவநம்பிக்கையையும், இருளான நிலைகளையுமே காட்டி நின்றன. வைத்தியத்துறை, இராணுவத்துறை எல்லாம் சென்று பேரும், புகழும் பெற்றும், திருப்தியற்ற நிலையில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீடு திரும்பிய பியன்வெனு, தரித்து நின்று சிந்திக்கின்றார். எத்திசையில் கால் வைப்பதென்றே தெரியாது நின்ற பியன்வெனு, வாழ்க்கை என்ற ஓடத்தை ஒரே இடத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு நாலா பக்கமும் நிதானமாக நோக்கினார். உடல் வல்லமையும், மனோ சக்தியும் நிரம்பிய இந்த இனம் மனிதனுக்கு தொழில் வேட்டையில் தோன்றிய வெளிச்சங்கள் குருட்டு வெளிச்சங்களாகவே தோன்றின.●

(அடுத்த இதழில் தொடரும்)

# அமெரிக்காவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்

## – அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் பங்கேற்பு –

கடந்த யூலை மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை அமெரிக்கா நாட்டில் உள்ள சிக்காக்கோ மாநிலத்தில் இடம்பெற்ற பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மற்றும் ஏனைய நிகழ்வுகளில் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் கலந்துகொண்டார்.

மன்னார் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க குருவாகிய தமிழ் நேசன் அடிகளார் மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவர், மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர், மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவர் எனப் பல்வேறு பொறுப்புவாய்ந்த கலை, இலக்கிய, சமய, சமூக அமைப்புக்களில் பங்கேற்றுப் பணியாற்றிவருகின்றார். யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழில் எம்.ஏ மற்றும் கிறிஸ்தவ நாகரீகத்துறையில் எம்.பில் ஆகிய உயர் கல்விப் பட்டங்களைப் பெற்றுள்ள அடிகளார் இம்மாநாட்டில் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

**"தமிழியல் ஆய்வில் கமில் சுவலபில் அவர்களின் தனித்துவமான பங்களிப்பு"** என்ற தலைப்பில் தமிழ் நேசன் அடிகளார் இம்மாநாட்டின் ஆய்வரங்கில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றினார். 20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் மேலைநாட்டுத் தமிழ் அறிஞரான காலஞ்சென்ற கமில் சுவலபில் (1927 – 2009) அவர்கள் செக் குடியரசு எனப்படும் முன்னாள் செக்கோசிலோவாக்கியா நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய தமிழ்ப்பணி பரந்து விரிந்தது. இவர் ஏறக்குறைய 25 நூல்களை எழுதியுள்ளார். மொழியியல், இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புறவியல் பற்றிய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், விமர்சனங்கள், மொழிபெயர்ப்புக்கள் என ஏறக்குறைய ஐநூறுக்கும் மேற்பட்ட படைப்புக்களை வழங்கியுள்ளார். தமிழின் மிகப்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தை மொழிபெயர்க்கும் அளவிற்கு இவருக்கு தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் இருந்துள்ளமை எவருக்கும் வியப்பளிகக்கும் விடயமாகும். தமிழ் ஒலியே கேட்காத நாட்டில் இருந்துகொண்டே தமிழ் கற்று தமிழின்மேல் காதல்கொண்டு பல நூறு ஆய்வுகளை மேற்கொண்டவர். தமிழின் எல்லாத் துறைகள் பற்றியும் மேலைநாட்டினருக்கு அறிமுகம் செய்தவர். இருபதாம் நூற்றாண்டு மேலைத்தேய தமிழியல் ஆய்வாளர்களில் கமில் சுவலபில் அவர்களே தமிழுக்கு அதிகம் பங்களிப்புச் செய்தவர் எனலாம்.



இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் அறிஞர் பற்றிய ஆய்வுக் கட்டுரையே தமிழ் நேசன் அடிகளார் இம்மாநாட்டில் சமர்ப்பித்தார். இந்தப் பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணையோடும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (FETNA) மற்றும் சிக்காகோ தமிழ்ச் சங்கம் (CTS) ஆகிய அமைப்புக்களின் ஒத்துழைப்போடும் இடம்பெற்றது. அமெரிக்காவில் உள்ள ஏறக்குறைய ஐம்பது தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பான வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32வது ஆண்டு விழாவும் சிக்காகோ தமிழ்ச் சங்கத்தின் 50ஆவது ஆண்டுப் பொன்விழாவும் இணைந்ததாக இந்த மாநாடு இடம்பெற்றது. இவ்விரு நிகழ்வுகளும் யூலை 4ஆம் 5ஆம் திகதிகளில் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து யூலை 6ஆம் 7ஆம் திகதிகளில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. ஆகவே இந்த மூன்று நிகழ்வுகளும் யூலை மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையான நான்கு நாட்கள் சிக்காகோ மாநிலத்தில் உள்ள இலிநொயிஸ் (Illinois) என்ற நகரத்தில் இடம்பெற்றன. அமெரிக்காவில் இருந்தும் உலகின் ஏனைய பாகங்களில் இருந்தும் ஐயாயிரத்திற்கும் அதிகமான அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். இதைவிட தமிழரல்லாத தமிழ் அறிஞர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்று தமது தமிழ் தொடர்பான ஆய்வுளைச் சமர்ப்பித்தனர். இம்மாநாட்டை ஒட்டியதாக யூலை 4ஆம் திகதி இடம்பெற்ற வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் (FeTNA) ஆண்டு விழாவின்போது 'Global Tamil Hour' என்னும் பொது அமர்வில் இலங்கை சார்பாக தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரையாற்றினார். இலங்கையின் இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகவும் அத்துடன் பிரதான அமர்வுகளுக்கு புறம்பே நடைபெற்ற பல்வேறு கலந்துரையாடல்களிலும் பங்கேற்றார். குறிப்பாக பெற்னா அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலங்கை அரசியல் நிலவரம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

யூலை 14ஆம் திகதி வோசிங்ரன் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் வோசிங்ரனில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டு "தமிழ்ப் பணியில் அயலகத்தார்" என்ற பொருளில் சிறப்புரையாற்றினார். தமிழரல்லாத தமிழ் அறிஞர்கள் தமிழ் மொழிக்கு வழங்கிய பங்களிப்புக்கள் பற்றிய உரையாக இது அமைந்திருந்தது. 16ஆம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரை மேலைத்தேய கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் மற்றும் ஏனையவர்களின் தமிழ் பணிகளை அடிகளார் தனது சிறப்புரையில் கோடிட்டுக் காட்டினார்.

சிக்காக்கோ மற்றும் வோசிங்ரன் ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டதோடு பொஸ்ரன், நியூயோர்க், கலிபோனியா ஆகிய இடங்களையும் தரிசித்தபின்னர் யூலை மாதம் 24ஆம் திகதி நாடு திரும்பினார்.●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 13
## [உரோமையர். 01 - 16 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.10.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
9. “விவிலிய வினாவிடைப் போட்டி - 13”, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

**புதிய அலுவலக விலாசம்:**



மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.

### விவிலிய வினாக்கள்

01. கடவுளின் அன்பைப் பெற்று இறைமக்களாக அழைக்கப்பட்டவர்கள் எந்த நகர மக்கள்?
02. பிறருக்கு எதிராகத் தீர்ப்பு அளிப்போருக்கு கடவுள் அளிக்கும் தீர்ப்பு எவ்வாறானது?
03. நன்மை செய்யும் அனைவரும் கடைப்பிடிப்பது என்ன?
04. கடவுளின் வாக்குகள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன?
05. எண்ணற்ற மக்களினங்களுக்கு தந்தையாக்கப்பட்டவர் யார்?
06. திருச்சட்டம் தரப்பட முன்பும் உலகில் என்ன இருந்தது?
07. கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
08. திருச்சட்டத்தின் நிறைவு யார்?
09. உம்மைப் பழித்துப் பேசினவர்களின் பழிச்சொற்கள் என்மீது விழுந்தன என்று கூறப்படும் இறைவார்த்தைப் பகுதி எது?
10. அமைதி தரும் கடவுள் யாரை உங்கள் காலடியில் நசுக்கிப் போடுவார்?

### விவிலிய வினாவிடைப்போட்டி இல. 11 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ம. டக்ஷாயினி,
முருங்கன் கமம்,
முருங்கன்.

**இரண்டாம் பரிசு:**
டெரினா மரியதாஸ் ஜோண்,
இல: 47/02, தாஸ்கோட்டம்,
நெளுக்குளம்,
வவுனியா.

**மூன்றாம் பரிசு:**
கோமதாஸ் அனன்ஷிகா,
5ஆம் குறுக்குத்தெரு,
ஆஸ்பத்திரி வீதி,
சின்னக்கடை, மன்னார்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 66 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 59 பேர்.**

01. விஜயகாந்தன் கம்சிகா, செல்வபுரம்பங்கு.
02. கிங்ஸ்லி நிஸ்றின், யோசேவாஸ்நகர் பங்கு.
03. செ. மரிஸ்ரெலா, அடம்பன் பங்கு.
04. எ. பிரமிலா, பெரியகுஞ்சுக்குளப்பஙகு.
05. செ. மரிய றூபன், அடம்பன் பங்கு.
06. பி.ச. மேரி ஷியாந்திக்கா பிகிறாடோ, பள்ளிமுனைப்பங்கு.
07. அ. அபிலாஸ், தோட்டவெளிப்பங்கு.
08. ச. றெக்சாயினி, மிருசுவில்பங்கு.
09. அ கெரேனா, தோட்டவெளிப்பங்கு.
10. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியங்குளப்பங்கு.
11. பீ. கெவின் பிகிறாடோ, தேவன்பிட்டிபங்கு.
12. வி. மேரி விதுஷா, தேவன்பிட்டிபங்கு.
13. அ. மேரி அனோலின், கட்டைக்காட்டுப் பங்கு.
14. அ. ஆன்ஸ்ரெலா, கட்டைக்காட்டுப் பங்கு.
15. தி. அஜந்தினி, காத்தான்குளம் பங்கு.
16. தி. தனுஜன், காத்தான்குளம் பங்கு.
17. அ. கேஷியா வாஸ், பேசாலைப்பங்கு
18. அ. றொஷாந்தி, எழுத்தூர்ப்பங்கு
19. கிறிஸ்ரின் பிறைற்றன், செட்டிகுளம்பங்கு.
20. ச. அகஸ்ரின் பிகிறாடோ, பள்ளிமுனைப்பங்கு.
21. ம. டிஷாமினி, வேப்பங்குளப்பங்கு.
22. K. லூட்ஸ் வேழினி, தாழ்வுபாடுபங்கு.
23. S. டெல்சினா, கட்டைக்காட்டுப் பங்கு.
24. ம. திருசாளினி, வேப்பங்குளப் பங்கு.
25. ச. ஷெராபீன் பிகிறாடோ, பள்ளிமுனைப்பங்கு.
26. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியங்குளப்பங்கு.
27. சை. யேசுதாசன், கட்டைக்காட்டுப் பங்கு.
28. இ. ஆன் குளோடியா, கட்டைக்காட்டுப் பங்கு.
29. P. செல்வமதி, வஞ்சியங்குளபங்கு.
30. கு. ஆன் சினேகா, கட்டைக்காட்டுப் பங்கு.
31. ர. சர்மிலா, யோசேவாஸ்நகர்பங்கு.
32. கோ. அகஸ்ரா, யோசேவாஸ்நகர்பங்கு.
33. பீ. மேரி பிறிஜிற்றா, யோசேவாஸ்நகர்பங்கு.
34. அ. அருள்மேரி, ஆட்காட்டிவெளிப்பங்கு.
35. ம. ஆன் ஷைனுஜா, உயிலங்குளம்பங்கு.
36. அ. செஞ்சேய், குமிழமுனைப்பங்கு.
37. தி. திருமகன், குமிழமுனைப்பங்கு.
38. அ. அன்று கெமில்ரன், செட்டிகுளம்பங்கு.
39. P. விதுர்ஷிகா, பண்டாரவளைப்பங்கு
40. பு. யூஜின் லோஷன், தேவன்பிட்டிபங்கு.
41. நெ. அன்றோஜன் துரம், பள்ளிமுனைப்பங்கு.
42. G. ஜேம்ஸ் லோஷன், தேவன்பிட்டிபங்கு.
43. அ. தீபிகா றக்ஷாயினி, வஞ்சியங்குளப்பங்கு.
44. அ. அன்று லதிஸ்ரன், செட்டிகுளம்பங்கு.
45. J.N. டில்றுக்சி, தலவாக்கலைப்பங்கு.
46. F. டிறோஜினி, தேவன்பிட்டிபங்கு.
47. சி. ஷாந்தமேரி, ஆட்காட்டிவெளிப்பங்கு.
48. கொ. றஞ்சித் பறுனாந்து, முத்தரிப்புத்துறைப்பங்கு.
49. செ. டிலக்சிகா, ஆட்காட்டிவெளிப்பங்கு.
50. கொ. அகுஸ்ரினா பறுனாந்து, முத்தரிப்புத்துறைபங்கு.

# செம்மொழியாம் தமிழ் மொழி

**– கு. ஆன் பியூலிக்கா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார் –**

“எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும்!
மக்கள் இனம் என்ற தமிழ்நாடு தனக்கும்
திணையளவு நலமேனும் பயக்குமெனின்
செத்தொழியும் நாள் எனக்கு திருநாளாகும்”

நாட்டிற்காக இறந்தவர் உண்டு, நங்கைக்காக கூட பிரிந்தவர் உண்டு. பழிக்காக மாய்ந்தவர் உண்டு ஆனால் மொழிக்காக மரணித்தான் என்றால் அது தமிழனாகவும், தமிழுக்காகவுமே என்று நாம் தலை நிமிர்த்திக் கூற முடியும். இது வெறும் வார்த்தை மொழியல்ல வர்த்தக மொழியல்ல இது அறத்தின் மொழி குணத்தின் மொழி நேர்மையின் மொழி இது எமது வாழ்வியல் நெறி சொன்ன மொழி “தமிழை என் உயிர் என்பேன் - கண்டீர் உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே” என்ற சொல்லிற்குரிய மொழி. எந்தவொரு மொழியும் உயிரைக் கொடுக்காது உணர்வை ஊட்டாது, ஆனால் எம்மொழியாம் செம்மொழி உயிரிற்கு உணர்வை ஊட்டும், உடலிற்கு உரமேற்றும் வீரம் மாணம், காதல் என்பதை கருவில் வளர்க்கும் மொழி.

எம் மொழிகற்றவர் எவரும் முறைகெட்டுப் போவதில்லை. எம் மொழி கண்டவர் பலரும் இதை தம்மொழி எனக் கண்டவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முப்பால் கண்டது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் கொண்டது நான்காயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நாகரீகம் கொண்டது. இது வெறும் மொழியல்ல. இது ஒரு நாகரீகம் தமிழ் எனது நாகரீகம் தமிழ் எனது கலாசாரம் தமிழ் எனது பண்பாடு தமிழே எனது வாழ்வியல். “இது அறம் சொல்லி மறம் சொல்லி உறம் தந்த மொழி அகம் சொல்லி புறம் சொல்லி எம் தரம் காத்த மொழி” ஆனால் இன்று எங்குபோனது? எங்கே தொலைந்தது? மறந்துபோனதா? இல்லை இறந்து போனதா? எம் வாழ்வியல் நெறிமுறைகள் எங்கே? இன்று அகிலம் ஆளும் மொழிகளுக்கெல்லாம் அரிச்சுவடி தெரியாத காலத்திலே எம் மொழிக்கு இலக்கணம் கண்டு இலக்கியம் தந்த எம் குலம் எங்கே?

‘அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம்’ என்று ஆத்திச்சூடி சொல்லித்தந்த நம் பண்பாடு எங்கே? “மரப்பாய்ச்சி பொத்மையாகிலும் மாறாப்பை போட்டு விளையாடு” என்று சொல்லிக் கொடுத்த நம் கலாசாரம் எங்கே? ஆங்கிலம் தான் சிறந்தது ஆங்கிலக்கல்வியே உயர்ந்தது என தமிழன் என்று ஏற்றுக்கொண்டானோ அந்தப்புள்ளியில் தொலைந்தது நம் பாரம்பரியம். அதில் இருட்டடைப்பு செய்யப்பட்டது நம் வாழ்வியல் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் என்று கூறியது போன்று அடிமைத்தனத்தில் மோகம் கொண்டு தன் சுயத்தை இழந்து சூனியம் ஆகி நிற்கின்றான்.

இப்போது புரிகின்றதா மொழி என்பது வெறும் கல்வியல்ல. அது உன் கலாசாரத்தையே புரட்டிப்போடும் வல்லமை வாய்ந்தது.

‘வள்ளுவம் எங்கள் வாய்மொழியாகும். வன்மொழி எங்கள் படிப்பினையாகும்’ என்ற முடிக்கத்திற்கு சொந்தக்காரர்கள் நாம். அவன் கல்வியை தந்து உன் கலாசாரத்தை மாற்றி உன் சிந்தனையில் சீழ்பிடிக்க வைத்துவிட்டான். அவன் மொழி கற்பித்தான். அவன் உணவை உண்பித்தான். அவன் வழியை திணித்துவிட்டான். அவன் தந்த முட்டை கோழியாகும் ஆனால் அக்கோழி முட்டையிடாது. அவன் தரும் விதையில் திராட்சை வரும். ஆனால் அதில் விதை இருக்காது. அவன் தரும் மாடு உனக்கு பால் தரும். ஆனால் அது சினையாவதற்கு அவன்தான் ஊசிதருவான். முட்டையில் தொடங்கி விதையில் வளர்ந்து மாட்டில் நிற்கின்றது அவன் அரங்கேற்றிய திட்டம். நாளை உன்னில் நிற்கும்! மாட்டிற்கு மட்டுமல்ல ஊசி உன் மனைவிக்கும் தயாராகிக்கொண்டிருக்கின்றது. வேடிக்கை பார்க்க தயாரா? அல்லது உன் வீரியத்தை காட்டத்தயாரா? இதுவரை நீ கற்றது கல்வியல்ல, இதுவரை நீ வாழ்ந்தது வாழ்க்கையல்ல, இதுவரை நீ கொண்டது கலாசாரமல்ல எங்கோ தொலைத்து விட்டு நிற்கின்ற கலாசாரத்தை இன்றே மீட்டெடுக்க நம்மில் ஒவ்வொருவரும் ஒன்றுபடுவோம். தமிழன் என்பதில் பெருமிதம் கொள்வோம். இத்தனை காலமும் இருண்ட விழிகளை இயன்றளவு திறந்து பார்ப்போம். சுயத்தை இன்றே மீட்டெடுப்போம்.●

## விவிலியத்தில் மூன்றின் மகிமை

01. இயேசு அதிகம் அன்பு செய்த அப்போஸ்தலர்கள் மூன்று பேர்.
02. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள் மூன்று.
03. இயேசு சிலுவையில் உயிர் துறந்த நேரம் மூன்று மணி.
04. இயேசு உயிர்த்தெழுந்தது மூன்றாம் நாள்.
05. இயேசு தாம் செபிக்கச் சென்றபோது தம்மோடு அழைத்துச் சென்றவர்கள் மூன்றுபேர்.
06. இயேசு தபோர் மலையில் உருமாறிய போது அவருடனிருந்த அப்போஸ்தலர்கள் மூன்று பேர்.
07. இயேசு யாயீரின் மகளை உயிர்ப்பிக்கச் சென்றபோது அழைத்துச் சென்ற திருத்தூதர்கள் மூன்றுபேர்.
08. இயேசு பேதுருவிடம் நீ என்னை அன்பு செய்கின்றாயா? என்று கேட்டது மூன்று முறை.
09. பேதுரு இயேசுவை மறுதலித்தது மூன்று முறை.
10. சவுல் பார்ரைவயற்றிருந்தது மூன்று நாட்கள்.
11. நிலையாய் உள்ள பண்புகள் மூன்று.
12. புனித யோவான் எழுதிய திருமுகங்கள் மூன்று.
13. அன்னை மரியா எலிசபெத் வீட்டில் தங்கியிருந்தது மூன்று மாதங்கள்.
14. கொர்னேலியு காட்சி கண்ட நேரம் மூன்று மணி.
15. கடவுள் மூன்று ஆட்களாய் இருக்கின்றார்.●

## கடவுள் இருக்கிறார்

ராஜேஷ் முடி வெட்டிக் கொள்ள வழக்கமாகச் செல்லும் கடைக்குச் சென்றான். முடிவெட்டுபவர் அவனுக்கு நெருக்கமான நண்பர். இருவரும் பல விடயங்கள் பற்றி மகிழ்ச்சியாக உரையாடுவர். அன்றும் அப்படியே பலவிடயங்கள் பற்றி பேசினர். இடையில் கடவுளைப் பற்றிப் பேச்சு வந்தது. முடி வெட்டுபவர், ‘எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. கடவுள் இருக்கின்றார் என்று நான் நம்பமாட்டேன்” என்றார். ‘ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்?” என்று கேட்டான் ராஜேஷ். ‘காரணம் மிகச் சுலபமானது. தெருவில் போய்ப்பாருங்கள். கடவுள் இருந்தால் நோயால் வாடுபவர்கள் இருப்பார்களா? கடவுள் இருந்தால் கைவிடப்பட்ட குழந்தைகள் தெருவில் அலையுமா? கடவுள் இருந்தால் துன்பமும், வலியும் இராது. இதையெல்லாம் அனுமதிக்கும் கடவுள் நிச்சயம் இருப்பார் என்று நான் நம்பவில்லை” என்றார் முடிவெட்டுபவர். ராஜேஷ் அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. வீணாக விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று மௌனமானார். முடிவெட்டும் வேலை முடிந்து ராஜேஷ் வெளியே போனார். அவர் போன சற்று நேரத்தில் வீதியில் நீண்ட தாடியும் அடர்ந்த முடியுமாய், ஒரு ஆள் நிற்பதைக் கடைக்காரர் பார்த்தார். அந்த ஆளைப்பார்த்தால் முடி வெட்டும் கடையை மாதக்கணக்கில் எட்டிப் பார்க்காதவர் போலத் தோன்றியது. அவ்வளவு அடர்ந்தும் சடைபிடித்த முடியும் தாடியுமாக இருந்தான்.

அப்போது வெளியே சென்ற நபர் மீண்டும் கடைக்கு வந்தார். ‘என்ன?” என்று கேட்டார் முடிவெட்டுபவர் ‘ஒரு விஷயம்! இங்கே முடிவெட்டுபவர் யாருமே இல்லை என்று சொல்லலாம் என்று வந்தேன்” ‘என்ன உளறுகின்றீர்? இதோ! நான் இருக்கின்றேன். நானும் முடிவெட்டுபவன் தானே, அப்படி இருக்க முடிவெட்டுபவரே இல்லை என்று எப்படி நீங்கள் சொல்லலாம்?” என்று எரிச்சலாகக் கேட்டார் முடிவெட்டுபவர். ‘இல்லை முடிவெட்டுபவர் இருப்பது உண்மை என்றால் அதோ தெருவில் நிற்கின்ற அந்த ஆசாமி இப்படி அலங்கோலமான தலைமுடி, சிக்குப்பிடித்த தாடியுடன் இருப்பானேன்?” என்று கேட்டார் ராஜேஷ். ‘ஓ! அதுவா? விஷயம் என்னவென்றால் அந்த ஆசாமி என்னிடம் வருவதில்லை.” என்றார் முடிவெட்டுபவர். ‘சரியாகச் சொன்னீர்கள். அதுதான் விஷயம். கடவுளும் இருக்கவே செய்கின்றார். ஆனால், என்ன நடக்கின்றது என்றால், மக்கள் அவரை அணுகுவதில்லை. அவரைத் தேடிப் போவதில்லை. அதனால்தான் எங்கும் நிறைய துன்பமும், வேதனையும் உலகில் நிறைந்துள்ளன!” என்றார் ராஜேஷ். உண்மையை உணர்ந்தார் முடிவெட்டுபவர்.●

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!



# இளையோர் மன்னா



## படைப்பைப் பாதுகாப்பதில் இளையோரிடம் புதிய சிந்தனைகள்



சுவீடன் சூழலியல் இளம் ஆர்வலர் Greta Thunberg போன்று படைப்பைப் பாதுகாப்பதில் இளையோரிலும் அவர்களின் இயக்கங்களிலும் புதிய எண்ணங்கள் உதித்துவருவது நம்பிக்கை தருகின்றன. ஐரோப்பா தன்னை உருவாக்கிய தந்தையரின் கனவுகளாகத் தொடர்ந்து நடைபோடும் தனது தனிப்பண்பை எடுத்துரைக்கும் வரலாறு கலாசார மற்றும் புவியியல் ஒன்றிப்பை செயற்படுத்துவதை உண்மையாக்கும் என்று தான் நம்புவதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். இத்தாலிய La Stampa தினத்தாளின் Vatican Insider என்ற இணையதள அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான Domenico Agasso என்பவருக்கு அளித்த நீண்ட நேர்காணலில் ஐரோப்பா தனக்குள்ளே முடங்கிவிடாமல் மக்களின் தனித்துவங்களை மதிக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். அத்துடன் அரசியல் புலம்பெயர்ந்தோர் அமேசன் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் சூழலியல் திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப்பணி போன்ற பல விவகாரங்கள் குறித்த கேள்விகளுக்கும் பதில் சொல்லியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். நாம் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் எவருமே இரண்டாம் தரம் அல்ல எனவே ஒவ்வொரு உரையாடலையும் நமது சொந்த தனித்துவத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை எடுத்துக்காட்டாக நான் கத்தோலிக்கர் என்ற நிலையிலிருந்து உரையாடலைத் தொடங்காவிட்டால் என்னால் கிறிஸ்தவ ஒன்றிப்பை அமைக்க இயலாது என்று சொல்லி ஒவ்வொருவரின் தனித்துவத்தின் மாற்ற முடியாத தன்மை பற்றிக் கூறினார். போர் பற்றிய கருத்து தெரிவிக்கையில் அமைதிக்காக நம்மை அர்ப்பணித்து அதற்காக உழைக்க வேண்டும் என்றும் ஆபிரிக்க கண்டத்தில் நிலவும் பசி மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியது.

➡ 13

## இளையோர் கனவு காண உதவும் கல்வி



ஒவ்வோர் ஆண்டும் ஓகஸ்ட் 12ஆம் திகதி ஐ.நா. அவையால் சிறப்பிக்கப்படும் உலக இளையோர் நாளையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஒவ்வோர் ஆண்டும் ஓகஸ்ட் 12ஆம் திகதி ஐ.நா. அவையால் சிறப்பிக்கப்படும் உலக இளையோர் நாளையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் டுவிட்டர் செய்தியை வெளியிட்டுள்ளார்.

➡ 14

# நான் உருவாக...

# அறிவு விருத்தியும், அனுபவக் கல்வியும்

அருட்தந்தை யா. ரமேஸ் அ.ம.தி

ஒரு செடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதைப் போன்று, மனிதன் பண்பாட்டையும் நாகரிகத்தையும் மேலான அறிவையும் பெறுவதற்கு கல்வி அவசியம் என்கின்றார் ரூசோ. ஒருவனுடைய அறிவு, திறமை, சாதனை, போன்றவைகளின் தரத்தைப் பொறுத்தே அவன் உலகத்தில் பிடித்துக் கொண்டிருக்கும் இடத்தின் அளவு அமையும் என்கின்றார் ஆபிரகாம் லிங்கன். மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் நன்கு ஆராய்ந்து, அதன் பரிணாம வளர்ச்சிக் கட்டங்களின் நிலைகளை வரைவிலக்கணப்படுத்தியுள்ள உளவியலாளர்கள் பலரினதும் கருத்துப்படி, கல்வியும், அறிவு விருத்தியும் ஒரு மனிதனின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பது கண்கூடு. ஒவ்வொரு மனிதனும் தான் தன்னில் வளர்வதற்கு, முதிர்ச்சி பெறுவதற்கு பலதுறைகளில் வளர வேண்டி இருப்பினும் எல்லாவற்றையும் விட கல்வியில், அறிவில் வளருதல் என்பது ஒரு தனித்தன்மையைக் கொண்டுள்ளது மட்டுமல்லாது மற்றைய அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளதென்றால் அதன் பெருமையும், அதை நாட வேண்டிய கடமையும், தேட வேண்டிய முறைமையும் எம்மால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

உளவியல் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது கல்வி அல்லது அறிவு விருத்தி என்பது அனுபவத்தாலும், பயிற்சியாலும் நடத்தையை அமைத்துக் கொள்வதே ஆகும் என்கிறார் கேட்ஸ் (Gates). ஒருவன் தன் இலக்கைத் தொடர அல்லது நோக்கங்களைத் திருப்தி செய்ய அவனுக்குள் எழுகின்ற பல தரப்பட்ட எண்ணங்களாலும், நிகழ்வுகளாலும் அவன் பெற்றுக் கொள்கின்ற அறிவு அவனுக்கு உள ரீதியான முதிர்ச்சியைக் கொடுக்கிறது. உதாரணமாக ஒரு குழந்தை பசியால் அழுகிறது. உணவு உண்டு பசி நீங்குவரை அழுகிறது. பின்னர் அழுகை உணவைத்தருகிறது என்றும், உணவு வயிற்றுப் பசியைத் தீர்க்கிறது என்றும் உணர்ந்து, தெளிந்து, அறிவைத் தனதாக்கி தனது தேவைகளுக்கு அதனைக் கையாளப் பழகிக் கொள்கின்றது.

மனோவியல் வல்லுனர்கள் மனிதர்களை முதல்த்தர அறிவு உள்ளவர்கள், சராசரி அறிவு உள்ளவர்கள், குறைந்த அறிவு உள்ளவர்கள் என மூன்று வகையாகப் பிரித்தாலும், ஒருவனது முயற்சியால் அவன் தனது அறிவைக் கூர்மையாக்கிக் கொள்ள முடியும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கல்வி என்பது குறுகிய கல்விச் சாலைத் தேர்வு மட்டுமன்று மாறாக தனிமனிதனின் வளர்ச்சியின் ஒவ்வொரு அம்சத்திலும் அதற்கு முதன்மைப் பங்கு உண்டு. ஒருவன் தனது வாழ்விலே கொண்டுள்ள சிறப்புத் தன்மைகளாகிய நடத்தை வகைகளெல்லாம் பெரும்பாலும் அவனால் உள்வாங்கிக் கொள்ளப்பட்டவை. ஒருவனுடைய மனப்பான்மைகள் சுவைகள், மதிப்புக்கள், கவர்ச்சிகள், உயர் நோக்கங்கள் யாவும் அவனது பயிற்சியையும், அனுபவத்தையும் பொறுத்து அமைகிறது என்றால் ஒருவனது தனிப்பட்ட வாழ்வில் அவனது உடல், உள தாக்கங்களில் அறிவின் பங்களிப்பு புலனாகிறது.

அறிவு என்பது, ஒரு மனிதன் எவ்வாறு உடல், உள ரீதியில் வளர்ச்சிப் படிகளைத் தாண்டி உயர்வடைந்து செல்கிறானோ அதே போல் வளர்ச்சி அடைந்து செல்லும் தன்மை கொண்டது. குழந்தைப் பருவத்திலே அறிவு விருத்தியடையத் தொடங்கினாலும், வளர்ச்சிப் பருவங்களில் ஒரு முதிர்ச்சி அடைந்து செல்லும் இயல்பு கொண்டது. ஆனால் அதைத் தக்க முறையில் நகர்த்திச் செல்வது ஒவ்வொருவரினதும் நடத்தையிலே தங்கியுள்ளது. முறையான கல்விக்கு எட்டு வகையான அறிவுப் படிகளை நாட வேண்டுமென்று உளவியலாளர்கள் கருதுகிறார்கள். ஆதாவது நல்ல அறிவு தரும் நூல்களைக் கற்றல், மூளையை கூர்மையாக வைத்திருத்தல், பார்க்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளல், சிந்தித்தல், எப்போதும் ஆர்வம் உள்ளவர்களாக இருத்தல், நினைவாற்றலை விருத்தி செய்தல், எப்பொழுதும் எல்லாவற்றையும் வரவேற்றல், ஒருமுகச் சிந்தனையில் வளருதல் போன்றவையாகும். இவை ஒரு முறையான கல்விக்கும், அறிவு விருத்திக்கும், ஒருவனை நகர்த்திச் செல்லக் கூடியன என்பது உண்மை.

இவ்வாறு கல்வியின் தன்மை, அறிவை விருத்தி செய்யும் முறைகள் பற்றி ஆராய்ந்த நாம், உளவியலுக்கும் அறிவு விருத்திக்கும் அல்லது அனுபவக்கல்விக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? ஒருமனிதனின் உளச் செயற்பாட்டில் இவற்றின் பங்களிப்ப என்ன? என்பதனை ஆராய்வது மிக முக்கியமானதொன்றாகும். ஒரு மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை, 8 கட்டங்களினூடாக கடந்து செல்லும் தன்மையை எரிக் எரிக்சனின் நோக்கில் காணமுடிகிறது. உடல் உள ரீதியாக பல்வேறு தரப்பட்ட மாற்றங்கள் அவனில் துலங்குகின்ற அதே நேரத்தில் அனைத்துக்கும் அடிப்படையாக அவனது துலங்கலையும், தூண்டலையும் நிர்ணயிக்கின்ற முக்கிய சக்தியாக அவனுள் செயற்படுவது அவனது அறிவாற்றலும், அனுபவக்கல்வியும் ஆகும். மனிதனது ஒவ்வொரு நடத்தை மாற்றத்திலும், உணர்வுகளிலும், சிந்தனையிலும் இதன் பங்களிப்பை பின்வருமாறு உற்று நோக்க முடியும்.

### தன்னில் தன்னை அறிதல்

இன்று உள்ளார்ந்த ரீதியில் சிந்திக்கும் அறிஞர்களது கணிப்புப்படி ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே முதலில் அறிந்து கொள்ள முற்பட வேண்டும். தன்னை, தன்னுடைய அறிவைக் கொண்டேதான் யார் என்று கண்டுகொள்ள முடியும் என்பது பலரது கருத்து. எப்படியாயினும் நான் யார்? எனது உருவாக்கற் பின்னணி என்ன? என்னில் உள்ள திறமைகள் என்ன? எனது குறிக்கோள் என்ன? நான் பயணிக்கும் வாழ்வின் அர்த்தம் உண்டா? இவ்வாறான கேள்விகள் சாதாரணமான மனித வாழ்வில் எழுவது இயல்பு. இவற்றிற்கு ஒவ்வொரு மனிதனும் வேறுபட்ட பல கோணங்களில் விடைகாண முற்படுவதும், சிலர் கண்டுகொள்வதும், சிலர் விடை தேடி அலைவதும், இன்னும் சிலர் தங்களது விடையில் திருப்தியற்றிருத்தலும், சிலர் அதைப்பற்றியே எண்ணாமல் வாழ்வைக் கழித்தலும் உண்டு. பலர் பலவாறு வாழ்ந்தாலும் தன்னைப் பற்றி ஒரு தெளிவான அறிவும், திடனான சிந்தனையும், வாழ்க்கையில் நல்ல அனுபவங்களையும் பெற்ற ஒரு மனிதனே அனைத்துப் பிரச்சினைகளிலிருமிருந்து தன்னை விடுவிக்க, ஒரு ஆரோக்கியமான வழியைத் தெரிவு செய்பவனாக சமுதாயத்தில் காணப்படுவான் என்பது வெளிப்படை உண்மை.

### பிறரில் தன்னை, தன்னை பிறரில் அடையாளப்படுத்தல்

மனிதர்கள் பலவிதம் அதில் ஒவ்வொருவரும் தனி ரகம் என்று கூறுவார்கள். ஒருவன் தன்னை மட்டுமல்ல பிறரையும், பிறரில் தன்னையும் அடையாளப்படுத்த முனைவது இயல்பு. தன்னிலை அறிந்து கொண்ட ஒரு குழந்தை சமூகத்திற்குள் கால் பதிக்கும் போது, பிறரைத் தன்னில் பிரதிபலித்து ஒத்து வாழ முற்படுகிறது. தன்னைப் பற்றி தான் கொண்டுள்ள அறிவையும், பிறருடன் வாழ்ந்து பெற்ற அனுபவத்தையும் கொண்டு தனது வளர்ச்சிப் பருவங்களில் தன்னையும் பிறரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறது. தனக்கும் பிறருக்கும் இடையில் ஒத்தமைகளையும் ஒவ்வாமைகளையும் இனங்கண்டு தன்னைப் பிறருக்கு ஏற்ற வகையில் இசைவாக்கிக் கொண்டு வாழத் தெரிந்த குழந்தையே நல்ல மனிதனாக உருவெடுக்க முடியும் என்பது பல்வேறுபட்ட ஆராட்சிகளின் பின் உளவியலாளர்கள் கண்டுகொண்ட உண்மையாகவுள்ளது.

### உணர்வு, நடத்தையில் செல்வாக்கு

மனித வளர்ச்சிப் பருவங்களில் ஒருவனது உணர்வுகளில், அவனது நடத்தை முறையில் பலதரப்பட்ட மாற்றங்களை அவதானிக்க முடியும். இம்மாற்றங்கள் ஒரு மனிதனை அவனது வாழ்வில் உயர்நிலைக்கு ஏற்றிச் செல்லும் அதேநேரத்தில் அவனை அழிவை நோக்கியும் நகர்த்திச் செல்ல வாய்ப்புக்கள் உண்டு. இந்நிலையில் தான் தனது உணர்வுகளுக்கு ஏற்ப எவ்வாறு தீர்மானங்களை எடுத்துச் செயற்பட வேண்டும் என்பது அவன் தனது வாழ்வில் பெற்றுக்கொண்டுள்ள அறிவிலும், அனுபவங்களிலுமே தங்கியுள்ளது எனலாம். ஒவ்வொருவரும் தனது உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டும் அதே வேளையில் தனது உணர்வுகளை அடக்கியாளக் கூடிய பக்குவத்தையும் கொண்டிருக்க வேண்டும். தன் மனம் எண்ணும் அனைத்துக்கும் செயல் வடிவம் கொடுக்காது முறையாகச் சிந்தித்து, தனது அறிவுக்கு எட்டியவரை மீளாய்வு செய்து ஒரு செயலில் இறங்கும் போதே அவனால் அதில் முழுமை பெற முடியும் என்பது எனது கருத்து.

### சிந்தனை

குழந்தை ஒன்றின் சிந்தனைக்கும், கட்டிளமைப் பருவத்தினர் ஒருவரின் சிந்தனைக்கும், வயதடைந்த ஒருவரின் சிந்தனைக்கும் இடையில் நிறைய வேறுபாடுகளை நாம் அவதானிக்க முடியுமென்றால் காரணம் அவர்களின் அறிவு வளர்ச்சியும் மற்றும் வாழ்வியல் அனுபவங்களுமே ஆகும். எல்லோரும் சிந்திக்கிறார்கள் ஏனெனில் சிந்தனை என்பது மனிதருக்கே உரித்தான ஒரு பண்பாகவுள்ளது. ஆனால் ஒவ்வொரு வாழ்க்கைக் கட்டங்களிலுமுள்ளவர்களின் சிந்தனை மாறுபடுவதை நாம் அறிந்து கொள்ளலாம். எமது வாழ்வில் நாம் கடந்தவற்றை எவ்வாறு சிந்தித்தோம், நடப்பவை பற்றி எப்படி சிந்திக்கிறோம், எதிர்காலத்தில் நாம் எப்படி சிந்திப்போம் என்று எமது நாளாந்த வாழ்வுடன், எங்கள் அனுபவங்களுடன் ஒப்பிடும் போது எம்மால் தெளிவு பெற முடியும்.

### பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்

பிரச்சினை என்பது மனித வாழ்வில் ஒரு பின்னிப் பிணைந்த தொடர்கதையாக செல்வது ஒவ்வொருவரும் அறிந்த உண்மை. ஆனால் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்படும் போது நாம் மிகவும் அவதானமாக செயற்படுவதே ஒரு ஆரோக்கியமான தீர்வுக்கு வழி வகுக்கும். பிரச்சினைகள் ஒருவனுக்கு உடல் ரீதியாகவும் விசேடமாக உள ரீதியாகவும் பல பாதிப்புக்களை உண்டுபண்ணக் கூடியவை. பிரச்சினைகளுக்கு தீர்வு காண அப்பிரச்சினைகளை எவ்வாறு அணுகுதல் என்பதே பிரச்சினையாக உள்ளது. இந்நிலையில் வாழ்வில் பட்டறிவும், பிரச்சினைகளை நிதானமாக அணுகும் நுண்ணறிவும் அதற்குரிய தீர்வுகளை முன்வைக்கக் கூடிய திறமையுமுள்ள மனிதர்களால் மட்டுமே இவற்றிற்கு தக்க முறையில் தீர்வு காண முடியும். எனவே எமது வாழ்வில் நாம் தீர்க்க முடியாத பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடின், அவற்றிற்கு வழி சொல்லும் அல்லது தீர்வு முறைகளைத் தரக்கூடிய நல்லறிவுள்ளவர்களின் ஆலோசனையைக் கேட்டு எமது அறிவுக்கு எட்டியவரை சிந்தித்துச் செயலாற்றும் பட்சத்தில் அவற்றால் ஏற்படும் உளத்தாக்கங்களிலிருந்து நாம் விடுபட முடியும்.

எனவே ஒவ்வொரு மனிதனும் தான் தனக்கே உரித்தான முறையில் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் பெற்றோரின் கவனிப்பும் சமூகத்தின் அக்கறையும் முக்கிய பங்கை வகிக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்கு முக்கியம் கொடுத்து, அவர்களை ஒரு ஆரோக்கியமான கல்விப்பாதைக்குள் நடத்திச் செல்ல வேண்டும். கற்கும் கல்வியானது அவர்களது வாழ்க்கைக்கு குறிப்பாக தங்கள் உள்ளார்ந்த ரீதியில் அவர்கள் பக்குவப்படுவதற்கு அவர்களுக்கு வழி சமைக்க வேண்டும். ஒருவன் தனது கல்விப்பாதை சம்மந்தமாக உளரீதியாக திருப்திப்படாவிடின் அதற்கான காரணத்தை கண்டறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டும். ஒருமனிதன் தன்னில் தானாக உருவாக அவன் தன் அறிவை விருத்தி செய்ய வேண்டும்.●

## மருத்துவக் குறிப்புக்கள்

# யாரெல்லாம் உருளைக்கிழங்கு சாப்பிடலாம்? சாப்பிடக்கூடாது?



கிழங்கு வகைகளில் மாச்சத்துதான் அதிகமாக உள்ளது. அதனால்தான் இவை உடலுக்கு அதிக ஆற்றலை அளிக்கின்றன. அதுவும், உருளைக்கிழங்கில் மிக அதிக மாச்சத்து இருக்கின்றது. சேனைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு போன்ற கிழங்குகளில் நார்ச்சத்தும் குறைந்த அளவிலேயே உள்ளது. இது போன்ற கிழங்குகளைச் சரியான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவற்றை எண்ணெயில் பொரித்தெடுத்து பயன்படுத்தினால் கலோரி சேர்ந்து, உடல் பருமன் மற்றும் வேறு பல பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திவிடும். பெரும்பாலும் உடலுக்குத் தேவையான மாச்சத்துக்கள் அனைத்தும் நாம் தினமும் சாப்பிடும் சாதம், கோதுமை, தானியங்களில் இருந்து கிடைத்துவிடுகின்றது. அதனால், கிழங்கு வகைகளைத் தவிர்த்தாலும் நலமாக வாழ முடியும்.

### யாரெல்லாம்சாப்பிடலாம்?

உடல் எடையை அதிகரிக்க நினைப்பவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரும் குழந்தைகள், கடின உடல் உழைப்பாளிகள், விளையாட்டு வீரர்கள் அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

### யாரெல்லாம்சாப்பிடக்கூடாது?

சர்க்கரை நோயாளிகள், அதிக எடை உள்ளவர்கள் கண்டிப்பாக உருளைக்கிழங்கைத் தவிர்க்க வேண்டும். வாயுப் பிரச்சினை, வாத நோய் மற்றும் மூலநோய் பிரச்சினை உள்ளவர்கள் கிழங்கு வகைகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்கள் உருளைக்கிழங்கை அறவே சாப்பிடக் கூடாது.

### கிழங்கு வகைகளை எப்படிச் சாப்பிடலாம்?

வேகவைத்துச் சாப்பிடுவதுதான் நல்லது. இன்றோ ருசிக்காக, எண்ணெயில் வறுத்து, பொரித்துச் சாப்பிடுகின்றனர். எண்ணெயில் உள்ள கொழுப்பும் உடலுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். மேலும் கிழங்கில் உள்ள சத்துக்கள் உடலில் சேராமல் போகும். கருணைக் கிழங்கு நீங்கலாக ஏனைய கிழங்குகள் அனைத்துமே வாயுப் பிரச்சினையையும் வாத நோயையும் ஏற்படுத்தக்கூடியவை என்பதால் கிழங்குகளை அளவோடு சேர்த்துக் கொள்வது ஆரோக்கியத்திற்கு நல்லது.

### பதற்றத்தை ஏற்படுத்தும்:

உருளைக்கிழங்கு உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும், ஆனால் நீங்கள் ஏற்கெனவே உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த மருந்துகள் எடுத்துக்கொண்டால், உருளைக்கிழங்கு உயர் இரத்த அழுத்தத்தை மிக மோசமான நிலை வரை குறைக்கும், எனவே மருந்துகள் எடுத்துக்கொண்டால் தயவுசெய்து அதிகளவு உருளைக்கிழங்கு சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. உருளைக்கிழங்கில் பொட்டாசியம் நிறைந்து காணப்படுகின்றது. இவை உடல் நலத்தை மேம்படுத்தும் ஒரு அளவை மீறினால் இவை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், பதற்றம் ஏற்படுத்தும் காரணியாக உருளைக்கிழங்கு செயற்படுகின்றது. ●

## சமையல் குறிப்புக்கள்

# காராப் பு'ந்தி



### தேவையானவை:

கடலைப்பருப்பு - 200 கிராம்
இட்லி அரிசி - 50 கிராம்
நிலக்கடலை - 3 மேசைக்கரண்டி
மிளகாய்த் தூள் - 1 மேசைக்கரண்டி
பெருங்காயத்தூள் - சிறிது
கறிவேப்பிலை - சிறிது
உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - பொரிப்பதற்கு

### செய்முறை :

முதலில் கடலைப்பருப்பு, அரிசி இரண்டையும் தண்ணீரில் 2 மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய பின் பருப்பு, அரிசியுடன் மிளகாய்த் தூள், பெருங்காயம், உப்பு சேர்த்து கிரைண்டரில் இட்லி மாவு பதத்தை விட கொஞ்சம் தளர்வாக அரைத்துக் கொள்ளவும். 5 நிமிடங்களில் அரைபட்டு விடும்.

நிலக்கடலையை வறுத்து தோலுரித்துக் கொள்ளவும். அடுப்பில் கடாயை வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் எண்ணெயின் மேல் ஒரு பெரிய கண் கரண்டியை (ஓட்டை) வைத்து ஒரு மேசைக்கரண்டி மாவு எடுத்து அதில் ஊற்றி வேகமாக தேய்த்து கடாய் கொள்ளும் அளவுக்கு போட்டு மிதமான சூட்டில் வைத்து வேக விடவும்.

பூந்தி நன்கு சிவந்ததும் எடுத்து விடவும். மீதமுள்ள எல்லா மாவையும் இதே முறையில் போட்டு வெந்தவுடன் எடுத்து ரிசு பேப்பரில் பரப்பி ஆற விடவும். சூடாக இருக்கும் எண்ணெயில் கறிவேப்பிலையை வறுத்து காரப்பூந்தியுடன் சேர்க்கவும். பிறகு வறுத்து வைத்துள்ள நிலக்கடலையும் சேர்த்து கலந்து விடவும். எண்ணெய் நன்கு உறிஞ்சியவுடன் காற்றுப்புகாத பாட்டிலில் போட்டு வைக்கவும். சுவையான காராப் பூந்தி தயார். ●



**மனைவி:** எல்லை தாண்டிய பயங்கரவாதம் அப்படினா என்னங்க???
**கணவன்:** நீ என்மேல பூரிக்கட்டைய தூக்கி எறியும் போது அது தெருவுல போறவங்க மேல படுதுல்ல அதான்...!

***************

**கமல்:** போனமாசம் 45 கிலோ இருந்தேன், இப்போ 50 கிலோ இருக்கேன். போட்டு இருக்குற பேண்ட்டு சேட் சைசும் மாறல, சேட் சைசும் மாறல... அப்ப கண்டிப்பா அறிவுதான் வளர்ந்திருக்கும்.
**விமல்:** ???

***************

**நோயாளி:** பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய எவ்வளவு செலவாகும்.. டாக்டர்...?
**டாக்டர்:** 5 லட்சம் ரூாய் ஆகும்ங்க...!
**நோயாளி:** ஒருவேளை நாங்களே பிளாஸ்டிக்கை கொண்டு வந்துட்டா எவ்வளவு குறைப்பீங்க...?
**டாக்டர்:** ???

***************

**வாத்தியார்:** கரண்ட் போகும்போது முதல்ல எதை எடுப்பீங்க? டார்ச் லைட், எமர்ஜன்சி லைட்?
**மாணவன்:** இரண்டுமில்லை சார், அப்பா பாக்கெட்ல இருக்கிற பணத்தை எடுப்பேன் சார்...

***************

**ராமு:** எதுக்கடா சைக்கிளை படுக்க வச்சுட்டு பேற?
**சோமு:** இங்கு சைக்கிளை நிறுத்தாதீர்கள்னு போர்ட்டு வச்சிருக்காங்களே அண்ணே அதான்.
**ராமு:** ???

***************

**மனைவி:** என்ன பார்த்துக்கிட்டு இருக்கிங்க.
**கணவன்:** ஒண்ணுமில்லை!
**மனைவி:** ஒண்ணுமில்லாமயா ஒரு மணிநேரமா மேரேஜ் சர்டிபிகேட்ட பார்த்துக்கிட்டு இருக்கிங்க!
**கணவன்:** எங்கேயாவது காலாவதி திகதி போட்டுருக்கான்னு பார்க்கின்றேன்.

## மன்னா விளம்பரப் பலகை

"தன்னை நல்லவராகக் காட்டிக் கொள்ள அடுத்தவரை கெட்டவராகச் சித்தரிக்கும் எவரும் நீண்டநாள் நல்லவர் வேடத்தில் சுற்ற முடியாது"

கருவுற்று இருந்தால் ஒரு குழந்தைக்கு தாயாகலாம்.. அதுவே கருணை இருந்தால்... உலகத்திற்கே தாயாகலாம்...

......................

பகைமையை வளர்க்காதீர்கள், மன்னியுங்கள்! பிறரின் தவறை நீங்கள் மன்னித்தால் இறைவன் உங்கள் தவறுகளை மன்னிப்பார்!!

......................

சில மனிதர்கள் வரமாக நம் வாழ்க்கையில் வருவார்கள்...
சில மனிதர்கள் பாடமாக நம் வாழ்க்கையில் வருவார்கள்...

பிறக்கும்போதே யாரும் மகிழ்ச்சியாய் பிறப்பதில்லை. ஆனால் மகிழ்ச்சியாய் வாழும் தகுதியுடனேயே பிறக்கின்றார்கள். உன் மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள நீயே முயற்சிசெய்.

......................

காசு பணம் இல்லாதவன் என்றுமே ஏழை இல்லை ஆனால் அன்னையின் அன்பை இழந்தவன் பணம் இருந்தும் ஏழைதான்.

......................

பாசம் வைத்த இதயங்கள் தான் பாவப்பட்டவை. மறக்க நினைக்கும் போதெல்லாம் அதிகம் நினைக்கின்றது. அதிகம் துடிக்கின்றது.

வழிபாடு செய்யுங்கள்.. கடவுளுக்கு அருகில் நீங்கள் செல்லலாம். ஆனால் சேவை செய்யுங்கள் கடவுள் உங்கள் அருகில் வருவார்.

எல்லோரிடமும் அன்பை கொடுத்து ஏமாந்துவிடாதே! யாரிடமும் அன்பை பெற்றுக் கொண்டு ஏமாற்றிவிடாதே!!

## அழகுக் குறிப்புக்கள்

# கூந்தல் அழகு பெற



### கூந்தல் பளபளக்க

- கூந்தல் பளபளப்புடன் இருக்க வாரம் ஒரு முறை ஒலிவ் எண்ணெயைக் கொதிக்க வைத்துத் தலையில் நன்றாகத் தேய்க்க வேண்டும். சுத்தமான ஒலிவ் எண்ணெய் மருந்துக் கடைகளில் கிடைக்கும். தலையில் தடவுவதற்கு எத்தனையோ விதம் விதமான ஹேர் ஆயில்கள் இன்று இருக்கின்றன. இந்த ஹேர் ஆயில்களெல்லாம் தலைமுடியின் ஆயுளைக் குறைத்து விடுகின்றன. சுத்தமான நல்லெண்ணெயையும் சுத்தமான தேங்காயெண்ணையும் தவிர வேறு எதையும் தலையில் படவிடக் கூடாது.
- சிறிது சாதம் வடித்த கஞ்சியில் ஷாம்பூவை ஊற்றி கலந்து தலையில் தேய்த்து குளித்துப் பாருங்கள் எண்ணெய்ப் பசை மற்றும் அழுக்கு நீங்கி கூந்தல் பட்டுப் போல் பளபளக்கும்.
- தலைமுடி வறண்டு, சீராக இல்லாமல் இருந்தால் முகத்தின் தோற்றப் பொலிவும் குறையும். விழா என்றால் முதல் நாள் இரவில் கூந்தலை சீராக்குவது அவசியம். முதல் நாள் மாலையில் கூந்தலை எப்போதும் போல் ஷாம்பு மற்றும் சீயாக்காய் வைத்து அலசி விடவும்.
- அடுத்தநாள் கூந்தலை அலசி, துடைத்து விட்டு அலங்காரம் செய்தால் கூந்தல் பளிச்சென இருக்கும். முகமும் தோற்றப் பொலிவுடன் அனைவரையும் கவரும். அழகு நிலையங்களுக்குச் சென்று தலை முடியை கலரிங் செய்து விட்டு, ஷாம்பு மூலம் சுத்தம் செய்யும் போது கூந்தலில் உள்ள சில சத்துக்கள் அழிந்து போகும். இதற்கு வீட்டில் ஷாம்பு போட்டு முடித்த பின்னர், தண்ணீரில் கொஞ்சம் வினிகரை கலக்கி கூந்தலை கழுவி அலசவும். இதனால் கூந்தல் பளபளப்பாகும்.

### இளநரை நீங்க

- நாட்டு மருந்துக் கடைகளில் வேம்பாளம் பட்டை என்று கிடைக்கும். அதை வாங்கிப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வரலாம்.
- நெல்லி முள்ளியுடன், கரிசலாங்கண்ணி, அதிமதுரம் ஆகியவற்றைச் சம அளவு எடுத்துச் சேர்த்து அரைத்து தலையில் தேய்த்து ஊறவைத்துக் குளித்து வரலாம். கடுக்காய்க்கு நரையை அகற்றிக் கருமையாக்கும் தன்மை உண்டு. கரிசலாங்கண்ணிச் சாற்றையும், கடுக்காய் ஊறிய தண்ணீரையும் கலந்து தலையில் தேய்த்துச் சிறிது நேரம் ஊறியதும் குளிக்க வேண்டும்.
- சீரகம், வெந்தயம், வால் மிளகு, ஆகியவற்றைச் சம அளவு எடுத்துப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தலைக்குத் தடவி வரலாம்.

### பொடுகு நீங்க

- வால் மிளகை ஊற வைத்து பால்விட்டு அரைத்து தலையில் தடவி ஊறிய பின் குளிக்கலாம்.
- பலசரக்குக் கடையில் காய்ந்த வேப்பம்பூ கிடைக்கும். உப்பு கலக்காத வேப்பம்பூ 50 கிராம் கேட்டு வாங்கி, அதை 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளஞ்சூடு பதத்திற்கு ஆறியதும், வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெயை தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊறிக் குளித்தால், பொடுகு பிரச்னை தீரும். அதிகம் பொடுகு உள்ளவர்கள், வாரத்திற்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ, மூன்று வாரங்கள் குளித்தால் பொடுகு சுத்தமாக நீங்கி விடும்.

### நரைமுடி கருப்பாக

சிறிது கருவேப்பிலையை எடுத்து காலையில் தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வரவும். மருதாணி செம்பருத்தி கருவேப்பிலை மூன்றையும் சம அளவில் எடுத்து மையாக அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் நரைமுடி கருப்பாகி விடும்.

### தலை முடி செழித்து வளர

வெந்தயத்தை ஊறவைத்து நன்கு அரைத்து தலையில் பேக் போல போட்டு ஊறிய பிறகு தலைக்கு குளித்தால் தலை முடி செழித்து வளரும்.

### பேன் தொல்லை நீங்க

- வசம்பை தண்ணீர் விட்டு அரைத்துத் தலையில் நன்றாகத் தேய்த்து ஊற வைக்க வேண்டும். பிறகு சாதாரண தண்ணீரில் தலையை நன்றாக அலசிவிடவும்.
- துளசி இலையை நன்றாக மையாக அரைத்து தலையில் தடவி சிறிது நேரம் ஊற வைக்க வேண்டும். பின் வெதுவெதுப்பான நீரில் தலையை கழுவினால் பேனெல்லாம் செத்து விழுந்து விடும் முடியும் நன்றாக வளரும்.

### கூந்தல் உதிர்வு

- தேங்காய்ப் பாலைத் தலையில் அரை மணி நேரம் ஊற வைத்துக் குளித்தால் முடி உதிர்வது நிற்கும். வாரம் ஒரு முறை இப்படியாக முடி உதிர்வது நிற்கின்ற வரை செய்ய வேண்டும்.
- அதிமதுரத்தை இடித்து எருமைப்பால் விட்டு நன்றாக அரைத்து தலையில் தேய்த்து வந்தாலும் குணம் தெரியும்.

### செம்பட்டை மறைய

முட்டை வெள்ளைக் கருவைத் தலையில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவி விடவேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வந்தால் செம்பட்டை மறையும். ●

# கவிதை சாரளம்

## வாழ்க..யூ எம் மருதமடு திருத்தாயே…!

கரடி, புலி வாழும் கானகம் தனில் எழுந்து வந்த – எம்
கானகம் தனில் எழுந்து வந்த – எம்
கானகச் செல்வியாம் மருதமடு திருத்தாயே…!
கரம் கூப்பி வணங்குகின்றோம்! வாழ்க…! வாழ்க…!

பாவிகள் எம் பாவம் போக்கிட
பரமனிடம் பரிந்துரைப்பவள் எம் தாய்…!
பரதேசிகள் நாம் வேண்டிடும் வரத்தினை
பரிவோடு பகிர்ந்தளிப்பவள் எம் தாய்…!



இளையோர் தம் வாழ்வினில்
இன்னல்கள் வந்தாலும்
இறைமகனை இறஞ்சுபவள் எம் தாய்…!
இளைத்து களைத்து நாம்
இன்னலுற்று நின்றாலும்
இருகரம் பிடித்து அணைத்தெடுப்பவள் எம் தாய்…!



கள்வரும் கயவரும் களவாடி நின்றாலும்
கனிவோடணைப்பவள் எம் தாய்…!
செல்வரும் சீமானும் செருக்குற்று வாழ்ந்தாலும்
சிறப்புறச் செய்பவள் எம் தாய்..!

பால்மணம் மாறாத பச்சிளம் குளந்தைக்கு
பால் கொடுத்து வளர்ப்பவள் எம் தாய்…!
பால் கொடுக்க ஒரு பச்சிளம் குழந்தை இல்லையே…! என
பாரில் தவிப்போர்க்கு பாலகனை கொடுப்பவள் எம் தாய்…!

அன்னையே.. தாயே! எம்மை அரவணைத்து கொள்ளம்மா…!
அனுதினமும் நாம் வாழ எம்மை கனிவோடு காத்திடம்மா…!
அருள் நிறை மாமரியே வாழ்க..! வாழ்கவே…!
இருள் போக்கி ஒளி கொடுக்கும்
புதுமை தாயே வாழ்க…! வாழியவே…!

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

*– திருமதி. மேரி. மெக்டலீன் ஜெயக்கெனடி, வேப்பங்குளம் –*

## சவால்களைச் சரித்திரமாக்க

முட்களின் நடுவே முகம் மலர்ந்து
பூத்துக் குலுங்கும் ரோஜா மலர்
வான் அதிர்வுகளைக் கிழித்துக் கொண்டு
ஆனந்தமாய்ப் பாடும் சிட்டுக் குருவி
வெம்மை வெடிப்புக்களினூடே
முளை விட்டெழுந்து நிற்கும் ஈச்ச மரம்
வற்றிய குட்டைகளில் துள்ளி விளையாடும்
குளத்து மீன்கள் கானல் நீரைக் கண்டு மகி
மந்தைக் கூட்டம்
உலகின் கனவுகளோடு உருண்டு எழும்
உதய சூரியன்
தேடி அலைந்து தேனெடுத்து
ஒன்றாய் உழைக்கும் தேனிக்கள்
கூவி அழைத்து கூடி உண்ணும்
காக்கைகள் கூட்டம்
மனிதா…!
இவற்றை விட – நீ
எவ்வளவோ மேலானவன்
ஊன்று கோல்களை உதறிவிட்டு
எழுந்து நில்!





## முகமூடிகள்



முகமூடிகளைக் களைந்து கொண்டு
நான் சிரிக்க முயல்கின்றேன்
வெறும் பற்களால் அல்ல
உள்ளத்தின் ஆழத்திலிருந்து
நான் பேச விரும்புகின்றேன்.
வெறும் சொற்களால் அல்ல
நான் பார்த்து இரசிக்க விரும்புகின்றேன்.
வர்ணம் பூசப்பட்ட வெளிவேடங்களை அல்ல
உண்டு மகிழ விரும்புகின்றேன்.
கலப்படம் கொண்ட உணவுகளை அல்ல
நான் விளையாட விரும்புகின்றேன்
ஒரு கையால் அணைத்துக் கொண்டு
மறு கையால் குத்தும் உறவுகளுடன் அல்ல
நான் கேட்க விரும்புகின்றேன்
தங்க முலாம் பூசப்பட்ட பசப்பு வார்த்தைகளை அல்ல
என் நிழலை பார்க்க விரும்புகின்றேன்
இளம்காலை வெய்யிலில் அல்ல
நான் தேட விளைகின்றேன்
மனிதன் என்று பெயர் கொண்ட
இயந்திரங்களை அல்ல.





## விடுமுறைகள்….

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

விடுமுறைகள் கடவுளோடும், மனிதரோடும் இருக்கின்ற அன்புப் பிணைப்பை உயிரூட்டம்பெறச் செய்வதற்கு வாய்ப்பாகவும் உள்ளன என்றுரைத்த திருத்தந்தை அன்றாட இறைவேண்டல்களைப் புறக்கணியாதீர்கள், ஞாயிறு திருப்பலியையும், மற்றவரோடு நேரம் செலவிடுவதையும் மறவாதீர்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

படைப்பின் அழகு எல்லாம்வல்லவரின் மகிமை படைத்தவரின் ஞானம் மற்றும் அவரின் பேரன்பு ஆகியவற்றைத் தியானியுங்கள் என்றும் போலந்து திருப்பயணிகளிடம் கூறிய திருத்தந்தை மறைக்கல்வியுரையில் கலந்துகொண்ட கடலில் காப்பாற்றப்பட்ட புலம்பெயர்ந்த சிறாரையும் பாசத்தோடு வாழ்த்தினார். ஏறத்தாழ 50பேர் Gregoretti கப்பலால் காப்பாற்றப்பட்டு அக்சீலியம் அமைப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

போலந்து நாட்டில் ஓகஸ்ட் 6ஆம் திகதி ஏறத்தாழ ஐந்தாயிரம் திருப்பயணிகள் 308வது வார்சா நடை திருப்பயணத்தைத் தொடங்கியுள்ளனர். தலைநகர் வார்சாவிலிருந்து 248 கிலோமீற்றர் தூர நடைபயணத்தைத் தொடங்கியுள்ள இப்பயணிகள் ஒன்பது நாட்கள் நடந்து ஓகஸ்ட் 14ஆம் திகதி செஸ்டகோவா யஸ்ன கோரா அன்னை மரியா திருத்தலத்தைச் சென்றடைவர். இப் பாதயாத்திரை திருப்பயணம் 1717ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தடையின்றி நடைபெற்று வருகின்றது. 1792ஆம் ஆண்டில் இவ்வாறு சென்ற அனைத்துத் திருப்பயணிகளும் ரஷ்யப் படைகளால் கொல்லப்பட்டனர். 1920ஆம் ஆண்டில் சோவியத் படைகள் வார்சாவை நெருங்கி வந்ததால் அப்போது திருப்பயணம் மேற்கொண்ட பயணிகள் பிரிந்து சென்று தனித்தனியாக யஸ்ன கோவா திருத்தலம் சென்றடைந்தனர் என்று சொல்லப்படுகின்றது.●

## தரணிக்குளம்…

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஆயரோடு திருப்பலியில் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. இராஜநாயகம் அடிகளார், அருட்பணி. றெஜிநோல்ட் அடிகளார், அருட்பணி. சந்தோஷ் அடிகளார், அருட்பணி. பெணி அடிகளார், அருட்பணி. சத்தியன் அடிகளார், அருட்பணி. செல்வராஜ் அடிகளார், அருட்பணி. அருன் அடிகளார், அருட்பணி. லன்சி பெர்னான்டஸ் அடிகளார், அருட்பணி. செபஸ்ரியன் அடிகளார், அருட்பணி. ப்ரேம ஆணந்த் அடிகளார், அருட்பணி. றொனால்ட் அடிகளார், அருட்பணி. அலெக்ஸ் அடிகளார், அருட்பணி. நீக்கிலஸ் அடிகளார், அருட்பணி. டலிமா அடிகளார், அருட்பணி. லக்ஸ்ரன் அடிகளார், அருட்பணி. ஜெறி அடிகளார், தரணிக்குளம் பங்குத்தந்தை அருட்பணி. ஆரோக்கியசாமி அடிகளார், ஆகியோர்கள் இனைந்து சிறப்பித்திருந்தார்கள்.●

## கணேசபுரம்….

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இப்பகுதிக்கான அருட்பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி. அன்ரனி சோசை அடிகளாரின் பணி ஆர்வத்தினாலும், ஆயராமுயற்சியினாலும், இவ் ஆலய மக்களின் பங்களிப்போடும், நன்கொடையாளர் ஒருவரின் உதவியோடும் இச் சிற்றாலயம் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.●

## மடுத்திருத்தலத்தில்…

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

திருப்பலியின் பொழுது மன்னார் மறைமாவட்ட ஆயர் தன் மறையுரையில் மீட்புப் பணியில் அன்னை மரியாவின் ஒத்துழைப்பு, அன்னை மரியாவின் சீடத்துவம், அன்னை மரியாளுக்கு நாட்டை அர்ப்பணிக்குமாறு ஆயர் பேரவை வேண்டுகோள், நீதி, நேர்மையுடனான பக்கசார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என மேற்கூறிய தலைப்புக்களில் இறைவார்த்தைகளைப் பகிர்ந்துகொண்டார். தொடர்ந்து திருத்தலத்திற்கு அன்னையின் ஆசீர் பெற வந்த அனைத்துப் பக்தர்களையும் இறை ஆசீர் நிறைந்த வார்த்தைகளால் வாழ்த்தி வரவேற்றார்.●

## தாழ்வுபாடு…

03ஆம் பக்கத் தொடர்ச்சி

நான்கு மாத காலமாக அருட்சகோதரிகள் மற்றும் மறை ஆசிரியர்கள் ஊடாக தயார்படுத்தப்பட்ட இவர்கள் ஆனிமாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒப்புரவு அருட்சாதனத்தை முதன் முதலாகப் பெற்றுக் கொண்டனர். மறுதினமான சனிக்கிழமை மாலையில் பங்குத்தந்தையின் வழிநடத்தலில் பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கான முதன்நன்மைத் திருப்பலி ஒத்திகை இடம்பெற்றது. இச் சிறார்களது எதிர்காலம் இயேசுவின் வழியில் சிறக்க வாழ்த்துகின்றோம்.●

## நற்செய்தி சொல்லால்….

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

மக்களால் கைவிடப்பட்ட மற்றும் ஒதுக்கிவைக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியாக நோக்கப்படும் இந்த இரந்துண்ணும் ஏழை மக்கள் ஏதாவது காசு போடுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் கோவில் வாசலில் காத்திருக்கின்றார். இவர் மீது தங்கள் பார்வையைத் திருப்பிய இயேசுவின் சீடர்களான பேதுருவும் யோவானும், பொருட்களை அல்ல மாறாக இறைவனுடைய ஆசீரை நோக்குவதற்கு அவரை நோக்கி அழைப்பு விடுக்கின்றனர். அவருக்குப் பொன்னையும், வெள்ளியையும் சீடர்கள் வழங்கவில்லை.

மாறாக கொடைகளுக்கெல்லாம் மிக உன்னதக் கொடையாகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாகக் கிடைக்கும் மீட்பை கொடையாக வழங்குகின்றனர். அவரோடு புதிய உறவை சீடர்கள் உருவாக்கிக் கொள்கின்றனர். இதைத்தான் இறைவனும் விரும்புகின்றார். மக்களிடையே காணப்படும் அன்புடன் கூடிய உறவில் தன்னை வெளிப்படுத்த ஆவல் கொள்கின்றார் இறைவன். ஊனமுற்றிருந்த ஒருவரைப் பிடித்துத் தூக்கிவிட்டு நடக்க வைத்ததில் உயிர்ப்பின் சாயலைக் காண்கின்றார் புனித ஜான் கிறிசோஸ்தம். உதவித் தேவைப்படுவோரைத் தேடிச் சென்று அவர்களைத் தூக்கிவிடவேண்டும் என்ற அழைப்பைப் பெற்றுள்ள திருஅவையின் அடையாளமாகவும் இப்புதுமை உள்ளது. புனிதர்கள் பேதுரு மற்றும் யோவானைப்போல் மற்றவர்களுக்கு உதவிபுரிய முன்வரும் நாம் உயிர்த்த இயேசுவுடன் நாம் கொண்டிருக்க வேண்டிய உறவின் தேவை குறித்தும் உணர்ந்தவர்களாகச் செயற்படுவோமாக என நிறைவு செய்து அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் வழங்கினார்.

## காத்தாங்குளம்…

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

கடந்த 28.07.2019 ஞாயிறு மாலை 4.30 மணிக்கு இவ் எழில்மிகு ஆலயம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டது. அபிஷேக திருப்பலியின் பொழுது மன்னார் மறைமாவட்ட ஆயர் தன் மறையுரையில் எவ்வாறு இவ் ஆலயம் அழகாக காட்சிதருகின்றதோஅதே போன்று உங்கள் ஆன்மீக வாழ்வும் இறைவனுக்கு அழகுற அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துப்பட இறைவார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்வில் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், துறவறத்தார், இறைமக்கள் எனப் பலரும் பங்கெடுத்தனர்.●

## வங்காலை….

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

நவநாட்களில் ஆயத்த வழிபாடுகளின் இறைவார்த்தைப் பகிர்வினை இந்தியாவில் டிவைன் தியான இல்ல அருட்பணியாளர் மிகச் சிறப்பாக இறைமக்களின் ஆன்மீக வாழ்வோடு இணைந்து வெளிப்படுத்தினார். இத் திருவிழாத்திருப்பலியின் பொழுது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தன் மறையுரையில் பங்கின் மேன்மை பற்றியும், அன்னை மரியாளின் வாழ்வில் புனித ஆனாளின் மகத்தான பங்களிப்புப் பற்றியும் இறைமக்களாக தற்காலத்தில் பாரம்பரிய கிறிஸ்தவ வாழ்வை வாழவேண்டியதன் அவசியத்தையும் பகிர்ந்து கொண்டார்.●

## படைப்பைப்…

11ஆம் பக்கத் தொடர்ச்சி.

நாடுகளின் பிரச்சனைகள் களையப்பட உதவிசெய்வதால் புலம்பெயர்வுகளை பெருமளவில் நிறுத்த முடியும் என்றும் திருத்தந்தை தெரிவித்தார். பூமியின் வளங்கள் அதிகப்படியாக சுரண்டப்படுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாளன்று வெளியான தகவலில் இவ்வாண்டுக்கு மறு உற்பத்திக்குத் தேவையான வளங்கள் அனைத்தையும் மனிதர் ஏற்கெனவே கரைத்துவிட்டனர் என்ற தகவல் அதிர்ச்சியைக் கொடுத்தது என்ற திருத்தந்தை அமேசன் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் மிகவும் அவசியமானது என்று கூறினார். அமேசன் இப்பூமிக்கோளத்தின் வருங்காலத்திற்கு மிகவும் முக்கியமானது. நாம் சுவாசிக்கும் ஒட்சிசனில் பெரும்பகுதி அங்கிருந்தே வருகின்றது என்றுரைத்த திருத்தந்தை காடுகளை அழிப்பது என்பது மனித சமுதாயத்தைக் கொலை செய்வதாகும் என்றும் தெரிவித்தார்.●

## மட்டக்களப்பு…

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்பணியாளர்களான பங்குத்தந்தை திருச்செல்வம் அடிகளார், T. லோறன்ஸ் (SJ) அடிகளார், நவாஜி அடிகளார், கிறைட்டன் அவுட்ஸ்கோர்ன் அடிகளார் ஆகியோரும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து ஆலய முன்றலில் அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாத நிகழ்வுடன் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியிறக்கப்பட்டு நிறைவு பெற்றது. திருவிழாவில் பெருமளவான இறைமக்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். திருவிழாவில் கலந்து சிறப்பித்த அனைவரும் அன்னையின் அருள் பெற்றுச் சென்றனர்.●

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.205

யோபு (அதிகாரம் 16 முதல் 24 முடிய)

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | 03 | | | | | | |
| | | ✶ | | | | 04 | ✶ | 05 | | |
| | 06 | ✶ | 07 | | | | ✶ | 08 | | |
| 09 | | | | | | | | | | 10 |
| | 11 | | | | 12 | | | | 13 | |
| | | | | | 14 | | | | | |
| 15 | | ✶ | 16 | | | | | | 17 | |
| | | 18 | | | | ✶ | | | 19 | |
| | 20 | | | | | | | 21 | ✶ | |
| | ✶ | | | 22 | | | | | | 23 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. குற்றமற்றோர் .............. இல்லார்மேல் சீற்றமடைகின்றார்.
3. என் வீட்டு விருந்தினரும், என் பணிப்பெண்களும் என்னை ...................க் கருதினர்.
5. எனவே அவர்களது ............... நின்று நிலைக்காது.
8. நீர் உமது ............... ச் செம்மைப்படுத்துவது அவர்க்கு நன்மை பயக்குமா?
9. என் சதையை நீங்கள் ................. போதாதா?
11. இதோ அவர்களின் .................. அவர்களின் கையில் இல்லை.
14. அவர்கள் தம்புரு, சுர ............. இசைத்துப் பாடுகின்றனர்.
15. என் ............. வழக்குரைகளால் நிரப்புவேன்.

### மேலிருந்து கீழ்

1. ஒளி .................... அண்மையில் உளது என்கின்றனர்.
2. பட்டினி அவர்களின் ................. விழுங்கிவிடும்.
3. தாங்கள் கட்டாத வீட்டை அவர்கள் ......................க் கொண்டனர். (இறுதி எழுத்து 4வதாக உள்ளது)
4. ஆனால் ..................வில் அவர்களை வீழ்த்திடுமே.
10. .................... வழியினின்று தள்ளுகின்றனர்.
14. அவர்கள் கொடுமை ................... முறிந்துபோம் (3வது எழுத்து இறுதியாக உள்ளது)
15. அவர் எனக்கு என்ன ................. கூறுவார் என அறிந்து கொள்வேன்.
16. எல்லாம் வல்லவரே உமக்குப் ...............வும், வெள்ளியாகவும், வலிமையாகவும் திகழ்வார்.
18. ஆனால் அவர் ஒரு ............. எடுத்தால் யாரால் மாற்றமுடியும்.

### வலமிருந்து இடம்

2. அவர்களின் கால்களே அவர்களை .................. தள்ளும்.
3. மின்னும் ..................... முனை பிச்சியிலிருந்து வெளிவரும்.
10. ஏனெனில் அவர்கள் ................ ஒடுக்கி இல்லாதவராக்கினர்.
13. வேறு சிலர் கசந்த உள்ளத்துடன் ................................யைச் சுவைக்காதவராய்ச் சாகின்றனர்.
14. மண்ணகம் அவர்களை .............. எழுந்து நிற்கும். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
17. அவர்களின் .............. அளவேயில்லை. (2வது எழுத்து 1வது எழுத்துக்குப் பின்னே உள்ளது)
21. இவர்கள் அதன் ............ நில்லார்.
23. வலப்புறம் ............ நான் அவரைப் பார்த்தேனில்லை.

### கீழிருந்து மேல்

6. இரும்புக்கருவியாலும், ஈயத்தாலும் என்றென்றும் அவர்கள் .................. பொறிக்கப்பட வேண்டும் (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
7. வலிய மனிதராகிய உமக்கு ................ சொந்தமாயிற்று. (2வது எழுத்து 1வது எழுத்துக்குக் கீழே உள்ளது)
12. மணிமுடியை என் .................. அகற்றினார்.
15. மாறாக ........... நீங்களே அஞ்ச வேண்டும்.
16. இல்லையேல் நான் ஏன் .............. இழக்கக்கூடாது?
20. ஆயினும் நான் போகும் .................... அவர் அறிவார்.
22. ...................... விண்ணகத்தில் கடவுள் இல்லையா? (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
23. ........................ பிழிந்தும் தாகத்தோடு இருக்கின்றனர்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 203 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
A. றொஷாணி,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடு.



**இரண்டாம் பரிசு:**
ம. கொண்சலா,
நொச்சிகுளம்,
உயிலங்குளம்.

**மூன்றாம் பரிசு:**
ச. எவறெஸ்ரா
எழுத்தூர்,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 96 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 67 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 203ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருகோணமலை
02. I. இருதயமேரி, சிதம்பரபுரம், ஆசிகுளம்
03. கே. துளசிகா, ஆசிகுளம், வவுனியா
04. புஸ்பாசேவியர், உவர்மலை, திருகோணமலை
05. ஆன் பிரிந்தா, பாசையூர், யாழ்ப்பாணம்
06. D.P. சாறா மாவிலங்கேணி, முருங்கன்
07. P. அபிஷா மாவிலங்கேணி, முருங்கன்.
08. T. சாம்சன் சின்னக்கடை, மன்னார்.
09. M. பிளண்ரீனா, கன்னியர்மடவீதி, மன்னார்
10. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்
11. அ. கில்டா, கட்டையடம்பன், மடு வீதி
12. ச. ஜெயா, எழுத்தூர், மன்னார்
13. J. டிலோஷன், நொச்சிக்குளம், உயிலங்குளம்
14. J.R. கனிஸ்ரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்
15. க. மடோனா, ஆசிகுளம், வவுனியா
16. செல்வி. வயலட் யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்
17. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு
18. V. டிவைனா குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு
19. கு. டிறோஜினி, தேவன்பிட்டி
20. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை
21. ல. லகுஜன் லோகு, 3ஆம் வட்டாரம், பேசாலை
22. கெ. ஜெபியோன், கல்நாட்டி, முருங்கன்
23. பி. பிறின்சி லியோன், சிலாவத்துறை
24. அன்ரன் சறோண் எமில்நகர், மன்னார்
25. ஜீ. பெல்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை
26. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை
27. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்
28. B. சரணிக்கா, சாந்திபுரம், மன்னார்
29. A. துஷாந்தி பியறினா வாஸ், பேசாலை
30. அ. றஞ்சினி, செபஸ்தியம்மா, நானாட்டான்
31. அ. ஜஸ்மின் ஷறோன் ஆவணம், நானாட்டான்
32. பு. லோன்சன், மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி
33. யோ. மேரி றெசிற்றா குரூஸ், 1ஆம் வட்டாரம், வங்காலை
34. ஜீன்போள், லக்மினி குரூஸ், ஆனாள்நகர், வங்காலை
35. K. றொஸ்லின், இசைமாலைத்தாழ்வு, கற்கிடந்தகுளம்
36. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி
37. S. வரதன் குரூஸ், வளனார்புரம், தாழ்வுபாடு
38. பா. நிசாந்தினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்
39. செ. மரியறூபன், குளக்கட்டு வீதி, அடம்பன்
40. திருசாந் டிலிசன் அக்ஷயன், இத்திக்கண்டல், அடம்பன்
41. சி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான், மடு
42. ச. டவ்ஷன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்
43. றபேக்கா பற்றிக், சின்னக்கடை, மன்னார்
44. ம. அன்ரன், பெரியகமம், மன்னார்
45. K. ஆனந்தன், அச்சுவேலி, யாழ்ப்பாணம்
46. ச. மரியதாஸ், கல்நாட்டி, முருங்கன்
47. J. அனற், சவேரியார்புரம், சிலாவத்துறை
48. அ. சித்திரா, வளனார்புரம், தாழ்வுபாடு
49. நி. கபிஷன், கீரி, மன்னார்
50. க. நியோமிகா, எழுவைதீவு, யாழ்ப்பாணம்

## விசுவாச வாழ்வு...

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

நாம் எப்போதும் நம் இடைக்கச்சையை இறுகக் கட்டியவர்களாக எந்நேரத்திலும் பயணத்தைத் தொடங்குவதற்குத் தயாராக இருப்பவர்களாகச் செயற்படவேண்டும் என்ற அழைப்பை முன்வைத்த திருத்தந்தை சுகம் நிறைந்த இடத்தில் உறைவதைக் கைவிட்டு இறைவன் காட்டும் வழியில் செல்லவேண்டியதை இன்றைய நற்செய்தியில் காண்கின்றோம் என்றார்.

விசுவாச வாழ்வு என்பது தேங்கிப்போன ஒன்றல்ல மாறாக அது ஒரு தொடர்பயணம் என்பதை இறைவனில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் அறிவர் என்பதையும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இறை விருப்பத்திற்கிணங்கி பயணம் மேற்கொள்ள எப்போதும் தயாராக இருப்பது முதல் நிலை என்றால் இரண்டாவது நிலை என்பது விளக்குகளை எப்போதும் பிரகாசமாக வைத்திருப்பதாகும் என தன் மூவேளை செப உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நம் செபத்தின் வழியாக இயேசுவுடன் கொள்ளும் உறவால் இந்த விளக்குகள் மீண்டும், மீண்டும் ஒளிர்வதற்குத் தேவையான எண்ணெயைப் பெறுகின்றன என உரைத்தார்.

மறுவுலக வாழ்வு நோக்கிய நம் பயணத்தில் நம் அனைத்துத் திறமைகளும் பலன்தரும் வகையில் நாம் செயற்பட உதவ வேண்டும் என்பதையும் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விழிப்புடன் இருக்கும் ஒவ்வொரு பணியாளரும் வீட்டு உரிமையாளரால் பணிவிடை செய்யப்படுவதை இன்றைய வாசகத்தில் காணும் நாம் இறைவனும் இதையே பின்பற்றுவதைக் காணும் பேறைப் பெறுவோம் என உரைத்தார்.●

## இறைமீட்பர்....

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்சகோதரி. டியூரின் தர்ஷனி பெரேரா அவர்கள் திரு.திருமதி. வின்சன் டியூரின் பெரேரா மரியாள் விக்ரோறியாவின் ஆறாவது பிள்ளையாய் மளுவராயர் கட்டையடம்பன் கிராமத்தில் இறை அருளால் பிறந்தார். ஆரம்பக்கல்வியை கட்டையடம்பன் றோ.க.த.க பாடசாலையிலும், தொடர்ந்து முருங்கனிலும் கற்று தனது உயர் கல்வியை வவுனியா கல்வியியற் கல்லூரியில் நிறைவு செய்தார். 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் 02ஆம் திகதி இறை மீட்பர் கன்னியர் துறவறசபையில் துறவற உருவாக்கமடத்தில் இணைந்து கொண்டார். கொழும்பு, கண்டி அம்பிட்டிய இறைமீட்பர் சபை மடங்களில் தனது ஆரம்ப உருவாக்கப் பயிற்சிகளைப் பெற்று 2010ஆம் ஆண்டு தனது முதல் அர்ப்பணத்தை பெற்றுக்கொண்டார். அதன்பின் வவுனியா கல்வியியற் கல்லூரியில் மூன்று ஆண்டுகள் கற்றபின் தனது ஆசிரியப் பணியை கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்தார். அதன்பின் பணிமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் மண்டைதீவு றோ.க.த.க பாடசாலையில் ஆசிரியர் பணியினையும், பங்கில் இறைபணியினையும் தற்பொழுது ஆற்றிவருகின்றார்.●

## கிறிஸ்தவ....

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

திருத்தொண்டரும், மறைசாட்சியுமான புனித லோறன்ஸ் திருவிழாவான ஓகஸ்ட் 10ஆம் திகதி கிறிஸ்தவ மறைசாட்சியம் பற்றி தன் டுவிட்டர் செய்தியில் இவ்வாறு பதிவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். உரோம் நகரில் தொடக்ககால கிறிஸ்தவர்களுக்கு முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகள் சவால் நிறைந்ததாய் இருந்தன. அப்போதைய உரோமைப் பேரரசர் வலேரியன் அனைத்துக் கிறிஸ்தவ ஆயர்கள், அருட்பணியாளர்கள் மற்றும் திருத்தொண்டர்களைக் கைதுசெய்து கொலை செய்யுமாறு ஆணையிட்டார். கி.பி. 258ஆம் ஆண்டு ஓகஸ்ட் 6ஆம் திகதி திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த திருத்தந்தை 2ஆம் சிக்ஸ்துஸ் அவர்கள் கொலை செய்யப்பட்டார். அப்போது திருத்தொண்டராகப் பணியாற்றிய லோறன்ஸ் அவர்களும் கைது செய்யப்பட்டார். திருஅவையின் சொத்துக்கள் அனைத்தும் லோறன்ஸ் அவர்களிடம் இருப்பதை அறிந்த வலேரியன் அவற்றை மூன்று நாட்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் லோறன்ஸ் அவர்களை விடுதலை செய்தான். விடுதலையான லோறன்ஸ் அவர்களும் திருஅவையின் சொத்துக்கள் அனைத்தையும் விற்று ஏழைகளுக்கு வழங்கினார். ஓகஸ்ட் 10ஆம் திகதி பேரரசர் வலேரியன் திருஅவையின் சொத்துக்கள் எங்கே என லோறன்சிடம் கேட்டபோது தனக்குப்பின் நின்றுகொண்டிருந்த ஆயிரக்கணக்கான ஏழைகளைச் சுட்டிக்காட்டினார். இதனால் கடுஞ்சினமடைந்த வலேரியன் லோறன்ஸ் அவர்களைப் பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதனடியில் தீ மூட்டும்படி ஆணையிட்டான். புனித லோறன்ஸ் அவர்கள் சுடர்விட்டெரிந்த நெருப்பின் கொடுமையின் மத்தியிலும் இறைவனைப் புகழ்ந்தார். பின்னர் அவர் அங்கு நின்ற அதிகாரியிடம் எனது உடல் நன்றாய் வெந்திருக்கின்றது நீர் எடுத்து உண்ணலாம் என்று சொல்லி மறைசாட்சி மரணத்தைத் தழுவினார்.

உரோமையில் வெரோனா பொதுக்கல்லறைத் தோட்டப் பகுதியில் பேரரசர் கொன்ஸ்ரன்டைன் அவர்கள் மறைசாட்சி புனித லோறன்ஸ் அவர்களுக்கு ஆலயம் ஒன்றை எழுப்பினார். அது பின்னாளில் மிக அழகான பசிலிக்காவாக எழுப்பப்பட்டது.●

## இளையோர் கனவு...

11ஆம் பக்கத் தொடர்ச்சி.

உயரிய மகிமைக்கு தன்னைத் திறக்கும் விடியல்களைக் கொண்ட கல்வி இளையோர் கனவு காண்பதற்கும் அழகு நிறைந்த உலகை உருவாக்கவும் உதவுகின்றது என்ற சொற்கள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாக வெளியிடப்பட்டன. மேலும் திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தி ‘எளிமைத்தன்மையில் நம்மை முற்றிலுமாக ஒப்படைத்து இறைவிருப்பத்தில் முழுமையான நம்பிக்கை வைத்து விளக்குகளை எரியும்படிச் செய்யவேண்டும் என நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கின்றது என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். அவ்வாறு செய்வதன் வழியாக இரவின் இருளை நம்மால் ஒளியூட்ட முடியும் என்ற சொற்களை தன் ஞாயிறு டுவிட்டர் செய்தியில் பதிவுசெய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

## மொசாம்பிக்...

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டபோது RENAMO அமைப்பில் கடைசியாக இருந்த போராளிகள் தங்களின் ஆயுதங்களை ஒப்படைத்தனர். இந்த ஒப்பந்தத்தை உறுதிசெய்வதாய் மொசாம்பிக் தலைநகர் மப்புத்தோ அமைதி வளாகத்தில் ஓகஸ்ட் 6ஆம் திகதி இவ்விரு தலைவர்களும் மீண்டும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில் தென்னாபிரிக்க அரசுத்தலைவர் Cyril Ramaphosa, ருவாண்டா அரசுத்தலைவர் Paul Kagame உள்ளிட்ட பல்வேறு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் உரையாற்றிய Momade அவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வன்முறையை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற மனநிலையைப் புதைத்துவிட்டதாக நாட்டு மக்களுக்கும், உலகுக்கும் அறிவிப்பதாகக் கூறினார்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக ஆட்சியிலுள்ள முன்னாள் மார்க்சிச கொரில்லா அமைப்பான மொசாம்பிக் விடுதலை அமைப்பும், RENAMO அமைப்பும் அந்நாட்டில் 1977ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற இரத்தம் சிந்திய உள்நாட்டுப் போருக்குக் காரணிகளாகும். இப்போரில் ஏறத்தாழ பத்து இலட்சம் பேர் இறந்திருப்பது குறிப்பிடத்தக்கது.●

# நீங்காத நினைவுகள்

## 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 05 1940



உதிர்வு 22 08 2016

### திரு. அந்தோனி சூசை
(பெரியமுறிப்பு, பெரியகுஞ்சுக்குளம்)

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான். 11:25)**

ஆண்டுகள் மூன்று கடந்துவிட்டன. உம் பிரிவின் துயரம் எம்மில் மறையவில்லை. எத்தனை யுகங்கள் கடந்தாலும் உம்மீது வைத்த பாசம் என்றும் மாறாது ஐயா. கனவில் கூட நினைக்கவில்லை ஐயா மிகவிரைவில் காலம் உம்மை பிரிக்கும் என்று. உம் நேச உறவுகளை தவிக்கவிட்டு எம்மவர்க்காய் பரிந்துரைக்க விரைந்து விட்டீரோ! ஆண்டுகள் தான் மூன்றானாலும் உம் உருவம் எம்மை விட்டு அகலவில்லை. நீங்காத உம் நினைவுகளோடு உம் ஆன்மா இறை அமைதிபெற வேண்டுகின்றோம். இறைவனை

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு, 9,1/2 ஆண்டு நினைவஞ்சலி





ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

திரினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

***"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது."***

பெற்றெடுத்த தெய்வங்களே! பேணி வளர்த்த தீபங்களே!
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் - உங்கள்
அன்பு உருவம் மறைவதில்லையே.
ஏது குறை வைத்தீர்கள் ஏங்குவதற்கு
எல்லாச் செல்வங்களும் எம்மிடத்தில்
சேர வைத்து நாம் நல்வழிகளால் நானிலத்தில் வாழ்வதற்கு
எல்லையில்லாச் சிறப்புக்களை ஈர்ந்தவர்கள் நீங்கள் தானே!

***உம் பிரிவால் துயருறும்:***
***சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.***
***தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, லண்டன்***

## 20ஆம், ஆண்டு, 01ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்





கபிரியேல் கிறிஸ்தோகு.

கிறிஸ்தோகு அந்தோனியாள்

(கொக்குப்படையான். சிலாவத்துறை)

மலர்வு : 19 - 06 - 1932
உதிர்வு : 05 - 09 - 1999

மலர்வு : 09 - 04 - 1934
உதிர்வு : 20 - 08 - 2018

**"கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்"**

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், பாசமாய், நேசமாய் எம்மை அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த அம்மா, அப்பாவே!
நீங்கள் விட்டுச்சென்ற அடிச்சுவட்டில்
நாங்கள் நடைபயில எமக்காக மன்றாடுங்கள்.
உங்கள் ஆன்மா ஆண்டவரில் அமைதிபெற
உளமார வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: மகன் தேவா (மன்னார்)

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 10 1953



உதிர்வு 22 08 2015

### திருமதி. ஆரோக்கியம் மரியை றெவ்வல்
(ஆயுள்வேத வைத்தியர் - வங்காலை)

**"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"**

மண்ணக வாழ்வு போதுமென்று
விண்ணகம் வேண்டு மென்று
எம்மை விட்டுச் சென்ற அம்மாவே
நீர் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உம் நினைவலைகள் என்றும் பிரிவதில்லை
உமது இன்னுயிர் இறை சந்நிதியில்
இளைப்பாற இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 18 07 1949



உதிர்வு 13 07 2019

### திரு. அ. டொனால்ட் தேவதாசன் அல்மேடா
(பப்பா - முருங்கன் பிட்டி, முருங்கன்)

அறிவை ஊட்டும் தந்தையாய், அன்பு கொண்ட கணவனாய்,
அவனி போற்றும் மனிதனாய், அடக்கமான புதல்வனாய்,
கனிவு கொண்ட பேச்சும், கருணை மிகுந்த பார்வையும்,
கடவுளில் பக்தியும் கொண்டது. காலனுக்கும் பொறுக்கவில்லை.
சிரித்த உன் வதனம் எம் சிந்தனையை சுண்டி இழுக்கும்
சிந்தும் உன் சிரிப்பினிலே சிந்தை மகிழும் யாவருக்கும்
பப்பா என்று அன்போடு நாம் அழைக்க - எங்கே நீ
சென்று விட்டாய் எங்களிடம் சொல்லாமல்
பரமனின் பாதத்தில் நிம்மதியாய் நீ உறங்கு.
உன் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம் இறைவனையே.

**பிரிவால் நினைந்துருகும்,**
தாய், மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் நண்பர்கள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 12 1931



உதிர்வு 16 08 2018

### திருமதி. செல்லத்துரை திரேசம்மா
(நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்)

அன்பின் திரு உருவே! பாசத்தின் இலக்கணமே!
எங்கள் அன்பான தாயே! ஓராண்டு கடந்து போனாலும்
நீங்காது உமது நினைவலைகள்
நீங்கள் என்றும் எம்மோடு எம் மத்தியில்
வாழ்ந்து கொண்டே இருக்கின்றீர்கள் அம்மா!
ஆறாத துயரத்தில் ஆழ்த்திவிட்டு
உம் பதினொரு பிள்ளைச் செல்வங்களையும் துயரத்தில்
ஆழ்த்திச் சென்றீரே. உங்கள் ஆன்மா இறைவனிடம்
அமைதிபெற நித்தமும் நாம் வேண்டிடுவோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## ம.து.ம.ச வின் சேவைகள்

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

வண.பிதா. அ.சேவியர் குரூஸ், ம.து.ம.ச தலைவர் தமது உரையில் கடந்த 10 வருடங்களாக லண்டன் TCA, இச்சங்க மூலம் 71 வறிய மாணவர்களுக்கும், பெற்றோரை இழந்த மாணவர்களுக்கும் உதவி செய்து வருகின்றது. இவர்களில் ஒரு சில சிறார்கள் 05ஆம் ஆண்டு புலமைப்பரிசிலும் மற்றும் கல்விப்பொதுத் தராதர சாதாரண உயர்தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதுடன், மேலும் குறிப்பிட்ட தொகையினர் சில பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இச்சங்கத்தின் ஓர் ஆண்டு பொதுக்கூட்டத்திற்குத் தான் கலந்துக்கொண்டு மன்னார் மக்கள் சார்பில் பாராட்டியதாகத் தலைவர் கூறினார்.● *தகவல் - திரு.பீற்றர் சின்கிலேயர்*

## தலைமன்னாரில்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் வழங்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், அருட்சகோதர, சகோதரிகள், இறைமக்கள், சார்பான நன்றிகளையும் பாராட்டுக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.●

## எ. மோகன்ராஜ்...

02ஆம் பக்கத் தொடர்ச்சி.

இடப்பெயர்வோடு 1996இல் வெளிநாடு சென்ற இவர் நோர்வே நாட்டில் 4 ஆண்டுகளும், இங்கிலாந்தில் 10 ஆண்டுகளும் வேலை செய்து தன் குடும்பப் பொறுப்புக்களை நிறைவு செய்தார். இச் சுமைகள் மத்தியிலும் ஏற்கெனவே தன்னுள் வேர்விட்டிருந்த இறை அழைப்பின் குரலை இவர் மறந்துவிடவில்லை. ஈற்றில் குருவாக வரவேண்டும் என உறுதிபூண்ட இவர் போர்ட்ஸ்மௌத் மறைமாவட்ட குருமடத்தில் 2010இல் தன்னை இணைத்துக் கொண்டார். 23.07.2018இல் திருத்தொண்டராக அபிஷேகம் செய்யப்பட்ட இவர் 20.07.2019அன்று இறைவனின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் தனது முதல் நன்றித்திருப்பலியை கடந்த 17.08.2019 அன்று யாழ். நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் தன் உறவுகளோடு இணைந்து ஒப்புக்கொடுத்தார். இப் புதிய குருவை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.●

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம். *- மன்னா நிர்வாகம் -*

## ஆசிய கிறிஸ்தவ...

05ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஆசியக் கண்டத்தின் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதற்கு நீதி, அமைதி மற்றும் படைப்பைப் பாதுகாப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்று வலியுறுத்திய பேராயர் Simarmata அவர்கள் படைப்புப் பணி, மீட்புப் பணியிலிருந்து பிரிக்க முடியாதது என்று கூறினார். 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஆசிய கிறிஸ்தவ பெண்களுக்கென மாநாடு நடத்தப்படும் என்று ஆசிய கிறிஸ்தவ அவையின் பொதுச் செயலர் அறிவித்தார்.●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்:**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 19 - 09 - 1997
உதிர்வு : 01 - 07 - 2019

**“படைகளின் ஆண்டவரே - உமது உறைவிடம் எத்துணை அருமையானது” (தி.பா.84.1)**

### செல்வன். கா. கார்லின் டயஸ் (ஜேம்ஸ்லின்)

(தலைமன்னார், கிராமம்)

தாயின் மடியில் தவழ்ந்து விளையாடி, தாயின் பாசத்தோடு வளர்ந்து, அக்காமார் இருவருடன் அன்பாய் பாசமாய் வாழ்ந்து, உன் இரு மருமக்களுடன் கொஞ்சிக் குலாவி செல்லம் பொழிந்து ஓடி விளையாடித் திரிந்த மகனே கார்லின்! அப்பாவின் மட்டில் திடீரென உனது மனம் மாறியது ஏனோ? உன் அப்பாவுடன் ஒரு மாதமளவாக நண்பனாகத், தோழனாக, காலை மாலை வேளையிலே இணை பிரியாமல், நடந்து திரிந்தது ஏனோ? எனக்குப் புரியவில்லை. உன் இறுதி நேரம் நான் தனியாகத் தவிக்கின்றேன். உன் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

## இல்லற வாழ்வில் 60வது ஆண்டு வைரவிழா வாழ்த்து!



### திரு. திருமதி. நீக்கிலான் சூசை அன்னம்மா

(குமானாயங்குளம், ஆக்காட்டிவெளி)

**1959.08.19 2019.08.19**

கருத்தொருமித்த தம்பதியராய்,
சுற்றம் வியக்கும் வாழ்வை
காண்பீர். உதாரணத்
தம்பதியராய், ஊர் போற்ற,
உறவும் போற்ற, இணைபிரியாத
வாழ்வினிலே
நூற்றாண்டு காலம்
வாழ்ந்திடவே உளம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 30 12 1926 — உதிர்வு: 22 08 2017



### திருமதி. யாகப்பு திரேசம்மா

(விடத்தல்தீவு, தோட்டவெளி)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் பாசத்தின் மகுடமாய், எம் குடும்பத்தின் சுடர் விளக்காய் இகமதில் வாழ்ந்த எம் இனிய அம்மாவே! இரக்கமும், கருணையும் இதயாய்க் கொண்டு பகிர்வும் பாசமும் பண்பாய் அமைந்த அகல் விளக்கே அம்மாவே! இறை பக்தியுடன் கூடிய நல் ஒழுக்கத்துடன் இகமதில் நாம் வாழ வழிசமைத்த அம்மாவே.! உம் புன்னகை காட்டாமல் கண் விழி மூடிவிட்டாய்! உம் பிள்ளைகள் யாம் புழுவாய்த் துடிக்கின்றோம். எம் கண்களில் நீர் பனிக்க கடவுளின் இல்லத்தில் உம்ஆன்மா இளைப்பாற பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** பிள்ளைகள்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 06 1954 — உதிர்வு: 20 08 2018



### திருமதி. கிறிஸ்ரீன் தேக்லா குரூஸ்

(பேசாலை)

ஓராண்டு கடந்து விட்டன. உம் பிரிவின் துயரோ எம்மில்
மறையவில்லை. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவுகள் என்றும் எங்களுடன் ஊசலாடுகின்றது.
விதி செய்த சதியால் நீங்கள் இங்கு இல்லை.
நாங்கள் எங்கே போவோம் உங்கள் மடிசாய
உம் நற்செயல் கூர்ந்து இறைவன் அமைதியில் இளைப்பாறச்
செய்வாராக உம் ஆன்மா இறைவனில் அமைதி பெற
உமக்காய் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 09 02 1946 — உதிர்வு: 26 08 1999



### திரு. மிக்கேல் தேவதாஸ் குலாஸ்

(பரமானந்தம் – 1ம் வட்டாரம், வங்காலை)

ஆண்டுகள் இருபது கரைந்து மறைந்தன. ஆயினும் நீண்டு செல்லும் உங்கள் இனிய நினைவுகளால் எமது உள்ளங்கள் நிறைந்தன. மாண்டார் மீண்டதில்லை. உலகளியதி இது. ஆனால் நீங்கள் மாளவில்லை எம்மை சூழ நிற்கின்றீர்கள். ஆழமாக இறைவனில் நீங்கள் கொண்ட விசுவாசத்தால் வளமான வாழ்வு தந்து எம்மை வாழவைக்கின்றீர்கள் உள்ளத்தில் உறைந்து நிற்கும் உங்கள் பூரித்த முகத்தில் முத்தங்கள் பதிகின்றோம். வள்ளலாம் இறைவன் பாதம் அமைதிகொள்ள இறைவனையே துதிக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 13 03 1953 — உதிர்வு: 19 08 2017



### திருமதி. அருளானந்தம் பிளசம்

(பெரியபண்டிவிரிச்சான், மடு)

**“உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்”**

எங்கள் இதயங்களில் நீங்காமல்
இடம் பெற்ற எங்கள் ஆசையம்மாவே
நீரோ பரலோகத்தில் பரமன் அடியில்
நாமோ இங்கு துயரத்தின் மடியில்
உங்கள் பிரிவுத்துயரம் மறையாது
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனிடத்தில் மன்றாடுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 05 1933 — உதிர்வு: 04 08 2018



### திருமதி. திருச்செல்வம் சவிரியாச்சி (ராசம்)

(காத்தான்குளம், நானாட்டான்)

அன்புக்கு அன்னையாய், பண்புக்குப் பவளமாய்
பாரினிலே எம்மைப் பக்குவமாய் வாழவைத்த தெய்வமே
எங்கள் குடும்ப மங்கள விளக்கே,
உங்கள் ஒளி என்றும் மங்காதம்மா.
நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு ஆனாலும்,
எமது உள்ளங்களில் என்றும் வாழ்கின்றீர்கள் - என்னும்
மறவோம் எம் பாசமிகு அம்மாவை,
உங்கள் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற - யாம்
அனைவரும் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 01 1928 — உதிர்வு: 13 08 2015



### திரு. ஞானப்பிரகாசம் சூசைமுத்து

(பிறப்பிடம்: முல்லைத்தீவு, வதிவிடம்: மன்னார்)

அன்பு அப்பா! கடந்த 13.08.2015இல் நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து இரண்டு வருடங்கள் ஆனாலும், உங்கள் அருமை இழந்து தவிக்கின்றோம். அப்பா! மௌனம் உங்கள் தாய் மொழி அல்லவே! உங்கள் சிம்மக்குரலை எம்மருகில் கேட்காவிடினும், நீங்கள் எங்கும் சென்று விடவில்லை என்ற உணர்வு எம்மிடம் உள்ளது. ஆன்மீகக் காரியங்களில் உங்களது அக்கறையும், கரிசனையும் அளப்பரியது. நோயென்று படுக்காது, யாரையுமே வருத்தாது, அமைதியில் இளைப்பாறிட, எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு நல்ல மரணத்தைக் கொடுத்தருளினார். உங்களது ஆன்மா இறை சந்நிதியில் இளைப்பாறிட செபிக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**